முன்னுரை.

உலகந்தோன்றின நாள் தொடங்கி கடலுக்கு இரையாகாமல் கவினுற்று விளங்குவது நம் தமிழ் நாடு. புறநாட்டுப்படைகளுக்குப் புறங்கொடுத்து ஒழியாமல் இன்றும் நின்று விளங்குவது நம் தமிழ் நாடு. மக்கள் தோன்றிய காலந்தொட்டு இந்நாட்டில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். முற்காலத்தில் மக்கள், உடுக்க உடையும், உறங்கக் குடிசையுமின்றி அலைந்து திரிந்தனர். பின்னர் இறைச்சியையுண்டும், தோலைப் போர்த்தியும் அவர்கள் சிலகாலம் அலைந்தனர். அதன் பின்னர் படிப்படியாய் உயர்ந்து, உலகப்பொருள்களின் உண்மைச் சக்தியைச் சிறிது சிறிதாக உணர்ந்து, நிலத்தில் விரைந்து ஓடும் நீராவி வண்டியையும், கடலிற் கடிதிற் செல்லுங் கலங்களையும், விண்ணிற் பறக்கும் விமானங்களையும் அமைத்து, அவைகளின் வாயிலாக இன்பம் நுகர்ந்து வருகின்றனர். இவைபோன்ற மக்கள் வாழ்க்கையின் பல படிகளையும் கண்டறிந்தது நம் தமிழ் உலகம். இவ்வாறு காலங்கண்ட தமிழர் சரித்திரத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. அவற்றுள் முதற்பகுதி, படைப்புக் காலந்தொட்டு பல்லவர் தென்னாடு புகுந்ததுவரையில் உள்ள காலமாகும். இக்காலத்தின் தொடக்கத்தில் மக்கள் வழவழப்பில்லாத கற்கருவிகளை வழங்கி வந்தார்கள். இந்நிலையில் லட்சக்

கணக்கான ஆண்டுகளைக் கழித்தனர். பின்பு அக்கருவிகளை வழவழப்பாய்த் தேய்த்து பல ஆயிரம் ஆண்டுகள் வரையில் வழங்கி வந்தார்கள். பின்னர் மக்கள் கல்லை ஒழித்துவிட்டு உலோகத்தைக் கொண்டு உபயோகத்திற்கேற்ற கருவிகளைச் செய்தனர். அவ் வுலோகந்தான் இரும்பாகும். இரும்புக்கருவிகளைக் கொண்டு வாழ்க்கை நடத்திய காலத்தை இருப்புக் கருவிக் காலம் என்பர். இக்கருவிகள் பன்னூறு வருஷ காலமளவு வழக்கிலிருந்தன. காலங்கழியக் கழிய மக்கள் மேலும் மேலும் உயர்நிலையுற்றனர். சேர, சோழ, பாண்டியர் என்னும் மும்முடி மன்னர்கள் தமிழ் நாட்டை ஆளத்தொடங்கி ஆண்டுவந்தனர். இம்மன்னரின் ஆட்சிக் காலம் மிகச் சிறந்தது ஆகும். இக்காலத்தில் ஊரெங்கும் உழவுத்தொழில் பரவியிருந்தது. வீடுகளெங்கும் நன் செய் தானியங்களும் புன்செய் தானியங்களும் குவிந்து கிடந்தன. பருத்தியாலும் பட்டாலும் ஆகிய நுண்ணிய ஆடையால், மக்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டனர். பொன்னாலும் மணியாலும் அணிகள் அமைத்து அணிந்து அழகுற விளங்கினர்கள். நில வாணிபத்தோடு நீர் வாணிபத்தையும் நடத்திப்பொருள் சேகரித்தார்கள். கடலில் பண்டங்கொண்டு செல்லும் மரக்கலங்களையும், போர்கொண்டு செல்லும் மரக்கலங்களையும் போக்கினர்கள். மிடியுற்ற புறநாட்டாருக்குப் பொருள் தந்து, அவர்களை நம் நாட்டு ஏவலாட்களாகக் கொண்டனர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்து நமது தமிழகம் துலங்கிய காலத்தில், தண்டமிழ் அரசியை ஒள்ளிய சங்கப்பலகையில் ஏற்றிவைத்தனர் பாண்டி மன்னர். தமிழ்மொழி வல்ல அறிஞர்களை ஒன்றுசேர்த்து,

தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழை ஆராய்ந்து வரச்செய்தனர். அவ்வாறு தமிழ் மொழியை ஆராய்ந்து அறிந்துவந்த அறிஞர்கள் பலரையும் உயிரினும் உயர்பொருளாய்க் கருதி உபசரித்து வந்தனர் பாண்டிய மன்னர். அவைகளைப்பற்றி நேர்ந்துழி விவரிப்போம். இவ்வுண்மைகளை உய்த்து உணருவதற்குத் துணையா யிருப்பன, அக்காலத்துக் கருவிகள், பிணங்களை அடக்கஞ் செய்த குழிகள், தனித் தமிழ் மொழிகள் முதலியனவாம்.

2. இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் தமிழகம் புகுந்து, கச்சிமா நகரைத் தலை நகராகக் கொண்டு ஆளத்தொடங்கினர். இக்காலத்தில் மதுரையில் மூன்றுஞ் சங்கம் இருந்தது போலும். பல்லவர் கச்சியிற் புகுந்த காலத்திலும், சேர, சோழ, பாண்டிய நாடுகளில் மன்னர்கள் இல்லாமலிருக்க வில்லை. ஏனெனில் அக்காலத்திய மன்னர்களைப் பற்றிய பாடல்கள் பல படிக்கப் படுகின்றன. இந்நாளில் தமிழ்மொழியில் காணப்படுஞ் செய்யுள்களெல்லாம் கடைச் சங்கச் செய்யுள்களே. முன்னைய சங்கங்களின் செய்யுள்களெல்லாம் இருந்த சுவடு அறிவதற்கு இடமின்றி அழிந்துவிட்டன. பல்லவ அரசர் தமிழ் நாட்டிற்குச் செய்த நன்மைகள் பல. செப்புத் தகடுகளில் சாசனங்களை வெட்டுதலும், பாறைகளில் சாசனங்களை வெட்டுதலும் அவர்கள் காலத்தில் தொடக்க முற்றன. பல்லவர்காலத்துச் சரித்திரங்களை ஒழுங்காய் எழுதுவதற்கு மிக்க துணையாயிருப்பன மேற் கூறிய இருவகைச் சாசனங்களும், இலக்கியங்களுமாம். இவர்கள் காலத்தில் நாடெங்கும் சைவமும், வைஷ்ணவமும் பரவிற்று. தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளும், நாலாயிரம் முதலிய திவ்

விய பிரபந்தங்களும் தோன்றின. பல்லவ மன்னர்கள் இன்றேல் கற்கோயில்களெங்கே? குகைக் கோயில்களெங்கே? கல் வெட்டுகளெங்கே? இவர்களால் அன்றோ இவைகளெல்லாம் நம் நாட்டில் நாட்டப் பெற்றன.

3. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சாவூரில், சோழர் ஆட்சி மீண்டும் உயர்ந்தோங்க ஆரம்பித்தது. இச் சோழமன்னர்களைத் தஞ்சைச் சோழரென்பர். இவர்கள் ஆட்சி இருநூறு ஆண்டளவு நீடித்திருந்து பின்பு குறுகிவிட்டது. இக்காலத்தில் சேரநாடு கேரளநாடாயிற்று. அவ்விடத்திய மொழியும் மலையாள மொழியாக மாறிற்று. பாண்டியர் ஆட்சி ஓங்கிற்று. அவ்வாட்சியும் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் குன்றத் தலைப்பட்டது. பின்பு பதினான்காம் நூற்றாண்டில் துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள ஆனை குந்தியென்ற ஊரில் விஜய நகரராஜ்ஜியம் தோன்றிற்று. வட நாட்டிலிருந்து வந்த முகமதிய வெள்ளம் தென்னாடு புகாமல் அது தேக்கிற்று. அவ்விஜய நகர ஆட்சி தமிழ்நாடெல்லாம் பரவ ஆரம்பித்தது. இரண்டு நூற்றாண்டளவில் அவ்விராஜ்ஜியத்தின் செல்வாக்கும் நல்குரவுற்றது. பின்னர் முகமதியர் அரசாட்சி இந்நாட்டில் பரவலாயிற்று. அவர்களுக்குப் பின் ஆங்கிலர் நூறு ஆண்டுகளாய் ஆண்டு வருகிறார்கள். சோழ, பாண்டிய, பல்லவ, விஜய நகர காலங்களில் கட்டப்பட்ட கோவில்கள் எண்ணிறந்தன. அக்காலத்திற்றோன்றிய வரலாற்று நூற்கள் பல. இவைகளின் துணையைக் கொண்டு தமிழகச் சரித்திரத்தின் மூன்றாம் பகுதியை யெழுதலாம்.

இந் நூலில், தமிழக வரலாற்றின் இரண்டாம் பகுதியைப் பற்றி மூன்று பாகங்களிலும் சொல்லி யிருக்கிறேன். மற்றைய பகுதிகளும் முறையே எழுதப்பெறும்.

அந்தோ! இக்காலத்திய நிலைமை என்னென்று கூறுவது. கல்வியைப் பரப்ப எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கோ அளவில்லை. செலவாகும் பணத்திற்கோ எல்லையில்லை. நம் நாட்டுச் சரிதையைக் கற்பிப்பாரும் இல்லை; கற்பாரும் இல்லை. நம் நாட்டு நிலைமை அறியாது, பிறநாடுகளின் நிலைமை அறியப் புகுவது, தன் தாய் தந்தையரை அறியாது பிறர் தாய் தந்தையரை அறியப்புகுவதை யொக்கும். பெருவள நல்லூர் பெரும்போரை யறியாத நம் மாணவர்களுக்கு அஜின்கூர் போரைப்பற்றிய அறிவு அதிகம். திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய மங்களசாசனத்தைப் பெற்ற திருமல்லையைத் தேடித் தெரியாத தமிழர்கள் உரோமபுரியிலுள்ள கோயிலின் கதையை உணர மோகங்கொண்டு ஓடித்திரிவர். சொல்லுக் கரசாகிய அப்பர் பிறந்த திருவாமூரைத் தேடி அறியார்; தென்னமெரிக்காவில் உள்ள ரியோடிஜெனேரோவைப்பற்றி அறிய ஆவல்கொள்வர். உள்ளுந்தோறும் இனிக்கும் வள்ளுவர் வாய்மொழியை உணரார்கள்ளுங் காமமுங்கொண்டு மயங்கும் பிறர் சொல்லைப் பேணுவர். கற்றவர் காதலிக்கும் கம்பரைக் காமுறார். மற்றவர் போற்றும் வெற்றுரைகளை விரும்பி நிற்பர்! அந்தோ இதுவும் நமது துர்நிலையோ?

ஆசிரியர்களே! விழிமின்கள் விழிமின்கள், நம் நாட்டுச் சரிதையை மாணவர்களுக்குப் புகட்டுமின்கள். அவர்களை நலமுறச் செய்யுங்கள்.

மாணவர்களே! மயங்கந் தெளிமின்! மயக்கந் தெளிமின்! தன் வீடு காவாது அன்னிய வீடு காத்து ஆவது என் உங்களை யறியுங்கள்! உங்கள் முன்னோர் பெருமையைப் பேணுங்கள்! உங்கள் நாட்டின் முன்னைய நிலையையும் இப்போதைய நிலையையும் ஓதியுணர்ந்து உய்மின்கள்.

பி. தி. ஶ்ரீ.

விஷய அட்டவணை.

	பக்கம்
கி. பி. 200 முதல் 600 வரையில்	1
பல்லவர் கச்சிக்கு வந்தவாறு	2
மகாராஜா பப்பசுவாமி	3
சிவகந்த மகாராஜாதிராஜன்	5
கதம்பர்	11
கரிகால்சோழன்	12
சமயநிலை	14
கோயில்கள்	17
மக்கள்நிலை	19
நாட்டுநிலை	22
இலக்கியநிலை	24
கி. பி. 400 முதல் 600 வரையில்	29
தெலுங்கு நாடு ஆண்ட பல்லவர்	29
அக்காலத்தில் ஆண்ட மற்றைய மன்னர்கள் ...	33
சமயநிலை மாறுபாடுகள்	37
இலக்கியநிலை	48
அநுபந்தம்	53

காலவரி.

கி. பி. 0	பல்லவர் தென்னாடு வந்தது
50	
	சாலிவாகனசகாரம்பம்
100	
150	பப்பசுவாமி
	சிவகந்தமகாராஜா
200	
250	
300	
350	மயூரசர்மா
	கரிகாலன்
400	
	ஸிம்ஹவர்மா
450	கோச்செங்கணார்
	நெடுஞ்செழியன்
500	செங்குட்டுவன்
550	
	நரஸிம்ஹவர்மா
600	மகேந்திரன்.

மூன்றாஞ் சங்கம்.

பல்லவர் சரித்திரம்.

முதல் பாகம்.

கி. பி. 200 முதல் கி. பி. 600 வரையில்.

நீர்வளமும் நிலவளப்பும் மிகுந்தோங்கியது நம்முடைய தமிழ் நாடு. அதில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர் செங்கோல் செலுத்திவந்தார்கள். சோழநாடு திருச்சிராப்பள்ளியின் ஓர் பகுதியான உறையூரைத் தலை நகராய்க்கொண்டு கீழ்ச் சமுத்திரக் கரை வரையில் உள்ளது. பாண்டிய நாட்டுக்கு முதல் நகரம் மதுரை; அந்நாடு தென் சமுத்திரத்தை அண்டியுள்ளது. சேரநாடோ கரூர் முதல் மேற்குக் கடல் வரையில் பரவியிருந்தது. இம்மூவேந்தர் முன்னிலையில் தமிழ்ப் பயின்று பாட்டுக்கள் பாடும் பாவலர் பலர் அவ்வப்போது ஆதரிக்கப் பெற்று வந்தார்கள்.

தமிழ் நாட்டுக்கு வட எல்லை ஏழுமலையான் குடிகொண்டிருக்கும் வேங்கடம். இம்மலைக்குத் தெற்கும் சோழநாட்டுக்கு வடக்கும் உள்ளது தொண்டை மண்டலம். இதற்குத் தலை நகர் காஞ்சீபுரம். புண்ணிய க்ஷேத்திரங்களில் முதலானது என்று பெயர்பெற்ற பட்டணம்இது. சிவன் கோயில் என்ன, விஷ்ணு ஆலயம் என்ன, உலக மாதாவை வழிபடும் வீடு என்ன, இவைகளால் உயர்நிலை பெற்ற ஊர். இவ்வூரில் 1800 வருஷங்களுக்கு முன், தமிழ்

மன்னர் அல்லாதார் ஆள ஆரம்பித்து, பலகாலம் வாழ்ந்து நாட்டுக்குப் பல நன்மைகள் செய்தார்கள். அவர் பல்லவ குலத்தவர்; இப் பல்லவர் எங்கிருந்து வந்தவர், எவ்வாறு வாழ்ந்தோங்கி, பின்பு அழிந்தார் என்ற அருங்கதை தமிழர் அவசியமாய் அறியவேண்டியது.

பல்லவர் கச்சிக்கு வந்தவாறு.

இந்திய நாட்டுக்கு வட மேற்கில் இருக்கும் நிலப் பகுதிக்கு நம்முன்னோர் சகத்தீபம் என்று பெயரிட்டார் அந்நாட்டவர்களுக்குச் சகர் என்றும் பல்லவர் என்றும் பெயர். தொன்று தொட்டு, சக பல்லவர்கள் நம் நாட்டுக்கு நாட்டு வழியாயும், கடல் வழியாயும் வருவது, போவது உண்டு என்று புராணங்களிலிருந்து அறியலாம்.

கி. மு. 500 வருஷங்களுக்கு முன்பே இச்சகப்பல்லவர்கள் ஆப்கானிஸ்தானத்து மேற்கு பாகத்தில் குடியேறினார்கள். அதனால் அந்நாட்டுக்குச் சகஸ்தானம் என்ற பெயர் பிறந்தது. சகஸ்தானத்திலிருக்கும் போது சகபல்லவர்கள் சைவ, வைஷ்ணவ, பௌத்த சமண முதலிய முறைகளைத் தழுவினார்கள். அதனால் நம்முடைய நாட்டவருடன் கலந்து ஒன்றாயினர். நாடு முழுவதும் பரவினர் அங்கங்கே சக பல்லவ அரசர்களும் தோன்றினர். பழை காலத்தில் உயர்நிலை அடைந்திருந்த ஊர்களான தக்கசிலை வடமதுரை, உஜ்ஜயினி முதலிய பட்டணங்கள் இவ்வரசர் களுக்குத் தலை நகரங்களா யிருந்தன. கிரமமாய்ப் பல்லவர்கள் வடக்கிருந்து தென்னாடு வந்து சேர்ந்தார்கள் அவ்வாறு வந்து காஞ்சீபுரத்தில் தங்கள் அரசாட்சியை ஏற்படுத்தினார்கள்.

மகாராஜா பப்பசுவாமி.

பல்லவ இராஜ்ஜியத்தைக் கச்சியில் ஏற்படுத்தின அரசன் பெயர் இது என்று தெரியவில்லை. நமக்குத் தெரிந்தவருள் முதல்வன் பெயர் மகாராஜா பப்பசுவாமி. இவன் ஆண்டது இப்போதைக்கு ஏறக்குறைய 1,700 வருஷங்களுக்கு முன். இவன் இராஜ்ஜியம் தொண்டை மண்டலத்தில் மாத்திர மல்ல, தெலுங்கு நாடு முழுவதும் பரவியிருந்தது. பெஜவாடாவுக்கு அடுத்த தானியகடகம் என்று முற்காலத்தில் சிறந்தோங்கின பட்டணமும் பப்பசுவாமிக்கு மற்றோர் தலைநகரமாய் இருந்தது.

இந்தப் பப்பமகாராஜா வடநாட்டி லிருந்து ஆத்திரேய, ஹாரித, பாரத்துவாஜ, கௌசிக, காசிப, வத்ஸ என்ற ஆறு கோத்திரங்களைச் சேர்ந்த பிராமணர்கள் பல குடும்பத்தாரை வரவழைத்துத் தொண்டை மண்டலத்தில் குடியேற்றுவித்தான். பப்பன் காலத்துக்கு முன் பிராமணர்கள் தமிழ் நாட்டில் அதிகமாகப் பரவி இருந்ததாக அடையாளம் ஒன்றும் காணோம். கொஞ்சமாய்த் தான் இருந்திருக்க வேண்டும். பப்பசுவாமி தன் குலத்தார் புண்ணியமும், வாழ்நாளும், உடல் வலியும், புகழும் வளர்ந்தோங்கும் பொருட்டு பலகோடிப் பொற்காசும், நூறாயிரம் ஏர்களும், பிராமணர்களுக்கு நிலங்களும் தானம் செய்ததாகத் தெரியவருகிறது. அவர்கள் அந்தப் பூமியிலிருந்து உண்டாகும் பொருள்களைக் கொண்டு, கஷ்டப்படாமல் பிழைத்து வந்து, வாழ்நாள்களை வைதிக காரியம், தெய்வ பூஜை, படிப்பு முதலிய நல்வழிகளில் செலவழித்து வந்தார்கள். காஞ்சிபுரத்தில் கடிகை யென்னும் வட மொழிக் கல்வி கற்கும் கல்லூரியும் உண்டாய்ப்பெரும் பேர்பெற்று விளங்கிற்று.

பல்லவ மன்னர்கள் காஞ்சீபுரத்தில் அரசாட்சி செய்யத் தொடங்கு முன், ஆரிய மொழியும் ஆரிய முறைகளும் தமிழ் நாட்டில் அதிகமாகப் பரவவில்லை. பௌத்த, சமண பிராமணத் துறவிகள் மாத்திரம் காடுகளிலும், மலைக்குகைகளிலும் இருந்து தவம் புரிந்து வந்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள பல மலைக்குகைகளில் இம்முனிவர்கள் கல்லில் வெட்டின எழுத்துக்கள் சில காணலாம். தமிழர் சிலர் சமண முறை, பௌத்த முறைகளைக் கைப்பற்றினார்கள். தமிழரசர்கள் இத்துறவிகளை ஆதரித்தார்கள். ஆனாலும் தமிழ் நாட்டில் வடமொழி கலக்காத முழுத் தமிழ்ச்சொல்லே மக்கள் பேசினார்கள். அப்போது ஆரியத் தெய்வங்களைத் தமிழர் தொழுதஅடையாளங்கள் ஒன்றும் அகப்படவில்லை. வைதிக யாகங்கள் தமிழ் மன்னர் நடத்தி வைக்கவில்லை. அரசியலும் வடமொழியில் இருக்கும் சாஸ்திர விதிப்பிரகாரம் நடக்காமல் பழைய தமிழ் முறையிலே நிகழ்ந்தது.

காஞ்சீபுரப் பல்லவரோ இவ்வாறல்ல. க்ஷத்திரிய குலத்தவர். அவர் பேச்சோ பிராகிருத மொழி. இராஜ்ஜிய பரிபாலனத்தை ஆரிய சாஸ்திரங்களை அனுசரித்துத் தான் நடத்தினார்கள். அவர் கீழிருந்த இராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வட மொழிப்பெயர்களே உண்டு. அரசர் பிரஜைகளிடமிருந்து பெற்ற வரிகள் ஆரிய தரும சாஸ்திரங்களில் சொல்லி யிருப்பவையே. வடநாட்டு வழக்கங்களை யொட்டி பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் தானங்கள் கொடுத்த போது, தாமரப் பட்டயங்களில் தான சாசனங்களைச் செதுக்கிவித்தார்கள். இந்தச் சாசனங்களை பிராகிருத, ஸம்ஸ்கிருத பாஷைகளில் எழுதினார்கள். இவைகளில் தமிழ் மொழிக்கலப்பு கொஞ்சமாவது இல்லை. இவ்வாறு

காஞ்சீபுரத்தில் ஆரம்பித்த ஆரியர் ஆட்சிமுறைகள் ஆரியர் வைதிக முறைகள், ஆரியர் மொழிக்கல்வி, ஆரியர் ஆசாரங்கள் முதலியன தமிழ்நாட்டில் பரவின. கொஞ்சகாலத்துக்குள் ஆரியமும், திராவிடமும், வடநாட்டுத் தென்னாட்டு வாழ்முறைகளும், தொழுமுறைகளும் ஒன்று கலந்து, தென்னாடு உயர்ந்தோங்கி, தமிழகமானது உலகுக்குத் தலையான இப் பரதநாட்டுக்குத் தலைமேலணியும் கிரீடமாய் விளங்கும் பெருநிலையைப் பெற்றது. இக் கதையைத் தமிழர் அனைவரும் அறியவேண்டாமோ?

சிவகந்த மகாராஜாதிராஜன்.

பப்ப சுவாமிக்குப் பின் அவன் மகன் சிவகந்தனென்பான் சிம்மாதனம் ஏறினான். சிவகந்தன் சிறுவனாயிருக்கும் போதே செல்வாக்கு மிகுந்திருந்ததாகத் தெரியவருகிறது. தகப்பன் ஆண்டுவரும்போது சிவகந்தனுக்குஇளவரசுப் பட்டத்தையும் அதிகாரத்தையும் அளித்தான். இளவரசனாயிருக்கும்போது பிராமணர்களுக்குச் சில நிலங்களைத் தானம் செய்தான். தானம் அளித்த சாசனம் செப்புப் பட்டயத்தில் எழுதினது கொஞ்சகாலத்துக்கு முன் கிருஷ்ணை ஜில்லா, நரஸாராவுபேட்டைத் தாலூகாவிலுள்ள மைதவோலு என்னும் கிராமத்தில் பாழ்நிலமொன்றை உழுதபோது கிடைத்தது. இது பிராகிருத மொழியிலெழுதியது.

சிலகாலம் சென்றபின்பு பப்பமகாராஜா இறக்க, சிவகந்தன் அரசனானான். தருமமகா ராஜாதிராஜன் என்ற பட்டத்தையும் ஏற்றுக்கொண்டான். மகாராஜன் என்பதை விட தருமமகா ராஜாதிராஜன் என்பது மிக உயர்ந்த பதவி

யைக் குறிக்கும். ஒரு சிறு நாட்டுத் தலைவனுக்கும் மகா ராஜன் என்ற பெயருண்டு. பல நாடுகளுக்கு அதிபதியாய், மன்னர்க்கு மன்னனாய் விளங்குவோனே மகாராஜாதிராஜன். வைதிக முறைப்படி அபிஷேகம் பெற்றவன் தருமமகா ராஜாதிராஜனாவான். தருமமகாராஜாதிராஜன் சிவகந்த சுவாமி அபிஷேகம் அடைந்தபின்பு, சுற்றுமுள்ள மன்னர் செருக்கை அழித்து, நாடுகள் பலவற்றைக் கைக்கொண்டு, பெருவேள்விகளான அக்கினிஷ்டோமம், வாஜபேயம், அசுவமேதம், முதலிய யாகங்களை நடத்திவைத்தான்.

இவன் ஆண்ட நாடுகள் தெற்கே கொள்ளிடம், வடக்கே கோதாவரி, இந்திகளுக்கு நடுவிலிருப்பவைக ளாம். அதாவது தமிழ்நாட்டின் ஒரு சிறு பகுதியும் தெலுங்குநாட்டின் பெரும்பகுதியும் இவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இவனது பிரதானமான தலைநகரம் காஞ்சீபுரம். அவ்வூரில் சிவாலயம், விஷ்ணுவாலயங்களை இந்தச் சிவகந்தன் ஏற்பாடு செய்ததுமல்லாமல், வடமொழி பயிலக் கடிகைகளென்னும் கல்விச்சாலைகளை நடத்திவந்த தால் ஆரியமொழி, ஆரியமுறைகள் அங்கே பெருகி, விளங்கி ஓங்கின. காஞ்சீபுரமும் பரதநாட்டின் முக்கிய ஸ்தலங்கள் ஏழில் ஒன்றாய்ப் பொலிந்தது.

இவனது இரண்டாவது தலை நகரம் அமராவதி. இது தான் முன்பு கூறிய பப்ப மகாராஜாவுக்குந் தலைநகரா யிருந் தது. இது கிருஷ்ணை நதிக்கரையில் பெஜவாடாவுக் கருகில் இருந்தது. இவ்வூரில் அக்காலத்தில் பௌத்த முனி வர் பலர் ஒரு பெரிய மடத்தில் வசித்தார்கள். இம்மடம் கருங்கல்லால் கட்டப்பெற்றிருந்ததுமன்றி, கல்லில் செதுக்



அமராவதிச் சிற்பவேலை.

கின அற்புதமான சிற்பங்கள் இதில் நிறைந்திருந்தன. பிற்காலத்தில் பௌத்தநெறி இந்நாட்டில் நிலைகுலைந்துபோக, இந்த மடம் இடிந்துபோயிற்று. அதிலிருந்த விக்கிரகங்களையும், சித்திரப் பணிகளையும் வேறு வேறு இடங்களுக்குக் கொண்டுபோய், பல கண்காட்சிச் சாலைகளில் வைத்திருக்கிறார்கள். இப்போது மடமிருந்த சுவடுதான் பூமிமேல் காணலாம். இந்த அமராவதி நகர்க்குத் தானியகடகமென்று மற்றோர் நாமமுண்டு.

சிவகந்த மகாராஜன் யாகங்கள் பல நிறைவேற்றினான் என்றோம். அவைகளை நடத்த பற்பல கோத்திரங்களில் பிறந்து, நான்மறைகள் ஓதிய வேதியர்களை வரவழைத்து அவர்களுக்கு பூமிதானம் செய்து, நாட்டில் குடியேற்றுவித்தான். அவர்களுக்குக் கொடுத்த தான சாசனங்கள் செப்புப் பட்டயங்களில் செதுக்கினது ஒன்று சில நாட்களுக்கு முன் பெல்லாரி ஜில்லாவிலுள்ள ஹீரஹடகள்ளியென்னும் கிராமத்தில் வசித்துவந்த ஓர் வணிகனிடமிருந்து அகப்பட்டது. இவ்வாறு அரசனிடத்திலிருந்து மானியம்பெற்ற அந்தணர்கள் தமிழ் நாட்டில் பெருகி, அங்கே ஆரியர் தொழுமுறைகளையும் ஆரிய மொழியிலுள்ள கலைகளையும் அம்மொழியில் பாண்டித்தியத்தையும் பரவச் செய்தார்கள். இந்தச் சாசனங்களை கொடுக்குமுறை யாதென்றால், முதலில் அரசன் தானம்செய்யத் தீர்மானித்து, மந்திரியிடமோ, சேனாதிபதியிடமோ, தன் ஆணையைத் தெரிவிப்பான். அவர் அதை இரகசியாதிகர்கள் என்னும் உத்தியோகஸ்தர்க்குச் சொல்வார். இவர் அதை சாஸ்திர முறையைப் பின்தொடர்ந்து ஓலையிலெழுதுவார். இவ்வாறு எழுதிய

சாசனத்தை ஆதியோடந்தமாய் அரசன் படித்துப் பார் பான். பின்பு அதன் மேல் அரசன் முத்திரையை யிடுவ கள். அச்சாசனத்தை அரசன் நீர்வார்த்துக் கொடுப்பா பின்பு கம்மாளன் அதை ஓலையைப்போல் செய்த செப்பு பட்டயங்களில் செதுக்கி அவைகளை சேர்த்துக் கட்ட ஒ செப்பு மோதிரம் செய்து அதில் கோர்ப்பான். அம்மோ ரத்தின் மேல் அரசன் முத்திரையை யிட்டு மாணியம்பெற் பிராமணர்களுக்குக் கொடுப்பார்.

மேற்கூறிய இரண்டு சாசனங்களிலிருந்து அக் கால தில் பல்லவ ராஜ்ஜியத்தில் நிகழ்ந்த அரசு முறைகளை அறி லாம். அம்முறைகளும் தொன்றுதொட்டுத் தமிழ் வேந்த நடத்திய முறைகளும் வேறே. பல்லவ ராஜ்ஜியத்தை இரா டம், விஷயம், வட்டம், கிராமங்களாகிய பிரிவுகளாகப் பிரி திருந்தனர். இப்பிரிவுகளை ஆள்வோர்க்கு இரட்டிகர், விஷ யேசர், தேசாதித்தர், வாபதர் என்று பெயர்கள் உண் இப்பெரும் பதவிகளை அரசகுமாரர்களும், சேனாதிபதிகளு தான் பெறுவர். எப்பொழுதும் அரசாருகில் இருந் எல்லா வியவகாரங்களையும் நடத்துவோர் அமைச்சரும், இ கசியாதிகரும்; நாட்டு வணிகத்திலிருந்தும் கடல் வணிகத் லிருந்தும் இராஜாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிக வாங்கும் இடங்களுக்கு மண்டபங்கள் என்று பெயர்; அ மண்டபங்களிலிருந்து வரி வாங்குவோரை மண்டபிக என்பர். நீர் நிலைகளையும், நீராட வருபவர்க்கு இடையூறுக வராமல் காப்போர்க்குத் தீர்த்திகர் என்று பெயர். கா வனங்களைப் போற்றுவோருக்குக் குமிகர் என்பர். சேனா பதிகள் கீழிருந்து நிலைப்படையைச் சேர்ந்த போர்வீரர்களை

நாயக்கர் என்பவர் கவனிப்பார். சங்கரந்தகர்கள் நாட்டில் நாலா பக்கமும் அலைந்து ஆங்காங்கு நிகழும் நிகழ்ச்சிகளை அரசர்க்கு அறிவித்து, அவர் ஆணையை மக்களுக்குத் தெரிவிப்பார்கள். இப் பலவித உத்தியோகஸ்தர்களின் பெயர்கள் எல்லாம் வடமொழிச் சொற்களே. இவ்வாறு செலுத்தின ஆளுகையின் ஏற்பாடும் வடமொழியில் எழுதியுள்ள அருத்த சாஸ்திரத்திலடங்கிய தண்ட நீதியை அனுசரித்து வடநாட்டில் வழங்கி வந்தவைகளே.

அரசர்க்குரிய நிலவரி, நிலத்தில் உண்டாகும் பயிரில் ஆறிலொரு பங்கு. இது தவிர பதினெண்வகைச் சிறு வருவாய்கள் இருந்தவையாகச் சாசனங்களினின்றும் தெரிய வருகிறது. அவைகளில் முக்கியமாவன:—அரசன் அரண்மனைச் செலவுக்கு வேண்டிய பால், தயிர் கொடுத்தல், அதிகாரிகள் நாட்டைச்சுற்றி வருங்கால் அவர்கள் பிரயாணம் செய்ய வண்டி, மாடு அனுப்புதல், அவர்களுக்குத் தங்க வீடும், தூங்கக் கட்டிலும், உண்ணச்சோறும், வழங்கச் செம்பு, தவலை, முதலியனவும் கொடுத்தல், அரண்மனைக்கு வேண்டிய புல், விறகு, கறிகாய், பூ முதலியவை அனுப்புதல், அரசர்க்கு ஊழியம் செய்ய ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், கிராமப் பொதுச் செலவில் "வெட்டி" வேலைக்காரர் அனுப்புதல்.* இது தவிர, உப்பும் வெல்லமும் காய்ச்சுதல் அரசர்களது உரிமையே.

சிவகந்த மகாராஜன் காலத்தில் கச்சிப் பல்லவ ராஜ்ஜியத்துக்கும் மற்றைய நாடுகளுக்கும் வணிகம் மிகநடந்தது. 'பெரிப்ளூஸ்' என்ற யவன (கிரேக்க) மொழியில் எழுதின ஓர் சிறு புஸ்தகத்தில் கமரா, பொதுகா, சொபத்மா என்ற

மூன்று துறைமுகங்கள் அப்போது இருந்தனவாகச் சொ
லியிருக்கிறது. எப்பெயர்கள் மாறி இவ்வாறு யவன மொழ
யில் ஆயிற்றென்று தெரியவில்லை. ஆனால் இப்போது மக
பலிபுரம் என்று சென்னபட்டணத்துக்குத் தெற்கே இரு
கும் ஊர் இம்மூன்றில் ஒன்று. இத்துறைமுகங்களிலிருந்த
கப்பல் வழியாய்ச் சிம்மளம், ஸுவர்ண பூமி, (இப்போத
பர்மா என்பார்), சாவகம் (ஜாவா) முதலிய தீவுகளுக்கு
சீனம் முதலிய நாடுகளுக்கும் வணிகம் நிகழ்ந்தது. பல்லவ
காலத்துக் காசுகள் அகப்பட்டவைகளில் தோணியை
போல் சித்திரம் வெட்டியிருப்பதால் கப்பல் வியாபார
அதிகமாய் நடந்ததென்பதற்குத் தடையே இல்லை. அன்
யும், காஞ்சீபுரத்துக்கு அடுத்த கீழ் சமுத்திரக் கரையி
உரோமாபுரி நாணயங்கள் பூமியில் புதைந்து கிடந்து அடி
கடி அகப்படுவதால், ஐரோப்பா கண்டத்துடனும் வணிக
மிகவும் நடந்ததென்றும் அறியலாம்.

சிவகந்த மகாராஜன் காலம் யாது? இவனது சாசன
களின் எழுத்துநடை, மொழிநடையையும் மற்றைய
விஷயங்களையும் கருதி, கி. பி. மூன்றும் நூற்றாண்டில் இவ
ஆண்டிருக்க வேண்டும் என்றுதெரிய வருகிறது. அப்போ
தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ப
இருந்தார் என்றோம். அவ்வரசர்கள் பலரைப்புகழ்
தமிழில் பாடின அகவல்கள் பல புறம், அகம் என்ற சங்
செய்யுள் தொகைகளில் உள; இவைகளில் பல்லவ
குறித்து ஒன்றுமேயில்லை. ஆகையால் ஆரிய முறை
அனுசரித்த இப் பல்லவர்களுக்கும் பழைய தமிழ் மு
களையே பின் தொடர்ந்த பண்டைய தமிழ்மன்னர்களுக்
சம்பந்தம் அதிகமாக இல்லைபோலும்.



பல்லவ நாணயங்கள்.

கதம்பர்.

கி. பி. 4-ம் நூற்றாண்டின் இறுதியில் கதம்பர் என்று ஒரு புதிய அரசகுலத்தார் தோன்றினர். இவர் தோன்றின கதையை அழகிய ஆரியக் காவிய மொழியில் ஓர் சாசனத்தில் எழுதி யிருக்கிறது:—

கதம்ப குலத்தில் சுருதி, சீலம், சௌசம், முதலிய நற்குணங்களால் அழகுபெற்ற ஸ்ரீமான் மயூரசர்மன் என்னும் பிராம்மணோத்தமன் இருந்தான். அவன் குருவான வீரசர்மனுடன் பல்லவேந்திரபுரியான காஞ்சீபுரத்தை அடைந்து, சகல சாஸ்திரங்களைப்படிக்க ஆவலுடன் ஒரு கடிகையில், யாசகம் செய்து பிழைக்கும் மாணவனாய்ப் பிரவேசித்தான். அங்கே ஒரு பல்லவக் குதிரை வீரனுக்கும் இவனுக்கும் சண்டை உண்டாயிற்று; அப்போது தீவிரமாய்க் கோபம் கொண்டு பின் வருமாறு ஆலோசித்தான்:— ஐயோ, கலியுகத்தில் க்ஷத்திரியத்தைவிட பிராமணத்துவம் எவ்வளவு இளைத்துப் போய்விட்டது. குரு குல வாசம் செய்து வேத சாகையை அத்தியயனம் செய்தவனுக்குக் கூட அரசன் தயையன்றி, பிரமசித்தி கிடையாமலிருந்தால் இதைவிடத் துக்கம் உண்டா? ஆகையால் சமித்து முதலிய யாகப் பொருள்களை வழங்கவல்ல கைகளால் உலகைவெல்ல ஒளி தரும் வாளை உறையிலிருந்து உருவினான். பல்லவேந்திரர் நாட்டு எல்லை காப்போரை உடனே ஜயித்து ஸ்ரீசைலம் என்கிற ஸ்ரீ பர்வதத்தைச் சுற்றியுள்ள புகுதற்கரிய அடவிகளைக் கைப்பற்றினான். தமிழ் நாட்டுக்கும் தெலுங்கு நாட்டுக்கும் நடுவிலுள்ள வடுக வழி என்பதின் அரசனை

பெரும்பாண மன்னனையும் வேறு வேந்தரையும் தனக்கு கப்பங் கட்டச் செய்தான். பல்லவேந்திரர் முகம் வாடுமாறு இவ்வீரத்தொழில்களைப் பூஷணமாய்ப் பூண்டு விளங்கினன். பல்லவர் நாட்டை அடிக்கடி கொள்ளையடித்தான். அதனால் கச்சி நகர்க் காவலர்கள் பெரும் படையுடன் அவனோடு யுத்தம் செய்யப் புறப்பட்டு வந்தார்கள். பல்லவர் சேனை இரவில் நடந்து கொண்டிருக்கும்போதும், கரடு முரடான இடங்களில் தங்கியிருக்கும்போதும், மயூரசர்மன் அதைப் பருந்துபோல் வந்து அடித்தான். இவ்வாறு தன் தோள்வலியைக் கொண்டு பல்லவர் பலத்தைக் குறைக்க அவர் இவன் வீரத்தையும் குலத்தையும் கருதி இவனைக் கெடுப்பது நல்லது அல்ல என்று நிச்சயித்து, இவனுடன் சினேகம் செய்தார். பின்பு மயூரசர்மன் காஞ்சிபுர அரசர் மற்றவர்களோடு செய்த போர்களில் அவர் பக்கத்தில் துணையாயிருந்து செய்த வீரத்தொழில்களைக் கண்டு, களித்து, பல்லவர் தங்கள் கரபல்லவங்களால் அவனுக்குப் பட்டபந்தம் செய்தார். இவ்வாறு உண்டான கதம்பராஜ்ஜியம் கன்னட நாட்டில் விரைவாய் உயர்ந்தோங்கத்தொடங்கிற்று. பல்லவர் வலியும் நாளடைவில் குன்ற ஆரம்பித்தது.

கரிகால் சோழன்.

கி. பி. 4-ம் நூற்றாண்டில் உறையூரில் கரிகால் சோழன் என்னும் வீரன், சோழ நாட்டுக்கு அரசனானான். சேரர், பாண்டியரையும், சிம்மள அரசரையும் போரில் தோற்கடித்துப் பெரும்புகழ் பெற்றுக் காவிரிப் பூம்பட்டினத்தைத் தன் தலை நகராயாக்கினான். அப்போது காஞ்சிபுரத்தில்

திரிநயனப் பல்லவனென்றும், திரிநேத்திரப் பல்லவனென்றும் முக்கண்டிப் பல்லவனென்றும் மூவ்விதப் பெயர்கள் உள்ள அரசன் ஆண்டுவந்தான். பல்லவ நாட்டுக்கு வடக்கில் விஜயாலயன் என்பவன் சளுக்க ராஜ்ஜியத்தைத் ஸ்தாபித்துத் திரிநயனப் பல்லவனையும் தோற்கடித்தான். கதம்பர், சளுக்கர் இவ்விருவருடன் போர்புரிந்து கைசளைத்திருந்த பல்லவ அரசனைக் கரிகாலனென்னும் பெரும் வீரன் இலகுவாய் ஜயித்து, கச்சி நகரைக் கைப்பற்றினனென்றால் விந்தையாகுமோ? கரிகாலன் கச்சி நகரக்காவலனாய், அங்கிருந்த கோயிலைப் பொன்னால் புதுப்பித்தான். தொண்டை மண்டலத்தை தன் வசமாக்கினன். இளந்திரையன் என்பவனைத் தன் கீழ்க் குறுநில மன்னனாய்க் காஞ்சிபுரத்தை ஆள நியமித்தான். இவ்விளந்திரையனைப் பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியிருக்கிறார்.

பல்லவ மன்னர் கச்சிமாநகரில் ஆண்ட இம்முதற் காலத்தில் ஆரியமொழிப்பயிற்சி, ஆரிய முறைகள் முதலியவை தொண்டை மண்டலத்தில் நுழைந்தன என்றோம். இதற்கு அத்தாக்ஷி அக்காலத்துத் தமிழ் மன்னர்க்கு வடமொழிப் பெயர்களன்றி தமிழ்ப் பெயர்களாயிருந்ததே ஒன்றாகும்.

இப்பெயர்களில் சில:— நெடுமானஞ்சி, நல்லியக்கோடன், கோப்பெருஞ்சோழன், செங்குட்டுவன், உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி, ஓய்மான் வில்லியாதன்.

தவிரவும் அக்காலத்தில் இயற்றின தமிழ்ச் செய்யுள்களில் ஆரியச் சொற்கள் மிக அரிதாய்த் தான் கிடைக்கும். பாட்டுகளில் மொழிக்கோர்வையும் நடையும் யாப்

யும் தனித்தமிழ் வழிகளே யன்றி, பிற்காலத்திய காவியங்களைப் போன்று வடமொழி வழிகளைப் பின்பற்றினமை இல்லை. நூல்கள் பாடினோரிலும் அந்தணர் சிலரே ஒழிய பலர் இரார். கரிகாலன் கச்சிப்புரவலனான பின்பு, ஆரிய முறைகள் தமிழ்நாட்டில் அதிகமாய்ப் பரவின. கரிகாலனே ஆரிய வேள்விகள் செய்ததாய் புறம் எண்ணும் தொகையிலிருக்கும் சில பாக்களால் தெரியவருகிறது. கரிகாலன் காலத்துக்குப்பின் மதுரையில் ஆண்ட பாண்டியன் ஒருவனுக்கு பல்யாகசாலை முதுக்குடுமி என்று பெயர். இவ்வாறு தமிழ அரசரும் ஆரிய வேள்விகளை நடத்த ஆரம்பிக்க தமிழ்நாட்டில் அந்தணர் அதிகரிக்கலாயினர்.

சமய நிலை.

ஆரிய வேள்வி என்றால் என்ன? தமிழர் வேள்விக்கும் அதற்கும் வேற்றுமை என்ன? ஆரியர் கொள்கைப்படி அக்கினியானவன் தேவர்க்கு வாய் என்பதும், அதனால் எந்த தேவர்க்கும் எவ்விதப் பொருளைக் கொடுத்தாலும் அதை அக்கினியில் இட்டு நெய்யை ஆகுதி செய்யவேண்டுமென்பதும், அப்படி ஹோமம் செய்யும்போது வேதமொழியின் மந்திரங்கள் ஓதவேண்டுமென்பதுமே. தமிழர் முறையோ அவ்வாறல்ல. திருமுருகாற்றுப்படை என்று நக்கீரர் இயற்றிய பாட்டில் ஆரியர் முறைகள் இந்நாட்டில் பரவுமுன் தமிழர் முருகனைத் தொழுத முறையைப்பற்றிப் பாடியிருக்கிறது. அது எவ்வாறெனின்:—சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து வைத்து, மறியை யறுத்து, கோழிக்கொடியோடே அவ்விடத்தை நிற்கும்படி நிறுத்தி, நெய்யோடே வெண் சிறு கடுகையும் அப்பி, அழகிய மலர்களைத் தூவி, இரண்டு துணிகளை உள்ளொன்றும் புறமொன்றுமாக உடுத்து சிவந்த



அமராவதிச் சிற்ப வேலை.

நூலினால் கையிலே காப்பு கட்டி, வெள்ளிய பொரியைத் தூவி, கிடாவின் உதிரத்தோடே பிசைந்த வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டு, சிறிய பசு மஞ்சளோடே நறிய சந்தன முதலியவற்றையும் தெளித்து, பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும் வேறு குளிர்ந்த மாலைகளையும் அறுத்துப் பூங்கோயிலாகத் தூக்கி, ஊர்களினின்று பசியும் பிணியும் பகையும் நீங்குக என்று வாழ்த்தி, நறிய தூபங்கொடுத்து பல்லியங்களை ஒலித்து, பாட்டுகளைப்பாடி, உதிரமளைந்துசிவந்த தினையரிசியினையும் பரப்பி வேலனைத் தொழுதார்கள். இப்போதும் அந்தணர் முறையில் பூஜை நடக்காத கோயில்களில் சற்றேறக்குறைய இவ்வாறே தேவர், தேவிகளைத் தொழுகிறார்கள்.

இவ்விருமுறைகள் தவிர சமணர் நெறி, பௌத்தர் நெறி இவையிரண்டுங்கூட தமிழ் நாட்டில் அப்போது மிகப் பரவி யிருந்தன. பௌத்தர் அமராவதியில் பெரிய மடம் கட்டிக்கொண்டு வசித்தனர் என்று முன்னமே கூறினோம்.

தமிழ் நாடுமுழுவதும் உள்ள மலைக்குகைகளில் சமணர் பலர் குடியிருந்ததற்கு அடையாளங்கள் பல உள. கரிகாலனுக்கு முன்வாழ்ந்த சோழ அரசர் சிலர் சமண நெறியைத் தழுவினதாகத் தெரியவருகிறது. சமணரும், பௌத்தரும் கொல்லாவிரதங் கொண்டவர்கள். ஆகையால் அவர் வேள்விகளெல்லாம் கூடாதெனவும், அறம் பயில்வதே வீடு பெறுவதற்கு உதவும் எனவும் கொண்ட கொள்கையினர். இந்நெறிகள் தவிர, இந்திரன்கோயில், பலதேவன் கோயில், விஷ்ணுகோயில், சிவன் கோயில்களும் நாட்டில் பல தோன்றின.

இவ்வாறு பலவித வ்ழிபாடுகள் ஒரே காலத்தில் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில் செவ்வையாய்ச் சொல்லியிருக்கிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் ஓர் மூலையில் நோயாளிகள் நோய் தீருமாறு ஒரு திருப்பொய்கையை வலஞ்செய்து தொழுது அதில் நீராடினார்கள். பித்தரும் பேய் பிடித்தாரும் விஷப் பல் தீண்டினவர்களும் அத்துயர்களை நீக்குதற்கு மற்றோர் புறத்தில் நாட்டியிருந்த நெடுங்கல்லைச் சூழவந்து தொழுதார்கள். பூதச்சதுக்கத்தில் கணவனை வசியஞ் செய்ய விரும்பின பெண்களும், அரசரைத் தாழ்வாக எண்ணும் அமைச்சரும், பிறர் மனைவியை விரும்பின துஷ்டர்களும், பொய் சொல்வாரும், இவர்கள் என் கைப்பாசத்தில் அகப்படுவர், அகப்பட்டவுடன் அவரை அடித்து உண்பேனென்று கூறுமாறு நின்ற ஒரு பூதத்துக்குச் சிலர் பலியிட்டார்கள். வெள்ளி ஐராவதமும், ஐராவதக் கொடியும், மரகதமும் வைரமும் இழைத்த பலகையும், பவழத்தூண்களுள்ள திண்ணைகளுமுடைய வீடுகள் நிறைந்து, மகரதோரணங்கள் கட்டின வீதிகளில் மக்களெல்லோருங்கூடி அரசனைவாழ்த்தி, காவிரிச்சங்கமத்துறையில் நீரைப் பொற்குடத்திலேந்தி, இந்திரனுக்குத் திருமஞ்சன மாட்டி விழாமுடித்து, அத்தேவனை அவன் கோயிலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். ஆறுமுகவேள் கோயிலிலும், வெண்குடையையுடைய வாசவன் கோயிலிலும் பலர் தொழுதார்கள். மற்றோர் பக்கத்தில் பிரமன் வாயிலிருந்து எழுந்த வேதங்களிற் சொல்லியுள்ள நெறிப்படி ஹோமங்கள் நிகழ்ந்தன. அருகர் பள்ளி, புத்தர் பள்ளி, முதலியவற்றில் அறமும், புராணமும் போதித்தனர். இவ்வகைப் பலவாறான சமயங்கள் ஓரூரிலே நிறைந்திருந்தன.

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்

இயற்றியது.

முதற்பாகம்.

(திருப்பி எழுதப்பெற்றது.)

இரண்டாம் பதிப்பு.

லை அணா 8.]

[காபிரைட்.

கோயில்கள்.

இந்தக் கோயில்கள் செங்கல், சுண்ணாம்பு, அல்லது களி மண்ணால் கட்டின சுவர்களையுடையன. மற்றைய பாகங்களெல்லாம் மரத்தால் செய்யப்பட்டவை. இக்காலத்தில்கூட மலையாளத்தில் மரத்தாலான ஆலயங்கள் பல உண்டு. அவைகளைப்போன்றே அக்கோயில்கள் இருந்திருக்கவேண்டும். மேற்கூறிய கோயில்களெல்லாம் மரத்தினாலும், சுட்ட மண்ணினாலும் கட்டிய கட்டிடங்கள். ஆகையால் முன்னூறு நானூறு ஆண்டுகளுக்குமேல் நில்லா. ஐந்நூறு வருஷங்கள் சென்றபின், இருந்த சுவடில்லாமல் போய்விடும். ஆகையால் இப்பண்டைய கோயில்களை இக்காலத்தில் காணமுடியாது.

அப்போது தமிழ் மன்னர் கோயில்களுக்கு நிலமாவது, வேறுவிதமான பொருள்களையாவது, தானம் செய்தாரோ, இல்லையோ, என்று அறிவதற்கு இடம் இல்லை. நீர்வார்த்துத் தத்தம் செய்வதும், பின்பு செப்புப்பட்டயத்தில் தான சாசனம் எழுதிக் கொடுப்பதும் ஆரிய முறையென்றே தோன்றுகிறது. ஈராயிர வருஷங்களுக்கு முன்னர் எழுதிய தரும சாஸ்திரங்களில் இம்முறையை விரிவாய்ச் சொல்லியிருக்கிறது. அக்காலத்திய தமிழ் நூல்களிலோ இதைப்பற்றி ஒன்றும் காணோம். அன்றியும் தென்னாட்டில் இதுவரையில் அகப்பட்டிருக்கும் பழய சாசனங்களெல்லாம் பிராகிருதத்திலாவது, ஸம்ஸ்கிருதத்திலாவது எழுதியவையும், பல்லவர் கொடுத்தவைகளுமாய் இருக்கின்றன. இதற்கு உதாரணமாக சிவகந்தன் காலத்துக்குப்பின் ஆண்ட பல்லவ குலத்தவன், விஜய கந்தவர்மனது மகனான விஜயபுத்தவர்மனுடைய பெண்சாதியும், புத்தியங்குரன் என்னும் இளவரசன்

தாயுமான சாருதேவியென்பவள் ஏறக்குறைய கி. பி. 300ம்- ஆண்டில் தஞூரத்தில் உள்ள கூளிமகாதாரகம் என்ற நாராயணன் கோயிலுக்கு ஒரு நிவர்த்தனம் (இருநூறு சதுர முழம்) அளவுள்ள நிலத்தைத் தானம் கொடுத்த சாசனம் அகப்பட்டிருக்கிறது. இதுதான் தென்னிந்தியாவில் கோயிலுக்குக் கொடுத்ததாக அகப்பட்ட சாசனங்களில் மிகப்பழைய்து. இதனுல் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிலேயே தென்னிந்தியாவில் விஷ்ணு கோயில்கள் இருந்தன என்று நிச்சயமாய்த் தெரியவரும்.

இக்காலத்தில் இந்திய சரித்திர ஆராய்ச்சி செய்வோரென்ற சிலர், கோயில்களும், விக்கிரகாராதனமும் கொஞ்ச காலமாய்த் தான் நம்முடையதேசத்தில் உண்டாய்ப் பரவின என்று எழுதியிருக்கிருர்கள். இது சரியல்ல. ஆரிய வேள்விகளைப்பற்றியே சொல்லும் வேதங்களிலும், வேதத்தைச் சார்ந்துப் பிறந்த நூற்களிலும், கோயில்களைப்பற்றிச் சொல்வதற்குக் காரணமில்லை. கோயில்பூஜை ஆகம நூற்களைப் பின்பற்றிப் பிறந்தது. இவ்வாகம நூற்கள் பிறந்த காலம் இன்னதென்று தெரியாது. அன்றியும் கி. மு. 5, 6 நூற்ருண்டுகளுக்கு முன்னுல் உண்டான நூற்களில் விக்கிரகங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. உதாரணமாக, வடமொழி இலக்கணத்தைச் சூத்திரமாய்ச் செய்த பாணினீயினது காலத்தில் சிறு விக்கிரகங்களை வீடுகளில் பூஜைக்கு மக்கள் வைத்திருந்ததாகத் தெரியவருகிறது; ஏனெனில், பாணினி சூத்திரமொன்றில், 'சிவ' என்னும் மொழி, தோடுடைய செவியன் விடையேறுவோனுகிய சிவபெருமானையும், 'சிவக' என்னும் மொழி அக்கடவுளது விக்கிரகத்தையும் குறிக்குமென்று குறித்திருக்கிறது. விக்கிரகாராதனை எவ்வளவு பரவி

யிருந்தால் அதைப்பற்றி மொழியிலக்கணத்தில் குறிக்க இடமுண்டாகும்? இது நிற்க, கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில், மகத ராஜ்ஜியத்தில் ஆளத்தொடங்கின மௌரிய அரசர்கள் புதிய விக்கிரகங்களைச் செய்வித்து, புதிய கோயில்களைக் கட்டி உற்சவங்களை நடத்தி காணிக்கைகள் வாங்குவதால் மிகுந்த செல்வம் தேடினார்கள் என்று மகா மந்திரி சாணக்கியன் இயற்றின அர்த்த சாஸ்திரத்திலிருந்து விளங்கும். ஆகையால் ஈராயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னரே பலவித கோயில்கள் இந்நாட்டிலிருந்தன வென்பதற்குத் தடை யொன்றும் இல்லை. எனினும் அக்காலத்தியக் கோயில்கள் சின்னஞ்சிறியவைகளாய்த் தான் இருந்திருக்க வேண்டும். இப்போது கருப்பக்கிருகம் என்பதை விடப் பெரியதாய் கோயில் இருந்திராது என்று நினைக்கலாம்.

மக்கள் நிலை.

அக்காலத்துத் தமிழ் மக்கள் மனக்களிப்பு மிகுந்து, நல்லுண்டி உண்டு, மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததாகத் தெரிய வருகிறது. முடத்தாமக் கண்ணியார் என்னும் புலவர் கரிகாலனைக் குறித்துப் பாடிய பொருநராற்றுப் படையில் அவ்வேந்தன் பாணரைப் போற்றின வகையைச் சொல்லி யிருக்கிறார். அதைக் கவனித்தால் மக்கள்நிலை செவ்வையாய்ப் புலப்படும். பாணர் என்பார் இசை பாடுவோர். யாழைத் தூக்கிக்கொண்டு மன்னரிடம் மரியாதை பெறுமாறுபோவர். அரசர் [illegible]வரை அருந்தோழரைப் போல் பேணுவர். மேற்கூறிய [illegible]லில் பாணர் சொல்கிறார்:--அறுகம்புல்லால் திரித்த பழுனை[illegible]யத் தின்ற செம்மறிக்கிடாயினது அழகியதும், பருத்த[illegible]மான துடையினது மேல்பாகத்தை நெகிழ வெந்

தசையை விழுங்கு என்று பலமுறை அரசன் சொன்னான். இருப்புக் கோலில் கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட கொழுவிய பெரிய தசைகளை வாயிடத்தே இடது புறத்திலும் வலது புறத்திலும் ஒதுக்கி வெம்மையை ஆற்றித்தின்று, புழுக்கின இறைச்சியையும் சூட்டிறைச்சியையும் யாங்கள் இனி வேண்டோம் என்றோம். பின்பு வெவ்வேறு வடிவினையுடைய இனிய பண்ணியாரம் கொண்டு வந்து அவற்றைத் தின்னும்படி எங்களை யிருத்தினான். சுருதி குறையாத சிறிய யாழைத்தாங்கி, ஒள்ளிய நுதலினையுடைய பாடியாடுவோர் மத்தளத்தினது தாளத்திற்குப் பொருத்த ஆடும்படி, மகிழ்ச்சி தரும் கள்ளை உண்ணுதலிலே பல நாளைப் போக்கினோம். ஒரு நாள் சோற்றைக் கொள்வாயாக என்று வேண்டிக் கொண்டான். முல்லை அரும்புபோல் வரியற்ற இடைமுறியாத அரிசி விரலென்னும்படி நீண்டு ஒன்றோடொன்று சேராத சோற்றையும், பாலைப் பொரித்து அதனோடு கூட்டிய பொரிக்கறிகளையும், புளிங்கறிகளையும் கழுத்து வரையில் நிரம்பும்படி விழுங்கினோம். அரசனை விடாது இனிதாக இருந்து, இரவும் பகலும் இறைச்சியைத் தின்றதால் எங்கள் பற்கள் கொல்லை நிலத்தே உழுத கொழுவை ஒப்ப முனை மழுங்கி, இளைப்பாற இடம் பெறாதே இவ்வுணவுகளை வெறுத்தோம். இனி மீண்டு எம்முடைய பழைய ஊரிடத்தே செல்வோமென, யானைக் கன்றுகள், ஊர்திகள், ஆடைகள், அணிகலங்கள், முதலியவற்றை வாரி வாரிக்கொடுத்தான்.

பிசிராந்தையார் என்னும் புலவர் சோழ நாட்டின் நிலையைப் பற்றிப் பின் வருமாறு சொல்கிறார்:—தமிழ் சோழ நாட்டில் உள்ள களமர்கள் அரித்து வடித்த, தீர்ந்த

விரும்பத்தக்க கள்ளை ஆமையிறைச்சியுடன் உண்டு, களிப்பார்கள். கொழுப்பு நிறைந்த ஆராமீனைச் சுட்டுப் பக்குவப் படுத்தி, கன்னத்திலே அடக்கிக்கொண்டு, கள்ளுண்ட மயக்கத்தினால் மயங்கிக் கிடப்பார்கள். அவ்வூரில் ஒவ்வொரு நாளும் பெருவிழாவாய்த்தானிருக்கும். நாளும் புதுவருவாய் வந்து கொண்டே யிருக்கும். பாணர் பசியைப் போக்கும் நல்ல உறையூர் அது.

மக்கள் இவ்வாறு ஊனும் கள்ளும் உண்டு, ஆடிப் பாடிக் களித்திருந்தா ரெனினும், உலக வாழ்க்கையைத் துறந்த முனிவர் அக்காலத்தில் இல்லாமலில்லை. பத்துப்பாட்டில் முதலாவதான திருமுருகாற்றுப்படையில் துறவிகளைப் பின் வருமாறு வருணித்திருக்கிறது:— மரவுரியினாலான உடையை உடையவர், அழகிய வலம்புரிச் சங்கினை யொக்கும் வெள்ளிய நரைமுடி யுடையவர்; அழுக்கற விளங்கும் வடிவுடையவர்; மான் தோலைப் போர்த்த சதை வற்றின மார்பினின்று எலும்பு எழுந்து தோன்றும் உடலையுடையவர்; பகல்கள் பலவற்றை உண்ணாமல் கழித்தவர்; நெடுங்காலப் பகையை நீக்கின மனத்தவர்; கற்றோராலும் சிறிதேனும் அறியப்படாத அறிவினர்; கற்றோருக்குத் தாம் எல்லையாகிய தலைமை யுடையவர்; ஆசையையும் கடுஞ்சினத்தையும் போக்கிய தோற்றத்தினை யுடையவர்; வருத்தம் ஒரு சிறிதும் அறியா இயல்பினை யுடையவர்; துயரமில்லாத் தோற்றமுடையவர்.

அக்காலத்தினர் மக்கள் கடமை எது என்று நினைத்திருந்ததைப் பொன்முடியார் என்ற பெண்புலவர் மிக அழகிய முறையாய் ஒரு செய்யுளில் சொல்லியிருக்கிறார். அதன் பொருளென்னெனில்:—குழந்தையைப் பெற்று

வளர்த்தல் என்னுடைய கடமையாகும். குணத்திலும் அறிவிலும் சிறந்த சான்றோனாக ஆக்குதல் தந்தையினுடைய கடமையாகும். வேல் முதலிய ஆயுதங்களைச் செய்து தருதல் கொல்லனுக்குக் கடமையாகும். கல்வி கேள்விகளில் தேர்ந்த ஒருவனுக்கு நல்ல நிலையை அளித்தல் அரசனது கடமையாகும். என் மகனுக்குக் கடமையோ, வேற்றரசர் போர்தொடங்கிய காலத்தில் பிரகாசம் பொருந்திய வாளைக் கையில் தாங்கிப் பகைவர்களது யானை முதலியப் படைகளைத் துமித்து வெற்றிபெறுதலாம்.

நாட்டுநிலை.

சோழன் கரிகாற் பெருவளத்தானைத் தலைவனாக வைத்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடின பட்டினப்பாலையில் அக்காலத்தில் சோணாடு இருந்த நிலையை மனதில் பதியுமாறு பாடியிருக்கிறார். அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் கூறுவோம்:—நீர்த்துளியை உண்ணும் வானம்பாடி தேம்பும்படி மேகம் மழையைப்பெய்தலை விட்டுவிட்டாலும், தான் மாத்திரம் தவறாமல் காலந்தோறும் குடகுமலையில் புறப்பட்டுக் கடல் செல்லும் காவிரியினது நீர்பரந்து பொன்னைக் கொழிக்கும் தன்மையது சோணாடு. அதனது கழனிகளில் குலைகளையுடைய தெங்கும், வாழையும், பனையும், காயையுடைய கமுகும், மணநாறும் மஞ்சளும், இனமான மாமரமும், அடி பரந்த சேம்பும், முளையினையுடைய இஞ்சியும் எப்போதும் விளையும். பசிய கரும்பின் கமழும் பாகைக் காய்ச்சும் கொட்டிலின் நெருப்பின் புகை சூடுகையினாலே அழகு கெட்டு நீண்ட நெய்தற்பூ நிலத்தின்மேல் வாடும். நெற்கதிரை



யுண்ட எருமைக் கன்றுகள் நெற்கூட்டின் நிழலில் உறங்கும். பாக்கங்களில் அகன்ற வீடுகள் உண்டு. வீட்டின் முற்றங்களிலே நெல்லை உலரவைத்திருப்பார்கள். சிறுமிகள் அந்நெல்லை கோழிகள் உண்ணாது காவல் காப்பார்கள். கோழிகளை ஓட்டுவதற்கு அச்சிறுமிகள் தங்கள் காதில் அணிந்துகொண்டிருக்கும் ஆபரணங்களை வீசி எறிவார்கள். சிறு பையன்கள் மூன்று சக்கரங்களையுடைய தேர்களை உருட்டி விளையாடுவார்கள். அவ்வாறு அத் தேர்களை அப் பையன்கள் இழுத்துக்கொண்டு வரும்போது பெண்கள் எறிந்த காதணி ஆபரணங்கள் உருளையை உருளாமல் தடுக்கும். சோழநாட்டில் ஊர்கள் ஒன்றிற்கொன்று நெருங்கி யிருக்கும். வெண்மையான உப்பை விற்பனை செய்துவிட்டு அதற்குப் பதிலாக நெல்லை வாங்கி நிறைத்த படகுகள் வரிசையாய் நிற்கும். அப்படகுகள் நிற்பதைப் பார்த்தால் குதிரைகளை வரிசை வரிசையாய்க் கட்டியிருப்பதுபோன்றிருக்கும். தோப்புகள் பல அங்கே உண்டு. அத் தோப்புகளையடுத்து பூஞ்சோலைகள் உண்டு. பலவகையனவான மலர்கள் நிறைந்த தடாகங்கள் உண்டு. கதவுகளில் புலியின் வடிவங்கள் செதுக்கி யிருக்கும். மதில்களில் இலக்குமியின் திருவுருவம் தீட்டப்பெற்றிருக்கும். சமையல் செய்யும் இடத்தில் சோறுவடித்த கஞ்சியானது ஆறுபோல் பெருகியோடும். தவ ஒழுக்கத்தையுடைய சமணர் பள்ளிகள் பலவுண்டு. பௌத்தர் பள்ளிகளும் பல உண்டு. சுங்கங்கொள்வோர் இரவும் பகலும் விழித்திருந்து சுங்கங்கொள்வர். சுங்கச் சாவடிகளில் மூட்டைகளின்பேரில் சோழன் புலி முத்திரையை வைத்து வெளியே அனுப்புவார்கள். இன்னம் இவைகள்போன்ற பல சிறப்புகளையுடையது சோழன் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம்.

இலக்கியநிலை.

இம் முதற்காலத்துப் பல்லவர் மன்னர் பெயராவது, அவரைப்பற்றி யாதொரு மொழியாவது, அக்காலத்துத் தமிழ்ச் செய்யுள்களில் கிடையாது. ஏனெனில் வடநாட்டிலிருந்துவந்த பல்லவர் தம்முடைய பிராகிருத மொழியையே மொழிந்து, தம்முடைய ஆரிய நெறிகளையே பின்தொடர்ந்தாரே அன்றி, தமிழரோடு கலந்து வாழவில்லை. தமிழ் பயிலவுமில்லை. தமிழ்க் கவிகளை ஆதரிக்கவுமில்லை. ஆனால் அக்காலத்திலும் அதற்கு முன்னும் தமிழ்க் கவிகளும் ஏனைய நூலாசிரியர்களும் பலர் இருந்தார்கள். தமிழ்வேந்தர் புலவர்களை நண்பர்களாக நடத்தி வந்தாரென்று முன்பே சொன்னோம். அம் மன்னர் அறத்தைத் தவிர்த்து நடந்தபோது, புலவர் அறிவுமொழிகளால் அவர்களின் தவறைக்காட்டி, அவர்களுக்கு நன்மதிகூறி, சீர்திருத்தினர் என்று புறம்என்னும்தொகை நூலிலிருந்துதெரியவருகிறது. இதற்கு உதாரணமாக, கோவூர் கிழார் ஆகிய பெரும் புலவர், சோழன் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர்புரிந்த காலத்தில் சொல்லிய விஷயம் கவனிக்கத்தக்கதாகும். உங்கள் இருவரில் ஒருவனாயினும் சேரர்க்குரிய பனைப்பூமாலையைச் சூடிக்கொள்ளவில்லை. அல்லது பாண்டியர்க்குரிய வேப்பம்பூமாலையைச் சூடிக்கொண்டிருக்கவில்லை. இருவரும் சோழர்க்குரிய ஆத்திமாலையைச் சூடிக்கொண்டிருக்கின்றீர்கள். அன்றியும் இருவர் போர்புரியும்போது இருவரும் வெல்வது இயற்கையல்ல. ஒருவர் தோல்வியுறவேண்டும். யார் தோற்றாலும் சோழன் தோற்றான் என்ற பெயர் தப்பாமல் வரும். ஆதலால் குடிப்பெயரைக் காக்கும்பொருட்டு போரை ஒழியுங்கள், போரை ஒழியுங்கள், என்று கூறியுள்

ளார். இச்செய்தி அரசர்க்கும் அறிஞர்களுக்கும் உள்ள சம்பந்தத்தை நன்குகாட்டும். இதைவிட ஒரு அரசனுக்கு எவ்வாறு புத்திபுகட்டக்கூடும்?

பாண்டிய மன்னர் புலவர் சங்கங்களை ஏற்படுத்திக் கவிகளை ஆதரித்தார். இத்தகைய சங்கங்கள் மூன்று இருந்தன என்று பிற்காலத்திய உரையாசிரியர் எழுதியிருக்கின்றனர். முதற் சங்கக் காலத்தில் பிறந்த நூல்களெல்லாம் அழிந்துவிட்டன. அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்ற இலக்கணத்தினின்று சில மேற்கோள்கள் மட்டும் பிற்காலத்திய நூல்களில் அகப்பட்டிருக்கின்றன. அவ்வாறே இடைச் சங்க நூல்களில், தொல்காப்பியமென்ற இலக்கணம் தவிர மற்றையவை ஒன்றும் இப்போது அகப்படவில்லை. தொல்காப்பியமும் இப்போது நாம் வழங்கும் நூலோ, அல்லது இதைவிட மிகுந்திருந்ததோ, குறைந்திருந்ததோ என்று நிச்சயமாய்ச் சொல்ல வழி ஒன்றும் இல்லை. கடைச் சங்கச் செய்யுள்களில் பல அகப்பட்டு அச்சிட்டிருக்கிறார்கள். அவைகளில் முக்கியமானவைகள் பத்துப் பாட்டு, அக நானூறு, புற நானூறு முதலியவைகள். இவைகள் கி. பி. 400-க்கு முன்னரே பாடப்பெற்றவைகளென்பதற்குச் சந்தேகமில்லை.

வடமொழிச் சொற்கள், அலங்கார சாஸ்திரம், யாப்பு முறை, இவைகளின் உதவியின்றி தனக்குத் தானே தமிழ்ச் செய்யுள் உண்டாய் உயர்ந்தோங்கிற்று. ஆகையால் சங்கச் செய்யுளில் ஆரியச் சொற்கள் சிலவே தான் காணப்படும். திருமுருகாற்றுப்படையில் 317 வரிகளில் 60 வடமொழிச் சொற்களுக்குக் குறைவாக அமைந்துள்ளன.

பழைய அகவற்பா, வெண்பா முதலிய பாக்கள் தமிழிற்கே உரியன. ஸம்ஸ்கிருதத்திற்கு உரியனவல்ல. இது தவிர, இப்பண்டைய காலத்துப் பாட்டுகளில் உவமைகளெல்லாம் இயற்கைப் பொருள்களையே அதிகமாகக்கொண்டே கவிகளை அமைத்தார்கள். இதற்கு உதாரணமாக பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர் பெண்டிர் அழகைப் பின்வரும் பொருள் தருமாறு பாடியிருக்கிறார்:—ஆற்றில் படிப்படியாய்ப் படிந்து கிடக்கும் கருமணலை யொத்த கூந்தலினையும், பிறைபோன்ற அழகினையுடைய நெற்றியையும், கொல்லுந்தொழிலையுடைய வில்லை யொத்த புருவத்தினையும், குளிர்ச்சி பொருந்திய அழகிய கடைக்கண்ணினையும், இலவம்பூவின் இதழைப்போன்றிருக்கும் இனிய சொல்லையுடைய சிவந்த வாயினையும், பல முத்துக்கள் வரிசையாய் அடுக்கியிருப்பதுபோன்று குற்றமில்லாத வெள்ளிய பல்லினையும், மயிரை வெட்டுகின்ற கத்திரிகையினுடைய துளையுள்ள கைப்பிடியை ஒத்து பொலிவினையுடைய மகரம்போன்று செய்துள்ள காதணியை அணிந்துகொண்டிருக்கும் காதையும், நாணத்தினால் பிறரை நோக்காது தொங்கவிட்டிருக்கும் நன்மை விளங்குகின்ற கழுத்தினையும், அசைகின்ற மூங்கில் போல் பருத்துள்ள தோளினையும், அழகிய உரோமத்தை யுடைய முன் கையினையும், நீண்டு உயர்ந்த மலையின் உச்சியிலுள்ள காந்தள் மலர்போன்ற மெல்லிய விரலினையும், கிளியின் வாயைப்போன்றிருக்கும் விளங்குகின்ற நகத்தையும், ஓடி யிளைத்த நாயினது நாக்கைப்போன்றச் சிறிய அடியினையுமுடைய மங்கை யென்பதாம்.

நல்லூர் நத்தத்தனார் எயிற்பட்டணத்திலிருந்து வேலூருக்குப் போகும் வழியைப்பற்றிப் பின் வரும் பொருள் தருமாறு சிறு பாணாற்றுப் படையில் சொல்லி யிருக்கிறார்:—பச்சை நிறமுடைய அரும்புகளையுடைய அவரை பவழம்போல பூக்களை வரிசையாய்ப் பூக்கவும், கரிய அரும்பினையுடைய காயாம் செடிகள் திரண்ட மயிலின் கழுத்துப்போல் மலரவும், வளப்பமுடைய கொடியினை யுடைய முசுண்டை, நூல் நூற்கின்ற கொட்டையைப்போல் பூக்கவும், கொல்லைகளின் பக்கங்களில் உள்ள நீண்ட வழி களிலே இந்திர கோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்லவும், முல்லைக்கொடி படர்ந்த காட்டிடத்தில் குகைகளில் குதிக் கும் அருவியினையுடைய பெரிய மலையிலே சூரியன் மறைந்து அவன் கிரணங்கள் மறைந்த அந்திப்பொழுதைப் பார்த்து வேலாலே வெற்றியுடைய வேலூரைச் சேர்.

நக்கீரனார் நெடுநல் வாடையைப்பற்றிச் சொல்லு வது:—பருவம் பொய்யாத மேகம் உலகெல்லாம் குளிரும் படி, தான் கிடந்த மலையை வலமாக வளைந்து, எழுந்திருந்து கார்காலத்து மழையைப் பெய்ததாக வெள்ளத்தை வெறுத்த கொடிய கோலினையுடைய இடையர், ஏற்றத்தை யுடைய எருமையும் ஆடு முதலிய இனங்களையும் பசுக்களையும் மேட்டுநிலமாகிய முல்லை நிலத்தே மேயவிட்டு, தாம் பயின்ற நிலத்தைக் கை விட்டு, ஊரில் தங்காமல் போவதற்காக வருத்தமெய்தி, காந்தளினது நீண்ட இதழ்களால் கட் டின கண்ணி நீரலைத்தலாலே கலக்கமெய்த, தம் உடம்பில் குளிர்ச்சி வருத்துகையாலே பலரும் கூடிக் கையிலே நெருப்பைக்காய்ச்சி, அதிற்கொண்ட வெப் மையைக்கொண்டு பலபறை கொட்டி நிற்க, விலங்குகள்

மேயலை மறந்தொடுங்க, சூரங்கு குளிர்ச்சி மிக, மரங்களிலே பறவைகள் காற்றடித்துக் கீழேவிழ, பசுக்கள் கோபத்துடன் உதைத்துக் கன்றை நெருங்கவிடாதிருக்க, மலையைக்குளிர்ச்சி செய்வதுபோன்றுள்ள கூதிர்காலத்து நடுயாமத்தே, புல்லிய கொடியினையுடைய முசுட்டையில் திறண்ட புறத்தை யுடைய வெள்ளிய பூப்போன்ற நிறத்தையுடைய பீர்க் குடனே சிறு தூறுகள்தோறும் விரிய, வேகமாய் ஓடின நீரி னின்றும் ஒரு கால்வாயின் வழியே கயல்கள் அற்ற நீர்க்கு எதிரே வருகையாலே, மழையாலே வருந்தி அது சிறிது விட்டவுடனே எழுந்த பசிய காலையுடைய மெல்லிய சிறகையுடைய கொக்குத் திரள், சிவந்த வரியினையுடைய நாரைகளோடே கரியவண்டலிட்ட சேறு பரந்த ஈரத்தினை யுடைய வெள்ளிய மணலாகிய எவ்விடங்களிலு மிருந்து அக்கயலைத்தின்ன, பொங்குதலையுடைய வெள்ளிய மேகம் அகன்ற பெரிய ஆகாயத்தே சிறு துளியாகத் தூவ, அழகிய இடத்தையுடைய அகன்ற வயல் நிறைந்த நீராலே மிக்கெ ழுந்த வளப்பமான இலையையுடைய நெல்லினின்றும் புறப் பட்ட கதிர் முற்றிவளைய, பெரிய அடியினையுடைய கமுகினது நீலமணியை யொத்த கழுத்திற் கொழுவிய மடலிடத்துப் பாளைவிரிந்த திரட்சியைக் கொண்ட தாறுகளில் தெளிந்த நீரை உள்ளேயுடைய பசிய காய் நுண்ணிய நீர்தான் திர ளும்படியாக வீங்கிப் பக்கந் திரண்டு இனிமை கொள்ளும் படி முற்ற, விரவின பூக்கள் நிறைந்த உச்சியினை யுடையன வாகிய அகன்ற சோலை.

தாய் மொழியான தமிழைக் கற்காமல், புற நாட்டு மொழிகளில் இயற்கையழகைச் செய்யுளில் செவ்வையாய்ப் பாடியிருக்கிறதே, அவ்வகை தமிழிலுண்டாவென்று சிலர்

வினவுவர். கற்றோரும் கல்லாதோரும் சிறு கிராமங்களிலிருப் போரும் எப்பொழுதும் கண்டு களிக்கக் கூடிய பொருள்களான கயல், நாரை, நெற் கதிர், கமுகு முதலிய இயற்கைப் பொருள்களை, பிற நாட்டுக் கவிகளை விட 1500 வருஷங்களுக்கு முன்னதாகவே, இத்துணை இனிமையாய்ப் பாடியிருக்கும் தமிழ் பாக்களைத் தமிழர் கற்காமலிருப்பது எத்துணைத் துயரத்தைத் தருகின்றது. பண்டைய காலத்து வடமொழிச் செய்யுளிலாவது, இக்காலத்து ஐரோப்பியச் செய்யுளிலாவது, இத்தகைய வருணனை யுண்டோ?

[கி. பி. 400 முதல் 600 வரையில்]

(தெலுங்கு நாடு ஆண்ட பல்லவர்)

இந்த இருநூறு வருஷங்களில் பல்லவர் பலம் தமிழ நாட்டில் குறைந்து தெலுங்கு நாட்டில் ஓங்கியிருந்தது. அந்நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தார்கள். அவையாவன; நெல்லூரைத் தலைநகராய்க் கொண்ட முண்டராஷ்டிரமும், ஓங்கோலைத் தலை நகராய்க்கொண்ட கம்மராஷ்டிரமும், உப்பு வேலூரைத் தலை நகராய்க்கொண்ட வேங்கோராஷ்டிரமுமாம். இவ்விரு நூற்றாண்டில் ஆண்ட பல்லவமன்னர் சரித்திரங்களையும் தாமரப் பட்டயங்களிலிருந்து தான் அறிய வேண்டியிருக்கிறது. இந்தச் சாசனங்களெல்லாம் புண்ணிய காலங்களில் பிராமணர்களுக்காவது, தேவாலயங்களுக்காவது அரசர் செய்த தானங்களைக் குறிப்பனவே யாம். அகப்பட்டிருக்கின்ற இவைகளெல்லாம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருப்பவைகள். பிராகிருதத்தில் இராஜாங்க சம்பந்தமான உத்தரவுகள் எழுதுகிற வழக்கம், கி. பி. மூன்றாம் நூற்றாண்

டிலிருந்து இந்தியா தேசத்தில் ஒழிந்தது. தெலுங்கு பாஷை அப்போது சீர்திருத்த மடையாததால் இலக்கியத்தில் அதை வழங்கவில்லை. ஆகையால் கி. பி. 400 முதல் 600 வரையில் பிறந்த பல்லவ சாசனங்கள் எல்லாம் வடமொழியிலே எழுதியவைகள்.

இவ்வாறு தெலுங்கு நாட்டை ஆண்ட பல்லவ அரசர்களில் மிக்க மகிமை பெற்றவர்கள் கி. பி. 437 முதல் 459 வரையில் ஆண்ட ஸிம்ஹவர்மனும், கி. பி. 570 முதல் 600-வரையில் ஆண்ட நரஸிம்ஹ விஷ்ணுவும் ஆவர். ஸிம்ஹவர்மனை அக்காலத்திலிருந்த மன்னரில் உயர்ந்தவனாக எல்லோரும் எண்ணியதால் இப்போது மைசூர் என்று பெயர் வழங்கும் நாட்டில் அப்போது இராஜ்ஜியஞ் செய்த மேற்குக் கங்கையர் குலத்தரசன் ஆரியவர்மன் என்பான் பட்டாபிஷேகம் அடைய விரும்பினபோது, ஸிம்ஹவர்ம மகாராஜா கிட்டவிருந்து சிம்மாசனம் ஏற்றுவித்துப் பட்டாபிஷேகம் நடத்துவித்தான்.

ஸிம்ஹவர்மனது தந்தை விஷ்ணுகோபவர்மன். இவனது சேனாதிபதியான விஷ்ணுவர்மன் முண்டராஷ்டிரத்தில் உள்ள கந்துகூர் கிராமத்தில் ஒரு விஷ்ணு கோயில் கட்டுவித்தான். அக்கோயிலுக்கு விஷ்ணு கோபவர்மன் உருவப்பள்ளி கிராமத்தில் 200 * நிவர்த்தனம் நிலத்தைத் தானம் செய்தான். அந்தத்தான சாசனத்தைப் படித்துப் பார்த்தால், பல்லவர் அரசாட்சி முன்போலவே குறைவின்றி, தரும சாஸ்திரங்களில் சொல்லியபடி நடந்து வந்ததென்றும், சேனாதிபதிகளும் சர்வாத்தியக்ஷர்களும், வல்ல

* நிவர்த்தனம் — இருநூறு சதுர முழங்கொண்ட பூமி.

வர்களும் சாசன சஞ்சாரிகளும் தங்கள் தங்கள் வேலைகளைச் செவ்வையாய்ச்செய்து வந்தனரென்றுந் தெரிகிறது. அன்றி ஒவ்வொரு கிராமத்திலும்உள்ளநிலங்களை அளந்து,இராஜாங் கக்கணக்குகளில் சீராய் எழுதிவைத்திருந்தாரென்றுகாட்ட, உருவப்பள்ளி சாசனத்திலிருந்து சில வாக்கியங்களை எடுத்துத் தமிழ்ப்படுத்தி காட்டுகிறோம். "உருவப்பள்ளி கிராமத்தில் 200 நிவர்த்தனம் நிலம் உண்டு. இதற்கு எல்லைகளாவன:—மேற்கில் கந்துகூர் கிராமம் எல்லை. தெற்கில் சுப்பிரயோக நதி எல்லை. கிழக்கு எல்லையாவது, தென் கிழக்கு மூலையிலுள்ள பெருஞ்சாலைப் பக்கத்தில் ஒரு பாறையுண்டு; பாறைக்கு வடக்கு நோக்கிச் சென்றால் ஒரு புளிய மரமுண்டு; அதிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றால் கருப்பூர் கிராமத்துக்கும் கந்துகூர் கிராமத்துக்கும் போகும் வழியின் பக்கத்தில் ஒரு பாறை யுண்டு. அங்கிருந்து வடக்கேபோனால் கருப்பூர் கிராமத்து அந்தணர்கள் வயல்களுக்கு எல்லையில் ஒரு பெருங் கல் உண்டு; அதற்கு மேற்கே சென்றால் கொண்டமுருவுடு கிராமத்து எல்லை வந்து சேரும்." இவ்வளவு நுட்பமாய் நான்கெல்லையை சாசனத்தில் எழுதுமாறு இராஜாங்கக் கணக்குகள் எவ்வளவு ஏற்பாடாய் இருக்கவேண்டுமோ என்பதை ஆலோசித்து அறிய வேண்டும்.

கி. பி. ஆறாவது நூற்றாண்டு பிறக்குமுன்னரே சோழரைக் காஞ்சீபுரத்தினின்று போக்கடித்துப் பல்லவ மன்னர் மறுபடியும் கச்சிநகர்க் காவலர் ஆயினர். இவர்களில் நரஸிம்ஹவிஷ்ணு என்பவனைப் பிற்காலத்தியர் பின் பின்வருமாறு போற்றினர்:—"காடுகளைப்போல் அடர்ந்து

விளைந்த வயல்களையும், பிரகாசமான கமுகுத் தோட்டங்களையும் நகைகளாய் அணிந்த கவேரன் பெண்ணான காவிரியால் அழகுபெற்ற சோழநாட்டை விரைவாய்க் கைப்பற்றினன்", "அவனிஸிம்ஹனுன ஸிம்ஹவிஷ்ணு எப்போதும் பகைவரை அழித்து, மலய, களப்பிர, மாளவ, சோழ, பாண்டிய அரசர்களையும், தனக்குப் புஜபலம் அதிகம் என்று இறுமாப்புபெற்றிருந்த சிம்மள அரசனையும் கேரளரையும் ஜயித்தான்." இவ்வாறு புகழ் பெற்றதனால் நரஸிம்ஹவிஷ்ணு பல போர்கள் புரிந்து, பகைவரைத் தோற்கடித்து, பல்லவர் பராக்கிரமத்தை பலரும் போற்றுமாறு பரவச்செய்தான் என்று அறியவேண்டியது

இவ்விரு நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த பல்லவ மகாராஜர்கள் எல்லோரும் விஷ்ணு பக்தர்கள். அப்போது வைஷ்ணவர்களைப் பாகவதர் என்றார்; பகவான் என்பது ஸ்ரீமந் நாராயணனுக்கு விசேஷமாய் வழங்குவதால், சூரிய மண்டலத்துக்கு நடுவில் தாமரையாசனத்தில் கேயூர, மகர, குண்டலங்களைப்பூண்டு, கிரீடம், ஹாரம், பொன்மய உடல் சங்கு, சக்கரம் இவைகளால் பொலிந்து வீற்றிருக்கும் மகாவிஷ்ணுவை வழிபடுவோர்க்குப் பாகவதர் என்று நாமம் பிறந்தது. இந்தப் பல்லவர் சாசனங்களில் முதல் மொழிகள் 'ஜிதம் பகவதா,' அதாவது 'பகவான் வெற்றிபெற்றார்', என்றிருக்கும். அன்றியும் இப் பல்லவ அரசர்களைப்பற்றி பகவத் பாதங்களை எப்போதும் தியானம் செய்பவர்களென்றும், பரம பாகவதர்களென்றும் சாசனங்களில் கூறியிருக்கிறது. இதுவுமன்றி அவர்க்கு 'அநேக கிருது,' 'சதக்கிருது' என்றும் பெயரிட்டிருப்பதால், இவர் பக்தியார்க்கம்

அன்றி, கரும மார்க்கத்தையும் கைப்பற்றி வைதிக யாகங் கள் பலவற்றை நடத்தினுரென்று அறியலாம். இவையு மன்றி, தேவர்களுக்கு ஆகாரம் சமர்ப்பிவித்து இருபிறப் பாளரையும், குருவினரையும், கிழவர்களையும், ஆதரித்துப் பசு, பொன், நிலம் முதலியவற்றை அடிக்கடி தானம் செய்த தாகவும் எழுதியிருக்கிறது. ஆகையால் இப்பல்லவ வேங் தர் ஆரிய முறைகளை அதிகமாக இந்நாட்டில் பரவச்செய்தா ரென்று தெரியவருகிறது. ஆயினும் இவர் கட்டுவித்து, தா னங்கள் கொடுத்து விளங்கச் செய்த கோயில்கள் மரத்தா லும், செங்கல்லாலும் கட்டியவை யாகையால் சீக்கிரத்தில் இடிந்து போய் இப்போது அவையிருந்த அடையாளமே இல்லாமற் போயின.

அக்காலத்தில் ஆண்ட மற்றைய மன்னர்கள்.

கரிகால் பெருவளத்தான் இறந்தபின், சோழர் செல் வாக்கு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. மணிமே கலையில் கரிகாலனுக்குப் பிறகு இருசோழர் கச்சியில் ஆண் டதாகச் சொல்லியிருக்கிறது. பின்பு சோழர் வலிகுன்ற அவர்கள் முதலில் காஞ்சீபுரத்தை இழந்தார்கள். பின்பு உறையூரிலும் அவர் ஆட்சி தடுமாற ஆரம்பித்தது. பின்பு சோழநாட்டை ஆரும் நூற்ருண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த புத்தவர்மன் என்னும் பல்லவ அரசன் பற்றிக் கொண்டான். இப்புத்தவர்மனுக்கு 'சோழ சைந்யார்ணவ வாடவாக்னி', அதாவது 'சோழர் சேனையென்னும் கடலுக்கு ஊழித்தீ' என்ற புகழ்ப்பெயர் உண்டாயிற்று. சோழநாட்டினின்று அப்புறப்படுத்தப்பட்டு, சோழத்தலைவர் தெலுங்கு நாட் டின் ஓர் பகுதியான கடப்பை ஜில்லா பிராந்தத்தில் ஆளத்

தொடங்கினுர். இத் தெலுங்கு நாட்டுச்சோழரும் கரிகாலன் வம்சத்தைச் சேர்ந்தவரென்றே தங்கள் தாமரப் பட்டயங்களில் தங்களேப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். சோழர் அரசாட்சியிலிருந்து திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்கள் என்று இப்போது பெயருள்ள நாடு நழுவி, பல்லவரது ஆளுலும், சோழநாடு என்ற பெயர் அதற்கு இருந்துகொண்டே இருந்தது.

கரிகாலன் காலத்துக்குப் பின்பு பாண்டியர், சேரரது செல்வாக்கு உயர்ந்தது. அவருள் நெடுஞ்செழியனென்னும் பாண்டியனே தலையாலங்கானத்தில் போர் வென்றதிஞல் தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்று கூறுவர். இவன் ஒரு பெரிய வீரன். பகைவர்களை அடக்கும் ஆற்றலுடையவன். செங்கோல் வழுவாத கீர்த்தியுடையவன். கல்வியில் கருத்துடையவன். கற்றவர்களால் பாராட்டப் பெற்றுதலை விழைந்தவன். சொல் நயம் பொருள் ஆழம் அமைந்த கவிபாடும் பண்பினன். தலையாலங்கானத்தில் சேரமன்னரோடு கடும்போர் புரிந்து வெற்றி கொண்டான். பல குறு நிலமன்னர்களேயும் போரில் வென்ருன். அக்காலத்தில் சிறந்து விளங்கிய பெரும் புலவராகிய மாங்குடி மருதனுரால், 'மதுரைக்காஞ்சி' யென்ற அரிய நூலில் பாராட்டப் பெறும்பேற்றைப் பெற்றவன். குடபுலவியனுர் என்ற புலவர் இப்பாண்டி மன்னனேப்பார்த்துக் கூறும் செய்தி பாராட்டத்தக்கதாம். 'உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவர். உணவின்றேல் உடலில்லே. உணவாவது நிலத்தோடு நீர்கூடி விளேவதாகும். அத்தகைய நீரையும் ஒரு சேரக் கூட்டினவர்கள் இவ்வுலகத்தில் உடம்பையும், உயி

ரையும் படைத்தவராவர். 'நெல்லை விதைத்துவிட்டு மழையை நோக்கியிருப்போரது நிலம் எவ்வளவு விரிந்ததா யிருந்தாலும் அதனால் அரசன் ஆட்சிக்கு அதிகப்பயனில்லை. ஆதலால் நிலம் குழிந்துள்ள விடத்தில் நீரைத்தேக்கு. அங்ஙனம் செய்தவர் தங்கள் பெயரொடு அறம் பொருள் இன்பம் என்ற மூன்றுஞ் சேர்ந்து கிடக்கும்'. இவ்வரிகளை நோக்குங்கால் அறிஞர்கள் அரசர்க்கு எடுத்து உரைக்கும் விஷயத்தின் உயர்வும், அரசர் அதைக்கேட்கும் பான்மையும் புலப்படும். உழவிற்கு இன்றியமையாது வேண்டப்படும் நீரைச் சேகரிக்கும் வகையில் அவர்களுக்கிருந்த எண்ணமும் வெளிப்படையாகத் தோன்றும்.

இவனுக்குப் பின்பு செங்குட்டுவனென்ற சேரன் ஒருவன் பிரசித்தி பெற்றான். சேரர் மன்னர்களுக்குள் சிறந்து விளங்கியவன். இவன் ஆண்டபோது ஆரியப்போர்தந்த பாண்டியன் பாண்டிநாட்டை ஆண்டுவந்தனன். இவன் காலத்தில் தான் கற்புக்கரசியாகிய கண்ணகி, தமிழ் நாட்டிடைத்திகழ்ந்தனள். கண்ணகி, கோவலன் கொலையுண்ட பின்னர், மதுரையைத் தீக்கு இறையாக்கி சேரநாடடைந்து, மலையின் உச்சியிலேறி தனது கணவனோடு விமானம் ஏறி சொர்க்கம் புகுந்தனள். இதைக் கேள்வியுற்ற செங்குட்டுவன், கண்ணகியைப் பத்தினிதெய்வமாகப் பாராட்டக் கருதி, வடநாடு சென்று இமயமலையில் கல் வெட்டிக் கொண்டு வந்து, கங்கையில் அக்கல்லை நீராட்டி, கண்ணகியின் உருவம் அதிலமைத்து பிரதிட்டை செய்தான். இதைக் கேள்வியுற்ற இலங்கையரசனாகிய கயவாகும், கண்ணகியின் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்தானென்பர். கண்ணகியின் சரிதையாகிய சிலப்பதிகாரத்தைப் பாடியவர் இச்சேரன்

செங்குட்டுவனது தம்பியாகிய இளங் கோவடிகள்தான். இவருடன் உடன்வாழ்ந்த கூல வாணிகன் சாத்தனார் தான் மாதவியின் மகளாகிய மணிமேகலையின் சரிதையைக் கூறியுள்ளார். ஆகவே தமிழுக்கு அணியாக விளங்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டு காவியங்களும் இவர் காலத்தில் தான் தோன்றின. இன்னும் இவரது கொடை, செங்கோன்மை, அருள், அன்பு, வீரம் முதலியவைகளைப் பற்றி பதிற்றுப்பத்து, புறநானூறு முதலிய நூல்களில் விரிவாய்க் காணலாம்.

மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் ஆட்சி சிறிது சிறிதாகக் குன்றுங்காலத்தில் குறு நிலமன்னர்கள் சிறந்து விளங்க ஆரம்பித்தனர். அவர்களுள் இருவர் சரிதையைப் பார்ப்போம். இக்குறு நிலமன்னர்களுள் பலவகைகளாலும் சிறந்து விளங்கியவன் பாரி. இவன் கடை யெழுவள்ளல்களில் ஒருவன். இவன் ஆண்ட நாட்டைப் பாம்பு நாடு என்று கூறுவர். இவன் மிகுந்த அருளுடையவன். ஓரறிவு உயிர்களாகிய செடி கொடிகளிடத்திலும் மிகுந்த இரக்கமுடையவனாய் விளங்கினன். முல்லைக் கொடி யொன்று படர்வதற்குத் தன் தேரைத் தந்தனன் என்று சிறுபாணாற்றுப்படை யென்ற நூல் கூறும். இவன் தனது நாடு முழுவதையும் அறிஞர்கட்கும், வறிஞர்கட்கும் கொடுத்து உதவினன் என்பர். இவனிடத்தில் பொறாமை கொண்ட தமிழ் நாட்டு மூவேந்தரும்; இவனை வஞ்சனையால் கொன்றனர் என்பர். இவர்க்கு உயிர்த்தோழராய் விளங்கியவர் கபிலர் ஆவர். இக்கபிலர் பாரியைப்பற்றிப் பாடிய பாட்டுகள் பலவுண்டு. இம்மன்னர்க்கு இரண்டு புத்திரிகள். அவர்களை அங்கவை சங்கவையென்பர். அவர்களும் அறிவில் உயர்

ந்து கவிபாடும் சக்தியைப் பெற்றிருந்தனர். சைவ சமயத் தலைவராகிய சுந்தரமூர்த்திகளும் இப்பாரி மன்னனைத் தமது அரிய தேவாரத்தில் பாராட்டியிருக்கிறார். ஆதலால் இவரது பெருமையை அளவிட்டு கூறுதற்கு அரிது.

இப்பாரியைப் போன்றே சிறந்து விளங்கிய மற்றொரு குறுநிலமன்னன் அதியமான் நெடுமானஞ்சி ஆவன். இவன் ஒரு சிறந்த வீரன். சேரமன்னர்க்குச் சிறந்த உறவினன். வாழ்நாளை நீட்டிக்கக்கூடிய கருநெல்லிக்கனியை ஔவைக்கு அளித்தவன். பாணர் என்ற புலவரால் பாராட்டப் பெற்றவன். இவன் ஊர் தகடூர் ஆகும். இவன் மகனை பொகுட்டெழினி யென்பர். இவனைப்பற்றி ஔவையார் பாடிய பாடல்கள் மிகவும் சுவையுடையனவாகும். இவனது உயர்வைக்காட்டும் பாக்கள் பல புறநானூறு என்ற நூலில் உண்டு.

சமயநிலை மாறுபாடுகள்.

இவ்விரண்டு நூற்றாண்டுகளில் சமணநெறியும், பௌத்தநெறியும் தமிழ்நாட்டில் அதிகமாய்ப் பரவி தேசமெல்லாம் நிரம்பின. சமணர், பௌத்தர் கொள்கைகள் தமிழரது பண்டைய முறைகளுக்கும், அந்தணரது வைதிக கருமங்களுக்கும் எதிரானவை. தமிழர் கிடாவை அறுத்து அவர் தொழும் கடவுளர்க்குப் பலியிட்டார்கள். அந்தணர் யாகங்களில் விலங்குகளைக் கொன்று, அவைகளின் வபையை யெடுத்து அக்கினி முகமாய்த் தேவர்கட்குச் சமர்ப்பித்தார். இவ்வாறு செய்யும் தொழு முறையைக் கருமநெறி யென்பர். சமணரும், பௌத்தரும் அறநெறி என்பதில் நடப்பவர்.

சிலப்பதிகாரத்தில் சமண முனிவரைப்பற்றி ஊனைத்துறந்து பொய்கூறுமையாகிய விரதத்தோடு பொருந்தி அழுக்காறு, அவா முதலியவற்றைக் கைவிட்டு, அறநூல் முதலியவற்றை யறிந்து ஐம்புலனையு மடக்கிய கோட்பாட்டையுடையவராய், உண்மை வகையுணர்ந்த சிரியோர் என்று சொல்லியிருக்கிறது.

சீவகசிந்தாமணியில் ஒரு சமணனுக்கும் ஒரு குறவர் தலைவனுக்கும் நடந்த பின்வரும் வாதம் சமணர் கொள்கைகளைக் காட்டும்.

குறவன்:—ஆண் பன்றியோடே எய்ப்பன்றியையுங் கொன்று சமைத்த புழுக்கலைத் தேனை மிகவார்த்துத்தின்று, பின்பு நெல்லாலாக்கின கள்ளையும் உண்போம்.

சமணன்:—முற்பிறப்பில் ஊன் முதலியவற்றை யுண்டு, உயிரையும் கொன்ற பாவத்தாலே இவ்விடத்து எயினராய்ப் பிறந்தது. இனி இவற்றைக் கைவிடுமின்.

குறவன்:—பலரும் நன்றென்று கூறும் கள் முதலியவற்றைக் கைவிட்டால் யாங்கள் எங்ஙனம் பிழைப்போம்? எம்முடைய உடம்பை நீ வாட்டவேண்டாம். ஒழிந்த உடம்புகளை வாட்டுவாயாக.

சமணன். ஊனைச் சுவைத்து உடம்பை வளர்த்து நரகத்தில் உறைதல் நன்றோ? ஊனைத் தின்னாதே உடலை வாட்டித் தேவராயுறைதல் நன்றோ? கடைப்பிடித்து இவ்விரண்டினுள்ளும் நல்லது நீ கூறு.

குறவன். ஊனைத் தவிர்ந்து தேவனாதலே உறுதி.

சமணன். நீ உறுதிபுணர்ந்து கூறினையாதலின், எடா! இனி உயர்கதியிலே போவை. இறைவனூலிற் காணப்படுவது, கொல்லா விரதத்தோடே ஊன் துறத்தலுந்தான். ஆதலில் காட்டிற் கிழங்கை யுண்ணவே இன்றே இன்ப வெள்ளத்தைச் சேர்ந்தாய். இவ்வொழுக்கம் நினக்கு இறுதிக்கண் பேரின்பஞ் செறியுங் கனியாகும். குறிக்கொள்.

பௌத்தர் சமயம் சமணரதுபோல் கொல்லா விரதம் முழுவதும் ஒப்பினதல்ல. ஊனை அடியோடே அவர் விட்டிலை. சமணரது அறநெறியை மாத்திரம் பௌத்தர்கள் தொடர்ந்தார்கள். அவர்களது முக்கியமான கொள்கைகளாவன:—ஆசையால் துக்கமுண்டாகும். ஆகையால் வேட்கையை வெறுப்பதே மக்கட்குக் கடமை. அவா என்பது எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் பிறப்பீனும் வித்து. இந்த வித்தை எரித்துவிட்டால் மறுபிறப்பற்று நிர்வாணம் எய்தலாம். நிர்வாணமென்பது தனித்துப் பார்த்துப் பற்றறுத்திடுதல். நற்கதி வராதிருத்தலுக்குக் காரணம் குற்றம். குற்றமெனக் கூறப்படுவன அவா, பற்று, பேதைமை என்றிவை.

பௌத்தர் நீதிகளை இளங்கோவடிகள் கண்ணகி, கோவலன் சரித்திரத்தைக் கூறும் முகத்தால் தொடுத்துக் கூறியுள்ளார். அவையாவன:—பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாதீர்கள். தெய்வமுண்டென்று தெளியுங்கள். அவ்வாறு தெளிந்தோரைப் போற்றுங்கள். பொய் பேசாதீர்கள். கோள் சொல்லாதீர்கள். புலால் உண்ணாதீர்கள். கொலை புரியாதீர்கள். பிறர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுங்கள். பலவகைத் தானதவங்களை இயற்றுங்கள். ஒருவர் செய்த

உதவியை மறக்காதீர்கள். தீய நட்பை ஒழியுங்கள். பொய்ச் சாட்சி புகலாதீர்கள். வாய்மையை விடாதீர்கள். நல்லோரை நாடுங்கள். தீயோரை விலக்குங்கள். மரிக்கிற உயிரைக் காப்பாற்றுங்கள். இல்லற தருமத்தைப் போற்றுங்கள். கள்ளையும், காமத்தையும், களவையும், பொய்யையும், பயனில்லாத வார்த்தைகளையும் ஒழியுங்கள். பாலியமும், பொருளும், உடலும், நிலைத்திருக்கா. ஆதலால் நாட்களை வீணாக்காது இறுதியில் போகவேண்டிய இடத்திற்கு ஏற்ற துணையைத் தேடிக்கொள்ளுங்கள்.

பௌத்தர் கொள்கைகளுள் மற்றொன்றை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையில் உள்ள ஒரு சிறு கதையிலிருந்து காணலாம். ஒரு நாள் மணிமேகலையென்ற மாது சுடுகாட்டில் புலம்பிக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டாள். அவள் தன் குழந்தையின் மரணத்தை எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தாள். அவளைக் கண்ட மணிமேகலை மனமுருகிப் பின் வருமாறு கேட்டனள். 'இளங்குழந்தைக்கு ஏங்கி இருந்து புலம்புகின்றாய்? பூங்கொடி போன்றவளே! பொருந்தாத காரியத்தைச் செய்கின்றனை. உன் குழந்தையின் உடலைக் கருதி வருந்துகின்றாயா? அல்லது உயிரைக்கருதி வருந்துகின்றாயா? உடலுக்காக அழுதாயானால், அவ்வுடலை ஏன் சுடுகாட்டிற்குக் கொண்டுவந்தாய்? இல்லை, உயிருக்குத்தான் கவலைப்படுகிறேன் என்றால், உயிர் எவ்வுடலைப் பெறுமென்று நம் சிற்றறிவால் அறிவதற்கில்லை. ஆதலால் அவ்வுயிரிடத்தில் உண்மையாய் நீ அன்புகொண்டிருந்தால், எவ்வுயிரிடத்திலும் அன்புகொள்ளவேண்டும்'. சமணமும்,

பௌத்த மதமும் எவ்வளவு பரவி யிருந்தன என்று சிலப்பதிகாரத்தைப் படித்தால் செவ்வையாய்த் தெரியும். கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம் பட்டினத்தை நீங்கி வரும்போது பல தவச்சாலைகளைக் கண்டனர். அவற்றுள் ஒன்று இந்திரனால் நிருமிக்கப் பெற்றது. அது எழுவிகாரங் களை யுடையது. அதனடியில் ஆகாய சாரிகள் மறைய இருந்துகொண்டு ஆகமத்தை ஓதி அதற்குப் பொருள் கூறுவர். இவ்வாகமம் ஓங்கி வளர்ந்துள்ள ஐந்து கிளைகளை யும் பசிய இலைகளையு முடைய மாபோதி என்ற மரத்தின் நிழலி லெழுந்தருளிய தரும சொரூபியாகிய புத்தரால் அருளப் பெற்றது. வேறு சிலவிடங்களில் சந்திரகாந்தக் கல்லால் கட்டிய இடங்களுண்டு. இவைகளைப் பிண்டி மரத்தினடியில் கட்டி யிருப்பர். இம்மரமானது பஞ்சபரமேஷ்டிகளாகிய அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள், என இவர் வாழுந் தெருக்கள் கூடுமிடத்தில் இருக்கும். இவைகளில் பலர் உயர்ந்தவர் இருப்பர். அவர் புலால் உண்ணார். பொய் பேசார். அவர் அழுக்காறு முதலியவைகளை ஒழித்து அறநூல் முதலியவற்றை அறிந்து உணர்ந்தவர். ஐம்புலன்களையு மடக்கிய திறமுடையவர். உண்மை உணர்வைப் பெற்றவர்.

சமணமும் பௌத்தமும் முதலில் துறவிகள் கொண்டு வந்த நெறிகள். வர வர இத்துறவிகளுக்கு இல்லத்தாரும் சிஷ்யர்களானார்கள். அரசர்களும் செல்வமிகுந்த செட்டிகளும் இந்நெறிகளைப் பின் தொடர்ந்து பெரும் மடங்களைக் கட்டினார்கள். கட்டி முனிகளை ஆதரணை அதிகமாகச் செய்யவே, துறவிகளும் அறநெறியி லிருந்து நெகிழ்ந்தார்

கள். சாதாரண ஜனங்களுக்கும் கரும மார்க்கம், பக்தி மார்க்கம், இவைகளிலுண்டாகும் மன உருக்கம் ஞானமார்க்கத்தில் உண்டாகவில்லை. விஷ்ணுவையும் சிவனையும் தொழுது போற்றல் மனதுக்குக் குதூகலத்தை உண்டு பண்ணும் முறையாகும். சிவனது திருவிளையாடல்களைப் பற்றிய கதைகளையும், விஷ்ணு தமது திருவவதாரங்களில் நிகழ்த்தின விந்தைகளையும் ஆரிய மொழியில் பிறந்த இதிகாச புராணங்களிலிருந்து சொல்லக் கேட்க மக்களுக்குப் பக்தி பரவிற்று. சிவன் கோயில்களும் விஷ்ணு ஆலயங்களும் தென்னாட்டில் சிறிது சிறிதாய் அதிகரித்தன. பல்லவ சாசனங்கள் பிறந்த காலமுதல் பல்லவர்கள் கோயில்களுக்கு தானதருமம் செய்து வந்தாரென்று முன்னமே கண்டறிந்தோம். பெரும்பாணாற்றுப்படையிலேயே இளந்திரையன் காலத்தில் காஞ்சிப்பதியிலுள்ள திருவெஃகாவில் "பாம்பணைப்பள்ளி அமர்ந்தோன்," அதாவது, பாம்பணையாகிய படுக்கையில் துயில்கொண்டோனாகிய திருமாலது கோயில் இருந்ததெனப் பாடியிருக்கிறது. கரிகாலன், காஞ்சிக் கோயிலைப் பொன்னாற் புதுப்பித்தானென்ற கதையைக் கண்டிருக்கிறோம். இப்போது அறநூல்களை வருந்திக் கற்று, ஞான நெறியில் நடக்க முயல்வதைவிட இறுமாப்பற்று எளிய தொண்டுகளைக் கோயில்களில் செய்வதும், பூசைக்குரிய பொருள்களைத் தேடிக் கொடுப்பதும், கடவுளை இடைவிடாது போற்றுவதும், அவன் திருவடியைச் சேர நன்முறைகளாகு மென்ற உணர்ச்சி நாடெல்லாம் நிறைந்தது. நிறைய, அரசர்கள் சிவன் கோயில், விஷ்ணு கோயில்கள் பல கட்டத் தொடங்கினார்கள். இவ்வாறு கோயில் கட்டினவரில் முக்கியமானவன் கோச்செங்கண்ணன் என்

னும் சோழ அரசன். இவ்வரசனுக்கு சிவ பெருமானிடத்தி லும், திருமாலிடத்திலும் அதிக பக்தி உண்டு. இவன் கட்டிய ஆலயங்கள் பல. ஒரு சிலந்தி தான் செய்த புண்ணிய மிகுதியால் இவ்வாறு சிறந்த அரசனாகப் பிறந்தானென்று புராணங்கள் கூறும். இவனைச் சைவப் பெரியார் தேவாரத்திலும், வைணவப் பெரியார் பிரபந்தத்திலும், பாராட்டிக் கூறியிருக்கின்றார்கள். ஆதலால் இவன் பெருமை அளவிடற்கரிதாம். இம்மன்னர் காலத்திலும், இவருக்கு முந்திய காலத்திலும், தமிழ்நாட்டில் சிவனடியார்கள் பலருண்டு. அவர்களுள் இருவர் கண்ணப்பரும், சண்டிகேசுவரரும் ஆவர். கண்ணப்பர், வேட்டுவகுலத்திற் பிறந்து, வேட்டையாடச் செல்கையில் காளத்தி மலையையடைந்து, தம்முடைய கண்ணை யெடுத்து, அம்மலையின் மேலுள்ள சிவ பெருமானுக்குச் சாத்தியதால் அப்பெயரைப் பெற்றனர்.

சண்டிகேசுவரர் சோழநாட்டில் பிராமணர் குலத்திற் பிறந்து, தினந்தோறும் பசுமந்தைகளை நதிக்கு மேய்த்துச் சென்று பாலைக் கறந்து, மணலைக்குவித்துச் சிவலிங்கமாக அமைத்து அபிஷேகம் செய்து வருகையில், அவர் தகப்பனார் இதையறிந்து அவர் செய்துவந்த காரியத்திற்குக் கெடுதல் செய்த பொழுது, தகப்பனார் காலை வெட்டி, சிவபெருமான் தாளை யடைந்தார்.

விஷ்ணுவினது சரிதைகள் முதலில் இராமாயணம் மகா பாரதம் என்ற இதிகாசங்களில் வடமொழியில் முறையே வால்மீக முனியும், வியாசமுனியும் எழுதி, உலகத்தார் உணர்ந்து உவக்குமாறு ஈந்தார்கள். பின்பு பதினெண் புராணங்களில் சில விஷ்ணு பரமாயும் சில சிவன் பரமாயும்

பிறந்தன. இந்நூல்களில் கடவுள் கருணையைக் காட்டும் கதைகளே அதிகமாயுள்ளன. விஷ்ணுவையோ, சிவனையோ வழிபட்டு, பூசை செய்ய வேண்டிய முறைகளை ஆகமங்கள் என்னும் வட மொழி நூல்களில் எழுதினார்கள். வைஷ்ணவ ஆகமங்கள் 108; சைவாகமங்கள் 28; இவையன்றி உலகத்தின் தாயான சக்தியைப்பற்றி ஆகமங்கள் 77; எனினும் வட இந்தியாவைப்போல் தென்னிந்தியாவில் ஜகதம்பாள் பூசை பரவவில்லையாகையால் வைஷ்ணவம், சைவம் இவற்றைப்பற்றி இங்கே சொல்லவேண்டியதன்றி சாக்தம் என்ற அரிய நெறியைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை. மேற்கூறிய ஆகமங்களைத் தவிர, அவைகளை யொட்டி எண்ணிறந்த கிரந்தங்கள் இம்மும்முறைகளைப்பற்றினவை வட மொழியில் உள. இவையெல்லாம் இரகசியமாகவே உள்ளன. இக்காலத்தில் எளிதாய் அகப்படக்கூடியவை 4, 5, விட அதிகமில்லை. அச்சிட்டவை இன்னும் குறைவு. இவைகளைத் தமிழில் மொழிபெயர்க்கவுமில்லை. இவைகளைக் கற்றறிந்தவர்கள் அந்தணரினும் அரிதே. மற்றவர்களில் பெரும்பாலார் இத்தகைய நூல்கள் இருக்கின்றனவென்று கூட அறியார்.

ஆகம நூல்கள் கிரியை, சரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்களாகப் பிரிந்துள்ளன. கிரியை என்றால் கோயில் கட்ட அஸ்திவாரம் போடுவதற்காக நிலத்தை உழுதல் முதலாக கட்டி முடியும் வரைக்கும் செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் விவரிக்கும் பாதம். சரியை யென்னும் பாதமானது கோயில்களில் நடக்க வேண்டிய நித்திய நைமித்திக பூஜைகளைப்பற்றிச் சொல்வது. யோகத்தில் தியானம் செய்யும்முறைகளும், அவை பயக்கும் பயனும்

படிப்போர்க்குத் தெரியுமாறு சொல்லியிருக்கும். ஞான பாகத்தில் தத்துவங்கள் எவை? அவை எத்தகையவை? என்று காட்டியிருக்கும். பக்தி மார்க்கம் வீடு பெறுவதற்கு எளிதான சாதனம் என்பதிலும், கடவுளினது கருணையாலன்றி மோக்ஷம் பெற வேறு வழி இல்லை என்பதிலும், சைவமும் வைஷ்ணவமும் ஒன்றே. அன்றியும், நித்தியப் பொருள்கள் மூன்றே, ஒன்றல்ல என்பதிலும் இவ்விரு சமயங்களும் ஒத்திருக்கும். ஆனால் இம்முப்பொருள்களுக்கும் சைவர் பதி, பசு, பாசம் என்று பெயரிடுவர். பதி என்றால் சிவன்; அளவற்ற அருளைக்காட்டிப் பசு என்னும் மக்கள் வீட்டைப்பெற்று உய்ய உதவி செய்வோன் அவன்; பாசம் என்றால் சடம் என்ற அறிவற்ற பொருள்களைக் குறிக்கும். இவை பசுக்களுக்கு இன்பமும் துன்பமும் தருகின்றவை. இவைகளின் கட்டிலிருந்து தப்பிப்போய்ப் பேரின்பம் பெறுவதே பெரும்பேறான வீடு. இம்மூன்று பொருள்களுக்கும் வைஷ்ணவ ஆகமங்களில், ஈசுவரன், சித்து அசித்து, என்று பெயர். ஈசுவரன் என்றால் திருப்பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் திருமால்; சித்தென்றால் ஜீவான்மாக்கள்; அசித்தென்றால் சடப்பொருள். சரியை, கிரியை, யோக, ஞானங்களில் சைவாகமங்களுக்கும், வைஷ்ணவாகமங்களுக்கும் பேதம் அதிகம் காணோம். முதற் கடவுளுக்கு சைவர் சிவனென்றும், வைஷ்ணவர் விஷ்ணு என்று பெயரிடுவதிலும், அவர் திருவிளையாடலைப்பற்றிச் சொல்லும் கதைகளுள்ளுந்தான் இவ்விரு நெறிகளிலும் வேற்றுமை; கொள்கைகளில் மாறுபாடு அதிகம் காணோம். முதலில் பக்தி யதிகத்தால் சைவர்

சிவனை விஷ்ணுவினும் உயர்ந்தவனென்றும், வைஷ்ணவர் விஷ்ணு சிவனினும் அதிகமென்றும் போற்றத் தொடங்கி, பின்பு இருதிறத்தார் உள்ளத்திலும் பகை முதிர்ந்து, இவ்விரு சமயத்தாருக்கும் சண்டைகள் உண்டாயின.

வைதிக யாகங்களும் பரவின. அதனால் நாட்டில் அந்தணர் அதிகரித்ததுமல்லாமல், நான்கு ஜாதிகள் என்ற வகுப்புகளும் பிறந்தன. ஆரியமுறை பரவுமுன் தமிழர், வாழுமிடத்தைப்பற்றியும், அதனால் உண்டாகும் தொழில் வேற்றுமையைப்பற்றியுமே வகுக்கப்பெற்றிருந்தனர். நிலம், குறிஞ்சி என்னும் மலை நாடும், முல்லை என்ற காடும், மருதம் என்கிற நீர் நிறைந்த பள்ளத்தாக்கும், நெய்தல் என்கிற கடற்கரையும், பாலை என்கிற நீரற்ற மணற் பாங்குமாக ஐந்து வகுப்புகள் கொண்டது, இவ்வகுப்புகளில் குடியிருக்கும் மக்களும் முறையே குறவர், இடையர் அல்லது ஆயர், வேளிர், பரதர், மறவர், அல்லது எயினர் என்ற ஐவ்வகையினர். குறவர் மலைநாட்டுப் பொருள்களைக்கொண்டு செய்யும் கைத்தொழில்களில் பயிற்சியுடையவர். வேட்டையாடுவதிலும் தேர்ச்சியுள்ளவர். ஆயர் ஆவினம், ஆட்டினம் முதலியவற்றைப் பேணுவர். வேளிர் வேளாண்மையில் சிறந்தவர். பரதர் கப்பல் நடத்துவதிலும், மீன் பிடிப்பதிலும் திறமையுள்ளவர். மறவர் பாலை நாட்டில் திரிந்துகொண்டு, தைரியமும் தேகபலமும் நிறைந்து போர்புரிவதில் திறமடைந்து மறத்தொழில்களில் காலங்கழிப்பவர். இவ்வைவ் வகையார் வாழ்ந்து வசித்த இடங்களுக்கு தனிப்பெயர்கள் தமிழில் உண்டு. குறவர் குடியிருப்பது குடி, குறிச்சி; இடையரிருப்பது சேரி, பாடி; வேளிர் வசிப்பது ஊர்;

பரதர் இருப்பது பாக்கம்; மறவர் உள்ள இடம் குறும்பு என்று பெயர்களைப் பெறும். இந்த ஐந்து பிரிவுகளாய்ப் பிரிந்த மக்கள் அனைவரும் ஊனைத்தின்பவர்; கள்ளைக்குடிப்பவர். இவ்வாறிருந்த நாட்டில் ஆரிய முறைகள் பரவ, நான் மறையை ஓதி, யாகங்களையும், ஆகமமுறைப்படிப் பூசைகளையும் செய்வோரை அந்தணராகவும், அரசுரிமை பூண்டோரை அரசராகவும், வாணிபம் செய்வோரை வைசியராகவும், ஏனையதொழில் புரிவோரை சூத்திரரென்றும் பிரித்தனர்.

நான்கு வருணங்களென்ற வகுப்பு முதல் முதல் யாகங்களுக்காகப் பிறந்தது. வேத மந்திரங்களை ஓதி, அக்கினி காரியங்களைச் செய்து, சீலமும், நற்குணங்களும் நிரம்ப இருந்தவர் பிராமணர் என்றும், வாஜபேய, அசுவமேதாதி பெரும் யாகங்களைச் செய்வித்துப் பிரஜைகளை ஆதரிப்போர் க்ஷத்திரியரென்றும், வேளாண்மை, வணிகம், ஆவின பரிபாலனம் இவைகளை நடத்தி சிறு யாகங்களுக்குச் செல்வம் அளித்து நடத்திவைப்பவர் வைசியரென்றும், சேவை மாத்திரம் செய்பவர் சூத்திரரென்றும், வடநாட்டில் மனிதரை நான்கு வருணங்களாக முற்காலத்தில் பாகுபாடு செய்தார். இது வைதிக தருமம். இந்த வைதிக தருமப்பிரகாரம் பிராமண வருணத்தாராய்ப் பிறந்து, பிரமசாரி, கிருகஸ்த, வானப்பிரஸ்த ஆச்சிரமங்களை முறையே சார்ந்து பின்னர் சன்னியாசிகளாய் ஞானமார்க்கத்தில் சீராய் ஒழுகி, ஞானோதயமான பின்புதான் மோக்ஷம் பெறலாம் என்பது முடிபு. ஆனால் ஆகமவழியில் உள்ள சைவ, வைஷ்ணவ, சமண, பௌத்த நெறிகளில் நடப்பவர் எச்

சாதியில் பிறந்தவராளுலும் வீடுபெறலாம் என்பது ஆகமக் கொள்கை. ஆகையால் தமிழர் ஆகம வழிகளில் ஒன்றைக் கைப்பற்றினரேயன்றி, வைதிக நெறி வட இந்தியாவிற் போல் தென்னிந்தியாவில் அதிகமாய்ப் பரவவில்லை. அரசர் சிலர்மாத்திரம் யாகங்களை நடத்திஞராகையால் அவர்களை க்ஷத்திரியராகக் கொண்டாடினர்கள். மற்றையவர்கள் எச் சாதியராளுலும் சிவதீட்சை, விஷ்ணுபக்தி, சமண பௌத்த துறவறம் இவைகளைப் பின்தொடர்ந்து வீடுபெற முயன் றார்கள்.

இலக்கிய நிலை.

சமணர் தமிழ்நாட்டில் அதிகமாய்ப் பரவப் பரவ, அவர் தமிழ்மொழி பயின்று அதில் புலவராயினர். வடமொழியி லும் புலமையுள்ளவராகையால், ஆரியம் தமிழில் விஸ்தார மாய்க் கலக்க இடமுண்டாயிற்று. அன்றியும் மதுரைச் சங் கத்துக்கு போட்டியாய் விஜயநந்தி என்பான் கி. பி. 470-ம் ஆண்டில் சமணர் தமிழ்ச்சங்கம் ஒன்றை ஏற்படுத்தி நடத் தினதாக ஒரு பழங்கதையுண்டு. ஐம்பெரும் தமிழ்க் காவி யங்களும் பிறந்தன. இவை.—சீவகசிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. இவைக ளின் பெயர்களைப் பார்த்தாலே கி. பி. 400-முதல் 600-வரையில் தமிழில் வடமொழிச் சொற்கள் எவ்வளவு கலந் தன என்று தெரியவரும். இவைகளைத்தவிர பெருங்கதை என்ற பிராகிருத நூலைத் தமிழில் மொழி பெயர்த்தனர்.

கி. பி. 400-க்கு முன்பிறந்த தமிழ் நூல்களில் பெரும் பாலும் தனித் தமிழ்மொழிகளே யுண்டு. திருமுருகாற்றுப்

நடையில் 317-வரிகளில் 60-ஆரியச் சொற்களுக்குக் குறைவாகவே உண்டு என்று முன்னமே சொன்னோம். சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் 13-வரிகளை எண்ணிப்பார்த்ததில் 25-ஸம்ஸ்கிருத பதங்கள் அகப்பட்டன. இதுவன்றி அகப்பொருட்சுவை மலிந்த நூல்கள் குறைந்து, வட மொழிக்காவிய நடையில் எழுதிய செய்யுள்கள் அதிகரித்தன.

இந்த ஐந்து காவியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முன்னரும், சீவகசிந்தாமணி பின்னரும், இயற்றப்பெற்ற நூற்கள். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காதை காதையாய்ப் பிரிந்துள்ளன; சீவகசிந்தாமணியோ இலம்பகங்களாகப் பிரிந்துளது. அன்றியும் முன்னிரு காவியங்களில் உள்ள காதைகள் அகவற்பாவைப்போல் தொடர்ந்துள்ளன. திருத்தக்கதேவ ரியற்றிய சீவகசிந்தாமணியிலோ ஒவ்வொரு இலம்பகமும் நான்கு நான்கு வரிகளாலான விருத்தங்களாலாயது. இதுவுமன்றி, ஓரிடத்தில் நாகப்படுக்கையில் மாயோன் துயிலுமாறுபோலக் காந்தளைப் படுக்கையாகக்கொண்டு, யானை துயிலும் அழகிய சாரலைப் போலப் பல்லவ தேசத்தை எண்ணி அதன் நகரிலே புகுந்தபடியும் என்றும், வேறிடங்களில் பல்லவதேச மன்னன் போர்புரிந்ததாகவும் இருப்பதால், காஞ்சீபுரத்தை மறுபடி பல்லவர் பற்றிக்கொண்ட பின்புதான் இக்காவியம் இயற்றியிருக்கவேண்டும். மணிமேகலை இயற்றுங்கால் சோழர் ஆட்சியில் காஞ்சீபுர மிருந்ததென்று முன்னமே சொன்னோம். ஆகையால் சீவகசிந்தாமணி மற்றிரு நூற்களுக்கு நூறு வருஷங்களுக்குப்பின் உண்டானது என்று அறியலாம். இந்தச் சீவகசிந்தாமணியின் நடையைப் பின்பற்றியே கம்பன் இராமாயணம் பாடினான் போலும்.

கி. பி. 400-க்கு முந்தி இயற்றிய செய்யுள்களில் இயற்கைப் பொருள்களின் அழகை இனிய முறையாய்ச் சொல்லி யிருப்பதைக் காட்டினோம். இக்காலத்திய காவியங்களிலோ அவ்வாறில்லாமல், வடமொழிக்காவியங்களைப் போல், எளிய எண்ணங்களை அரிய மொழிகளைக் கொண்டும், பலர்க்குத் தெரியுமாறு இன்றிக் கற்ற சிலர்க்குத் தெரியுமாறும், இயற்கைப் பொருள்களுக்குப் பதிலாகச் செயற்கைப் பொருள்களையும், மனத்தின் பண்புகளைப் பொருள்களாயும் பாட ஆரம்பித்தார்கள். இதற்கு உதாரணமாக:— மணியாகிய முகில் பழங்காசென்கிற மின்னை மின்னிப் பொன்னாகிய மழையைப் பெய்யின், அரசர் வெகுளியாகிய தீவிளியும்; அம்முகில் அங்ஙனம் பெய்யாதாயின் பொங்கித் தன்னை நெருங்கினரெல்லோரையும் சுடும் என்று கந்துகன் கருதிப் பன்னிரு கோடி பசும் பொன்னைக் குவித்துத் தாழ்ந்து கூறினன். என்றும், வெய்யோன் பையவே பரந்து மண்ணக மடந்தை கோலத்தை மனத்தாலே நோக்கிக் கமலத்திலே வண்டுகளென்னும் பள்ளியெழுச்சி முரசம் ஆரவாரியா நிற்பத்தன் கதிர்களென்னுங் கையை நீட்டி அம்மண்மடந்தையது இருளாகிய போர்வையை நீக்கி உதயகிரியின் நெற்றியிலே சேர்ந்தான், என்றும், மகளிர் சேர்ந்தவிடத்தே யிருந்து இளமையாகிய கள்ளையுண்டு அறமுதலியவற்றை அறிதலன்றிப் பயன்படாமல் மூப்பதற்கு முன்னமே இளமைப் பருவத்தே தவமும் தானமும் நிகழ்த்துமின், வருத்துகின்ற நோயாகிய தீயையுடைய உடம்பினுயிரைச் சோருக முன்னே பெய்துகொண்டு உணர்வை நெய்யாகக் கூட்டி, ஆற்றலைத் துவையாகக் குடித்து அதனை உண்ணும் கூற்றம் உடம்பை நிலைகுலைப்பதற்கு

முன்னரே கொடுத்துண்மின், நற்குணத்தை விரும்புமின், உடம்பாகிய சகடத்தை நடத்தும் பாகீர், அச்சகடம் தொழில் செய்து வருந்திப் பழகினும் புதியதோருயிராகிய அச்சைக் கொண்டுவந்து இட்டு ஊர்தலொண்ணாதாகலான், அச்சகடத்தைத் தனக்கடைத்த காலமுள்ளளவும் செலுத்திப் பின்னர் இகழ்ந்தார் பலர்; இனி அங்ஙனமன்றித் தனக்கடைத்த காலத்திற்கு நடுவேயும் தீவினை மிகுதியாய் உள்ளதாகிய இடும்பையாகிய நீரை உடைய ஆற்றிலே அச்சகடம் அழுந்தா நிற்கும். அங்ஙனம் அழுந்தி உயிராகிய அச்சு முறிவதற்கு முன்னே அதனால் கோடற்குரிய சீலத்தை நமக்குப் பெறு பயனாகக் கொண்டு அதனைச் செலுத்துமின், என்றும் பொருள் தரும் சீவகசிந்தாமணிப் பாட்டுகளைப் பார்த்தால் கவிகளது புது மனப்போக்கு தெரியும்.

கி. பி. 400—ம் ஆண்டுக்கு முன் இயற்கைப் பொருள்களைக் கண்டு பாடும் பறவைகளைப் போல் உள்ளத்தில் உவப்பு மிகுந்து தானே புறப்படும் பாட்டுகளைக் களிப்புடன் பாடின பாணருக்குப் பதிலாக, உலகத்தினது துன்பங்களைப் பற்றியே தியானிப்பதால் வரும் துயரமிகுந்த எண்ணங்களைப் பற்றியே இப்போது செய்யுள்கள் செய்தார். அன்றியும் முன்னைய செய்யுளில் இயற்கை வனப்பே மிகுந்திருக்கும், பின்னையதில் இது மிகக்குறைவு. முன்னையதில் கண்டதைக் கண்டவாறே கூறுவர், பின்னையதில் கண்டதை எண்ணத்தோடு கலந்து கூறியுள்ளார். முன்னையதில் உள்ள ஒரு உவமையை இன்று உற்று நோக்கினும், அதில் எவ்வாறு கூறியுள்ளதோ அவ்வாறே தோன்றும்; பின்னையதிலுள்ள உவமைகள் மனப்பொருள்களாகவே இருக்கும்.

இந்த மாறுபாடுகளெல்லாம் வட மொழிக்காவியங்களைப் போல் தமிழிலெழுதியதால் வந்தனவே.

தமிழிலுள்ள அற நூல்களிலெல்லா வற்றிலும் சிறந்து நிற்கும் திருவள்ளுவர் திருக்குறள், இக்காலத்தில் இயற்றியதாகத் தோன்றுகிறது. பழய சங்கச் செய்யுள்களைவிட இதில் ஆரிய மொழிகள் அதிகம் சேர்ந்திருக்கும், அறநெறியும் சமணர் நெறியை யொத்திருப்பதால் திருவள்ளுவரைச் சமணரென்று சிலர் கூறுவர். அதற்கு மறுகாரணம் யாதெனில், கடவுள் வாழ்த்தில் கடவுளை ஆதி பகவனென்றும், மலர்மிசை ஏகினானென்றும் கூறி, அரன், அரியென்று கூறாதிருத்தலாம். மற்றோர் காரணம், "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என்று வைதிககருமங்களை விட அற நெறியை அதிகமாய்த் திருக்குறளில்பாராட்டுவது. பிற்காலத்தில் சைவசித்தாந்த நூற்களை இயற்றிய உமாபதி சிவாச்சாரியர் முதலியவர்கள் திருவள்ளுவரைச் சைவரென்றே கொண்டு, இவர்கூறிய மொழிகளையே தங்கள் ஞானநூல்களில் எடுத்தாண்டிருக்கிறார்கள். "அறவாழியந்தணன்" என்றோரிடத்தில் திருவள்ளுவர் கடவுளை கூறியிருப்பதை தருமசக்கரத்தை ஏந்திய திருமால் என்று பொருள் கூறி, திருவள்ளுவரை வைஷ்ணவரென்பாருமுளர். ஆரிய நூல்களில் சொல்லியிருக்கும் புருஷார்த்தங்கள் நான்கில், அறம், பொருள், இன்பம் என்ற மூப்பாலையும் கூறி, நாலாவதாகிய வீட்டைப்பற்றித் திருவள்ளுவர் கூறாமல் விட்டு விட்டனர். இவ்வாறு விட்டு விட்டதைப்பற்றி ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு வகையாய்ச் சொல்வர். ஒருகால் தன்னுடைய

கொள்கைகள் எல்லாச்சமயங்களுக்கும் ஒவ்வும் என்று காட்ட அவ்வாறு வீட்டை விட்டு விட்டனர் என்று ஐயுறுவதற்கு இடமாயிருக்கிறது.

இப்போதிருக்கும் தொல்காப்பியமும் இக்காலத்தியது போலும். அதிலும் ஆரிய மொழிகள் அதிகம், அன்றியும், தொல்காப்பியத்தில் திணைகள் ஐந்திற்கும் முருகனும், இந்திரனும், வருணனும், திருமாலும், துர்க்கையும் தெய்வங்கள் என்று சொல்லியிருக்கிறது. மிகப்பழய தமிழ்ச் செய்யுள்களில் முருகனைத்தவிர வேறு தேவர்களைப் போற்றினவை பெரும்பாலும் இல்லவேயில்லை. அன்றியும் கடவுள் சம்பந்தமாய் கந்தழி, கந்துடைநிலை, கடவுள் என்ற மொழிகளே அன்றி, வேறுமொழிகள் பழந்தமிழிலில்லை. வடமொழிப் பெயர்கள் பிற்காலத்தில்தான் வந்திருக்கவேண்டும். அன்றியும் தொல்காப்பியன் அந்தணன்; ஐந்திரமென்ற வடமொழி இலக்கணத்தைப்பற்றித் தொல்காப்பியம் இயற்றினான் ஆதலால் தொல்காப்பியம் இக்காலத்திய தென்று நிச்சயிக்க வேண்டியிருக்கிறது.

அநுபந்தம்.

இப்புஸ்தகத்தினது முதற் பதிப்பில் சங்கச் செய்யுள்களிலிருந்து பல மேற் கோள்கள் சேர்க்கப் பெற்றன. இவை சிறுவர்களுக்கு மிகக் கஷ்டமா யிருக்கின்றன வென்று பலர் சொன்னதால் அவைகளை அநுபந்த ரூபமாக இங்கு அச்சிட்டிருக்கிறோம். ஒவ்வொரு மேற்கோளின் பொருளும் ஆங்காங்கே குறித்திருக்கிற பக்கங்களில் எளிய வசன நடையில் எழுதப் பெற்றிருக்கிறது.

பக்கம் 14 [திருமுருகாற்றுப்படை]

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ.

* * * * * * * * *

நெய்யோடையவியப்பியைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண் கொளுருவினிரண்டுடனுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலிநிலைஇயமாத்தாட்கொழுவிடைக்
குருதி யொடுவிரை இய தூவெள்ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறு பசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பினன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி

யிமிழிசை யருவியோடின்னியங் கறங்க
வுருவப்பல் பூத்தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பி.

பக்கம் 16. [சிலப்பதிகாரம்.]

கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மழுகுமெய்யாளரு முழுகினராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
வஞ்சமுண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்சமுண்டு நடுங்கு துயருற்றோ
ரழல்வாய் நாகத்தா ரெயிறழுந்தினர்
கழல்கட்கூளிக் கடுநவைப்பட்டோர்
சுழலவந்து தொழத்துயர் நீங்கு
நிழல்கா னெடுங்கனின்ற மன்றமும்
தவமறைந் தொழுகுந் தன்மையிலாள
ரவமறைந்தொழுகு மலவைப் பெண்டி
ரறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோரெனக்
காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூதச் சதுக்கமும்

* * * * * * * * *

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சையானைப் பிடர்த்தலை யேற்றி
வால் வெண்களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்

கால் கொள் விழவின் கடைநிலை சாற்றி
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து
மரகத மணியொடு வயிரங்குயிற்றிய
பவளத்திரள் காற்பைம் பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக்கடை முகத்தியாங்கணுங்
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத்தொழுக்கத்து
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரண நிலை இய தோமறு பசும்பொற்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப்பசும் பொற் படாகை
தூமயிர்க்கவரி சுந்தரச் சுண்ணத்து
மேவிய கொள்கை வீதியிற் செறிந்தாங்கு

* * * * * * * * *

அரசு மேம்படீஇய வகைநிலை மருங்கி
னுரை சான்மன்னன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கு
மாயிரத்தோ ரெட்டரசு தலைக்கொண்ட
தண்ணுறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத்தேந்தி
மண்ணகமருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளைமேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்

மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபிற் றீமுறை யொருபால்
நால்வகைத் தேவரு மூவா றுகணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறு சிறந்தொருபால்
அறவோர் பள்ளியு மறவோம்படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமுந்
துறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்.

பக்கம் 19. (பொருநராற்றுப்படை)

துராஅய் துற்றிய துருவை யம்புழுக்கின்
பராரை வேவை பருகெனத் தண்டிக்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
யூழி னூழின் வாய் வெய் தொற்றி
யவையவை முனிகுவ மெனினே சுவைய
வேறு பல்லுருவின் விரகு தந்திரீஇ
மண்ணமை முழவின் பண்ணமை சீறியா
ழொண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநா
ளவிழ்ப்பதங் கொள்கென் றிரப்பமுகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பால் வறைக்கருனை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லையுழு கொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையுமிரவு மூன்றின்று மழுங்கி

புயிர்ப்பிடம் பெறாஅதூண் முனிந்தொருநாட்
செயிர்த்தெழுதெவ்வர் திறை துறை போகிய
செல்வசேறுமெந்தொல் பதிப்பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தனமாக வல்லே
யகறிரோ வெம்மாயம் விட்டெனச்
சிரறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடியன்ன தூங்கு நடைக்குழவி யொடு
பிடி புணர்வேழம் பெட்டவை கொள்கெனத்
தன்னறியளவையிற்றரத்தரயானு
மென்னறி யளவையின் வேண்டுவ முகந்துகொண்
டின்மை தீர வந்தனென்.

பக்கம். 20 [புறம்]

நுங்கோ யாரென வினவினெங்கோக்
களமர்க்கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீடவாரா
வாரற் கொழுஞ்சூடங்கவுளடாஅ
வைகு தொழின்மடியு மடியாவிழவின்
யாணர் நன்னாட்டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகையாகிக்
கோழியோனேகோப்பெருஞ்சோழன்.

* * * * * * * * *

பக்கம் 21. [திருமுருகாற்றுப்படை]

சீரைதை இயவுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்

மாசறவிமைக்கு முருவினர் மீனி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென் பெழுந்தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்தவுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தினரியாவதுங்
கற்றோரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியரிடும்பை
யாவது மறியாவியல் பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர்.

பக்கம் 21 [புறம்]

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிருவாளருஞ் சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

பக்கம் 22. [பட்டினப் பாலை]

வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்

விளைவறா வியன் கழனிக்
கார்க் கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச் செந்நெற் கதிரருந்தி
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டு நிழற் றுயில் வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ் மஞ்ச
ளின மாவி னிணர்ப் பெண்ணை
முதற் சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன் முற்றத்துச்
சுடர்நு தன் மடநோக்கி
னேரிழை மகளிருணங் குணாக்கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறு தேர்முன் வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்கு பகை ய யாக்
கொழும்பல் குடிச் செழும் பாக்கத்துக்
குறும்பல் லூர் நெடுஞ் சோணாட்டு
வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியினணை முதற் பிணிக்குங்
கழி சூழ்ப்படப்பைக் கலியாணர்ப்
பொழிற் புறவிற் பூந்தண்டலை
மழை நீங்கிய மாவிசும் பின்

மதிசேர்ந்த மக வெண்மீ
னுரு கெழுதிற லுயர் கோட்டத்து
முருகமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
யிருகாமத் திணை யேரிப்
புலிப்பொறிப் போர்க்கதவிற்
றிருத்துஞ் சுந்திண்காப்பிற்
புகழ்நிலைஇய மொழிவளர
வறநிலைஇய வகனட்டிற்
சோறு வாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறு பொரச் சேறாகி

* * * * * * * * *

அளந்தறியாப் பல பண்டம்
வரம் பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப் பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி

பக்கம் 24. [புறம்]

இரும்பனை வெண்டோடு மலைந்தோனல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோனல்ல
னின்ன கண்ணியு மார்மிடைந்தன்றே நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந்தன்றே
யொருவீர தோற்பினுந் தோற்பதுங்குடியே

யிருவீர் வேறலியற்கையுமன்றே அதனாற்
குடிப் பொருளன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ்விகலே.

பக்கம் 26. [பொருநராற்றுப் படை]

அறல்போற் கூந்தற்பிறை போற்றிருநுதர்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையுமின் மொழித்துவர்வாய்ப்
பலவுறுமுத்திற் பழிதீர் வெண்பன்
மயிற்குறை கருவி மாண்கடையன்ன
பூங்குழையூசற் பொறை சால்காதி
னாணடச்சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப்பணைத் தோளரி மயிர்முன்கை
நெடுவரைமிசை இயகாந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பினொளி விடுவள்ளுகிர்

*   *   *

வருந்து நாய் நாவிற் பெருந்தகு சீறடி.

பக்கம் 27. [சிறு பாணாற்றுப் படை]

பைந்நனை யவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயில் விழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோபமூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்

விடர் காலருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வேனு தியிற் பூத்தகேணி
விறல்வேல் வென்றி வேலூரெய்தி.

பக்கம் 27. [நெடுநல்வாடை]

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறு புலம் பரப்பிப்
புலம் பெயர் புலம்பொடு கலங்கிக் கோட
னீடிதழ்க் கண்ணி நீரலைக்கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக்கறவை
கன்றுகோ ளொழியக்கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப் புறவான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீரவெண் மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந்தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற்றுவலை கற்ப
வங்கணகல்வயலார் பெயற் கலித்த

வண்டோட்டு நெல்லின் வருங்கதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுற ழெருத்திற்
கொழுமடலவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப்புடை திரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறு கொளமுற்ற
நளிகொள்சி மையவிரவு மலர் வியன்கா

பக்கம் 34. [புறம்]

உண்டி கொடுத்தோருயிர் கொடுத்தோரே
யுண்டி முதற்றே யுணவின் பிண்ட
முணா வெனப்படுவது நிலத்தொடு நீரே
நீருநிலனும் புணரியோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசினோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற்றாயினு நண்ணி யாளு
மிறைவன் றாட்குத வாதே யதனா
லடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

பக்கம் 30. [சீவகசிந்தாமணி]

ஊழ்தினி ருண்ப தென்னென் றுரைத்தலு முவந்துநோக்கி
மோழலம் பன்றியோடு முளவு மாக்காதியட்ட
போழ் நிணப்புழுக்கலேனெய் பொழிந்துகப் பெய்துமாந்தித்
தோழயாம் பெரிதுமுண்டுந் தொண்டிக்களிதனை யென்றான்.
ஊனொடுதேனுங் கள்ளு முண்டுயிர் கொன்ற பாவத்

தீனராய்ப் பிறந்த திங்ஙனினியிவை யொழிமினென்னக்
கானில் வாழ்குறவன் சொல்லுங்கள்ளொரேன்றேன்
[கைவிட்டா
லேலீனை யெம்முடம்பு வாட்டமெலவன் பிழைத்துங்
[கொலென்ருன்.
ஊன்சுவைத்துடம்பு வீக்கி நரகத்திலுறைதனன்றோ
வூன்றினு துடம்பு வாட்டித் தேவராயுறைதனன்றோ
வூன்றி யிவ்விரண்டனுள்ளு முறுதி நீயுரைத்தி டென்ன
வூன்றினு தொழிந்து புத்தேளாவதே யுறுதி யென்ருன்.
உறுதி நீயுணர்ந்து சொன்னுயுயர்கதிச் சேறியேடா
குறுகினுயின்ப வெள்ளங்கிழங் குணக்காட்டினின்றே
யிறைவனூற் காட்சி கொல்லா வொழுக் கொடேன்றுறத்தல்
[கண்டா
யிறுதிக்கணின் பந்தூங்கு மிருங்கனி யிவைகொளென்ருன்

பக்கம் 39. [சிலப்பதிகாரம்]

தெரிவுறக் கேட்டதிருத்தகு நல்லீர்
பரிவுமிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனுண்டுற மினுயிர்க்கொலை நீங்குமின்
ருனஞ் செய்மின்றவம் பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன் மின்றீ நட்பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண் மொழி நீங்கன்மி
னற வோரவைக்கள மகலாதணுகுமின்
பிறவோரவைக் களம்பிழைத்துப் பெயர்மின்

பிறர்மனை யஞ்சுமின், பிழையுயி ரோம்புமின்
அறமனை காமினல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமி
னிளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

பக்கம் 40 [மணிமேகலை]

யாங்கிருந்த ழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
யுடற்கழு தனையோ வுயிர்க்கழு தனையோ
யுடற் கழுதனையே லுன்மகன் றன்னை
யெடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க் கழுதனையே லுயிர் புகும்புக்கில்
செயப்பாட்டு வினை யாற்றெரிந் துணர் வரிய
தவ்வுயிர்க்கன் பினை யாயினுய் தொடி
யெவ்வுயிர்க்காயினு மிரங்கல் வேண்டும்.

பக்கம் 41 [சிலப்பதிகாரம்].

பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
யந்தர சாரிக ளறைந்தனர் சாற்று
மிந்திர விகார மேழுடன் போகி
புலவூண் டுறந்து பொய்யா விரதத்

தவல நீத்தறிந் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்தும் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழ
னீரணி விழவினு நெடுந்தேர் விழவினுஞ்
சாரணர் வரூஉந் தகுதியுண் டாமெனa
உலக நோன்பிக ளொருங்குட னிட்ட
விலகொளிச் சிலாதலம்.

பக்கம் 49 [சீவக சிந்தாமணி]

பைந்நாகப்பள்ளி மணிவண்ண
னிற்பாயல் கொண்டு
கைந்நாக ந்துஞ்சுங்கமழ்
காந்தளஞ் சாரல் போகி
மைந்நாக வேலிமலி பல்லவத்
தேய நண்ணிக்
கொய்ந்நாகச் சோலைக் கொடி
யந்நகர் புக்கவா றும்.

பக்கம் 50 [சீவகசிந்தாமணி]

மன்னர்தம் வெகுளி வெந்தீ
 மணிமுகில் காணமின்னிப்
பொன் மழை பொழியினந்து
 மன்றெனிற் புகைந்து பொங்கித்

துன்னினார் தம்மை யெல்லாஞ்
 சூட்டிடுமென்று செம்பொன்
பன்னிரு கோடியுய்த்துக்
 கந்துகன் பணிந்து சொன்னான்.

* * *

பொய்கையுட் கமலத்தங்கட்
 புள்ளொலிமுரச மார்ப்ப
வெய்யவன் கதிர்களென்னும்
 விளங்கொளித்தடக்கை நீட்டி
மையிருட் போர்வை நீக்கி
 மண்ணகமடந்தை கோலம்
பையவே பரந்து நோக்கிப்
 பனிவரை நெற்றி சேர்ந்தான்.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.

தென்னிந்திய வரலாற்றின் இடைப்பகுதி.

பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்

இயற்றியது

இரண்டாம் பாகம்.

(திருப்பி எழுதப்பெற்றது.)

இரண்டாம் பதிப்பு.

விலை அணா 10.]

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.

இரண்டாம் பாகம்.

(கி. பி. 600 முதல் 717 வரையில்.)

மகேந்திரப் போத்தரையன். (கி. பி. 600-625.)

கி. பி. 600 முதல் காஞ்சீபுரக் காவலரான பல்லவ அரசர் போத்தரையர் என்ற பட்டம் தரித்து வந்தனர். 'போத்து' என்னும் மொழி 'பல்லவ' என்பதற்கு மாறு மொழியாகும்; 'ராஜா' என்பதற்கு 'அரையன்' என்பது மருவி வந்திருப்பதுபோலாகும் இம் மொழியும். அரசர் பட்டப்பெயர் வடமொழியினின்று தமிழாய் மாறினதாலே, பல்லவ மன்னரும் தமிழருடன் கலந்து தமிழராயினரென்று அறியலாம். அன்றியும் இப்பொழுது முதல்தான் பிராகிருதம், ஸம்ஸ்கிருதம் அன்றித் தமிழிலும் செப்புப் பட்டயங்கள், கல் வெட்டுகள் எழுதத் தொடங்கினர். 'பல்லவர்' என்ற மொழியையும் தமிழிலக்கியங்களில் உபயோகப் படுத்த கவிகள் ஆரம்பித்தார்கள். சீவக சிந்தாமணியில் தான் 'பல்லவர்' என்ற மொழி தமிழ்க் காவியங்களில் முதல் முதலாகக் காணப்படுகிறது. பல்லவர்க்கு இக்கால முதல் 'காடவர்' என்றும், 'காடு வெட்டி' என்றும் வேறு பெயர்கள் வந்தன. பல்லவ மன்னர் ஆட்சி பரவப் பரவ, காடுகளைவெட்டி, நாடுகளாய்ச் செய்ததால் இந்தப் பட்டங்கள்

வந்தனபோலும். இத்தகைய காடவரில் மிக்க உயர் நிலை பெற்றவன் நரஸிம்ஹ விஷ்ணுவர்மாவின் மகனான மகேந்திரப் போத்தரையன்.

இவன் ஆட்சி ஆரம்பித்தபோது பல்லவ வேந்தர் செல்வாக்கு கலிங்கம் வரையில் சென்றது. கலிங்கமென்றால் மகா நதிக்குத் தெற்கும், கோதாவரிக்கு வடக்கும் கடலோரமாயிருக்கும் நாடு. கோதாவரிக் கரையிலிருந்து சமுத்திரத்தைத்தழுவியுள்ள தெலுங்கு நாடும் தமிழகத்தில் தொண்டை மண்டலமும், சோழ விஷயமு (சோணாடு) ம் கொங்கு நாடும் மகேந்திரப் போத்தரையன் கீழிருந்தன. இவன் தகப்பனான நரஸிம்ஹவிஷ்ணு காலத்தில் பல்லவர் பலம் பல திக்குகளில் பரவியது. தகப்பனிறந்து மகேந்திரன் அரசனானவுடன் நடு நாட்டிலிருந்து அவனுக்குப் பெரிய பகைவனொருவன் தோன்றினான்.

இவன் பெயர் புளகேசி. சளுக்கிய குலத்தவன். இவனது தலை நகர்க்கு வடமொழியில் வாதாபியென்றும், மகாராஷ்டிரத்தில் பாதாமி யென்றும், தமிழில் வாதாவி யென்றும் பெயர். இவ்வூர் இப்போது நிஜாம் இராஜ்ஜியத்தில் இருக்கிறது. அழிந்துபோய் சிற்றூராய்விட்டது. மகேந்திரனது விரோதியான புளகேசியை இப்போது சரித்திரக்காரர்கள் இரண்டாம் புளகேசி என்கிறார்கள்.

புளகேசி சிம்மாதனம் ஏறின உடனே, ஸ்ரீ ஹர்ஷதேவனான கான்யகுப்ஜ மகாராஜா இமயமலை முதல் நருமதை வரைக்கும் மேற்சமுத்திரத்தினின்று கீழ்ச்சமுத்திரமளவும் பரவியிருக்கும் ஆரியாவர்த்த மென்கிற வட இந்தியாவுக்கு

சக்கரவர்த்தியாய், நடு நாட்டையும் கைப்பற்றலாமென்று நினைத்து, நருமதைக் கரைக்குப் படையெடுத்து வந்தான். நருமதைக் கரையில் நடந்த போரில் புளகேசியின் வீரர் வெற்றி பெற்றார்; ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தியும் வந்த வழியைப் பார்த்துத் திரும்பிப்போனான். புளகேசியும் இறுமாப்பு மிகுந்து திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டான் (கி. பி. 610). முதலில் விந்திய மலையருகிலுள்ள தக்கண கோசல நாட்டை ஜயித்தான்; பின்பு கலிங்கத்தைக் கைப்பற்றினான். அங்கிருந்து தெற்கு நோக்கித் திரும்பிக் கோதாவரிக் கரையிலுள்ள பிட்டாபுர (வட மொழியில் பிஷ்டபுரம்) நகரைப் பிடித்துக்கொண்டான். கோதாவரியைத் தாண்டி, வேங்கி (இப்போது ஏலூர் என்னும் பட்டணத்துக்கு அருகில் உள்ளது) யென்னும் பல்லவர் நகரைப்பற்றி, தன் தம்பி குப்ஜ விஷ்ணுவர்த்தனனை அங்கே அரசனாக நியமித்தான். விஷ்ணு வர்த்தனன் பின்னோர் அப்போது தொடங்கி 400 வருஷங்கள் வேங்கியிலாண்டார். இவர் குலத்துக்குக் கீழைச் சளுக்கர் குலம் என்று இப்போது இந்திய சரித்திரத்தில் பெயரிடுவர்.

பின்பு கிருஷ்ணை நதியைத் தாண்டி, புளகேசி தென்னாட்டின் மேல் வந்தான். மகேந்திரன் அவனை எதிர்த்துத் தடுக்க முடியவில்லை. அதனால் ஒரு சளுக்கக் கல் வெட்டில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது:— "அழுக்கற்ற வெண்சாமரங்களையும், நூற்றுக் கணக்கான கொடிகளையும் குடைகளையும் பிடித்துக்கொண்டு புளகேசியினது அறுவகைப் படைகள் செல்லுங்கால் கிளம்பின தூளியானது எதிர்க்க வந்த பல்லவேந்திரன் ஒளியை மங்கச் செய்தது.

பல்லவனும் காஞ்சீபுரத்து மதில்களுக்குள் போய் ஒளிந்து கொண்டான்." என்றதனால் புளகேசியும் காஞ்சீபுர மதில்களைக் கண்டு அஞ்சி அவ்வூரைச் சண்டை செய்து பிடிக்க முயலவில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அன்றியும் மேலே சொன்ன சளுக்கக் கல்வெட்டில் பின்பு "துள்ளி விழும் கயல்மீன்களைக் கண்களாய்க்கொண்ட காவிரி, சளுக்கனது யானைகளின் மதநீர் விழுந்து, ஓடாமல் தடைபட்டு, கடல் செல்ல இயலாமலாயிற்று. புளகேசியும் பல்லவப்பனியைப் போக்கடிக்கும் கடுங்கதிரவனாய், சோழ சேர பாண்டியரைக் களிப்புறச் செய்தான்" என்றிருக்கிறது. இதனால் மகேந்திரன் புளகேசியுடன் போர்புரிய முடியாமல் காஞ்சீபுர மதிலில் ஒளிந்ததால் தமிழ் மூவேந்தர்க்குக் களிப்பு உண்டாயிற்றேயன்றி, புளகேசி தமிழ் நாட்டில் வெற்றியொன்றும் அடையவில்லை என்று பொருள் கொள்ள வேண்டும். புளகேசி வடக்கு முகமாய்த்திரும்பினவுடன் மகேந்திரன் தன் கோட்டையை விட்டுப் புறப்பட்டு, புல்லலூர் என்னும் கிராமத்தில் சளுக்கனைத் துரத்தியடித்தான் என்று ஒரு பல்லவ சாசனத்தில் இருக்கிறது. இது முதல் மகேந்திரனுக்குப் போர்புரிய வேண்டிய அவசியமில்லாமல், சமாதானமாய் நாட்டை ஆண்டான்.

மகேந்திரன் காலத்தில் தென்னாட்டில் சமணர் மிகப் பரவியிருந்தார்கள். அவர்களது செல்வாக்கும் மிகுந்திருந்தது. பல விடங்களில் பள்ளிகள் கட்டிக்கொண்டு தங்கள் தொழுமுறைகளை நடத்திவந்தனர். அவ்வாறு சமணர் திரண்டிருந்த ஊர்களில் பாடலிபுத்திரம் (இக் காலத்தில் திருப்பாதிரிப்புலியூர் என்ற அதன் நாமமே எல்லோர்க்

கும்தெரியும்) முக்கியமானது. அவ்வூரில் அக்காலத்தில் ஒரு வெள்ளாளச் சிறுவன் சமணர் நெறியைப்பற்றித் தருமசேனன் என்னும் பெயருடன் வாழ்ந்தான். பின்பு தன் அக்காள் திலகவதியம்மை புகட்டின நற்புத்தியால் மருள் நீங்கி, சிவனருள்பெற்று, சிவபக்தி மிகுந்து, சிறந்த சிவனடியாராய் இனிய தேவாரங்களைப் பாடத் தொடங்கினர்; ஆகையால் அவர் திருநாவுக்கரசர் என்ற பெயர் பெற்றார். இவரையே அப்பர் என்பர். சமணர்கள் அரசனிடத்தில் செல்வாக்கு மிகுந்திருந்தவர்களாதலால் திருநாவுக்கரசரைப் பலவிதமாய்த் துன்புறுத்த ஆரம்பித்தார். எத்தகைய துயரம் உற்றாலும் திருநாவுக்கரசர் சிவ பக்தியை விடாமல் இருந்ததால் இவரது உள்ள உறுதியைக் கண்டு காடவர்கோனும் மனம் மாறி அப்பரிடம் அன்பு பிறந்து, ஞானோபதேசம் பெற்றுச் சிவனடியாராயினன். மேலும், வீடு பெற வழியறியாத சமணர் மொழி பொய்யென்றும், மெய்ம்மொழி யாதென்றும் உணர்ந்து, காடவன் திருவதிகையென்னும் நகரில் முக்கண்ணனுக்காக, பாடலிபுரத்திலிருந்த சமணரது மண்ணால் கட்டிய பள்ளியொடு பாழிகளையும், இடித்துக்கொண்டு வந்து குணதரவீச்சுரம் என்ற கோயிலைக் கட்டினன் என்று பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிறது.

திருவதிகையில் கட்டியது சுடுமண் (அதாவது செங்கல்) கோயில். கர்ப்பக் கிருகம் செங்கல்லாலும், பிற்காலத்தில் கட்டிய மண்டபங்களெல்லாம் கருங்கல்லாலும் அது அமைக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். மகேந்திரன் காலம் வரையில் கிருஷ்ணை நதிக்குத் தெற்கில் சுடுமண்ணாலும்,

மரத்தாலும் கோயில்கள் கட்டினார்களே யன்றி, கற்கோயில்கள் கிடையாது. இவன்தான் முதல் முதல் கற்கோயில்கள் நிருமித்தவன். இவனும் குன்றைப்பாறையாய் வெட்டியெடுத்து, பாறைகளை ஒன்று மேலொன்றாய் அடுக்கிக் கட்டிடங்கள் கட்டினவனல்ல. மலைகளை வெட்டி அதில் தூண்கள், சுவர்களைத் தவிர மற்றைய இடங்களைக் குடைந்து கர்ப்பக்கிரகம், முன் மண்டபமுமாகச் செய்வித்தான். இக் கோயில்களைக் குகைக் கோயில்கள் என்றே சொல்லவேண்டும். இவ்வகைக் குகைக் கோயில்கள் பல மகேந்திரன் செய்வித்தான். அவைகள் பெஜவாடாவுக்கு அடுத்த உண்டவல்லியிலும் காஞ்சிபுரத்துக்கு அருகில் மாமண்டூர், மஹேந்திரவாடி, சிங்கவரத்திலும், நாமக்கல்லிலும் விஷ்ணு ஆலயங்களும் காஞ்சீபுரத்திலிருந்து கொஞ்ச தூரத்துக்குள் உள்ள சியமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், இவ்வூர்களிலும் திருச்சிராப்பள்ளி மலை மேலிலும் சிவன் கோயில்களும், மண்டகப்பட்டில் திரிமூர்த்தி கோயிலும், புதுக்கோட்டை சீமையில் சித்தன்னவாயில் மலைமேல் ஒரு சமணர் கோயிலும் மகேந்திரன் செய்வித்தவை. ஆகையால் மகேந்திரன் ஒரு மதத்தில் அதிகப் பற்றும் மற்றொன்றின் மேல் பகையும் உண்டானவன் அல்லவென்று ஊகிக்கலாம். இவைகளுள் உண்டவல்லியிலுள்ள சேஷசாயி கோயில் வேலை முடியாமல் நடுவில் வேலை நின்றுவிட்டது. ஒரு வேளை கோயில் திருப்பணி நடந்துகொண்டிருக்கும் போதே புலகேசி படையெடுத்து வந்ததால் வேலை நின்று விட்டதுபோலும்.

மகேந்திரன் மலையைக் குடைந்து செய்வித்த கோயில்களைப் பார்த்த மாத்திரத்தில் எளிதில் சொல்லலாம். அவை



மஹேந்திரவர்மன் தூண்கள் (பல்லாவரம்)

களைக் கண்டறிவதற்குத் தப்பாத குறிகள் சிலவுள. அக் குகைக் கோயில்களெல்லாம் மலைச்சாரல்களில் குடைந்து செய்தவை. மலை உச்சியிலும் இரா; மலையடியிலும் இரா; மலையினது அடிக்கும் நுனிக்கும் நடுமத்தியிலிருக்கும். கோயிலை மலையில் குடையும்போது, ஆங்காங்கு தூண்களை யும், சுவர்களையும், சில விடங்களில் விக்கிரகத்தையும் செய் வதற்காக விட்டு விட்டு, மிகுந்த இடத்தை மாத்திரம் குடைந்திருக்கும். தூண்களுக்காக விட்ட பாகம், கீழும் மேலும் சதுரமாயும், நடுவில் மூலை செதுக்கியும் இருக்கும். தூணினது மொத்த உயரம் ஏழு முழமும், மேல் சதுர மும் கீழ் சதுரமும், ஈரிரண்டு முழமும் இருக்கும். சதுரத்தில் தாமரைப் புஷ்பம் செதுக்கி யிருக்கும்; அன்றியும் தூண் களின் புறங்களில் மகேந்திரனது பட்டப் பெயர்கள் வெட்டி யிருக்கும். தூணின் போதிகை சதுரப் பலகைக் கல்லாலா னது. சுவர்களில் சித்திர வேலை செய்திருக்கும். அதனடு வில் கர்ப்பக்கிருகத்தின் துவாரத்தின் பக்கத்தில் துவார பாலகர் விக்கிரகம் செதுக்கி யிருக்கும். இந்தத் துவார பாலகர் தலைமேல் உயர்ந்த தலைப்பாகை உண்டு. மகேந் திரன் காலத்துத் தலைப்பாகைகள் இவ்வண்ணமே இருந் தன போலும். அன்றியும் துவாரபாலகர் வலதுகை இடது கை மேல் வைத்தும், இடது கை ஒரு பெருங் கதையைப் பிடித்தும், உடல் அதன் மேல் சாய்ந்தும், பார்க்கிறவர் களை அடிப்பார் போல் தோற்றுவர். இவை யன்றி சுவர் கள் மேல் புராணக்கதைச் குறிக்கும் வெகு அழகிய சிலைகள் செதுக்கி யிருக்கு. விஷ்ணு கோயில்களில் மூல விக்கிரகமும் மலையின் பாறை[illegible] மிக அழகாய்ச் செய்து அமைத்திருக்கும். இந்தக் [illegible]ளல்லாது மகேந்திரனது

கோயில்களில் பலவற்றில் கல் வெட்டுகள் வடமொழியி லும் தமிழிலும் உண்டு.

மகேந்திரன் செய்வித்த கோயில்களில் மிக அழகியவை சிற்றன்னவாயில், சிராப்பள்ளி, நாமக்கல் இம்மூன்று ஊர் களில் உள்ளவை. சிற்றன்னவாயில் கோயிலுக்குள் ஐந்து சமண முனிவர் விக்கிரங்கள் உண்டு. முனிவர் உட்கார்ந் திருக்கும் முறையும், அவர் உள்ளத்தின் அசையா நிலையை முகத்தில் விளக்கிக் காட்டும் சிற்ப வேலைத்திறமும், கண் ணால் பார்த்து அறிந்து ஆச்சரியப்பட வேண்டுமே யன்றி, வார்த்தையால் வர்ணித்துச் சொல்ல இயலாது. அன்றியும் கோயில் முன்மண்டபத்தில் நின்று அண்ணாந்து பார்த் தால், வனப்பு மிகுந்த அன்னங்கள், யானைகள், தாமரைப் பூக்கள், கொடிகள், பெண்ணுருவங்கள், முதலிய சித்திரங் களைக் கலந்து எழுதிய காலம் ஒன்று தென்படும். கற் பாறைமேல் பல நிறங்களுடைய சாயங்களைக் கொண்டு ஓவியம் எழுதுவதே வியப்பைத் தரும் பணி. அச்சாயங்கள் 1300 வருஷங்களாக அழியாமல், வாடாமல் இருக்குமாறு எப்படித்தான் எழுதினார்களோ, அறிய வழியில்லை. பழைய காலத்தில் இவ்வித அற்புதச் சித்திரம் பல்லவ அரசர் ஆத ரணையால் எழுதப்பெற்ற தென்பதைவிட, தென்னிந்தியர் மனதை மகிழச் செய்யும் செய்தி வேறுண்டோ?

சிராப்பள்ளிக் குன்[illegible] நடுவில் குடைந்தமைத்த சிவன் கோயிலும் அற்[illegible] வேலையே. அதன் மேற் புறச் சுவரில் கற்பது[illegible] செதுக்கி யிருக்கின்றன. பதுமைகள் வெட்டிய [illegible] பாகம் எழடிச் சதுரம். நடு விக்கிரகம் மிகப் பெரி[illegible]காதரனை சிவனை கண்

திருச்சிராப்பள்ளி பல்லவ குகைக் கோயிலில் விக்கிரகம்

ணெதிரிற் கண்டாற்போல் காண்பிக்கும். அவ்விக்கிரகத்தின் முக ஒளியையும், நிற்கும் நிலையையும் பார்த்தால் உயிருடன் உள்ள உருவம்போல் தோன்றும். இச்சிவனது சடையிலிருந்து விழுமாறு காட்டியுள்ள கங்கையை வலது கை ஒன்றில் ஏந்தியும், பூணூலாய்ப் போட்டுக்கொண்டிருக்கும் பாம்பின் தலையை மற்றோர் வலது கையால் பிடித்தும், இடது கை யொன்றில் உருத்திராட்சமாலையும், மற்றொரு கையை இடுப்பில் தாங்கியும் நிற்கும். சுவர்மேல் அமைத்திருக்கும் இச்சிவ விக்கிரகத்தின் வலது காலின்கீழ் முயலகனது சின்னஞ் சிறு விக்கிரகமுண்டு. சுற்றி நான்கு அடியார்கள் நமஸ்காரம் செய்வதாயும், மேலே ! ரு கந்தர்வர்களும் ஒரு சிறு மனிதனும் மிதக்குமாறும் செய்திருக்கிறது. அழகிய சித்திரவேலைகள் நிரம்பிய நம்முடைய நாட்டில் இதைவிட அதிக வேலைத் திறமான சிற்றுளி வேலை வேறு எங்கேயும் இல்லை.

நாமக்கல்லில் மலைக்கோயில்கள் இரண்டு உண்டு. அவைகளில் அரங்கநாதன் கோயில் மகேந்திரன் கட்டியதாகும். நரஸிம்ஹன் கோயில் கொஞ்சம் பிந்திய காலத்தில் கட்டப்பெற்றது. அரங்கநாதன் கோயில் மகேந்திரன் செய்த கோயில்களி லெல்லாவற்றிலும் மிக அழகியது. இங்கிருக்கும் பள்ளிகொண்ட திருமாலின் விக்கிரகத்தைவிட உயர்ந்த செதுக்குவேலை உலகில் எங்கும் இல்லை யென்று கூறலாம். குகைக் கோயிலும் அற்புதமாய்க் குடைவித்தது. கோயில் முன் மண்டபத்துக்கு வெளியில் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப் போல் மலையைக் குடைந்து காட்டி யிருக்கிறது. இதைப் பார்த்தால்தான் புத்திக்குப் புலப்படுமே

யன்றி வர்ணித்து முடியாது. நாமக்கல் கோயிலை ஆதிரங்கம் என்பார். கோயில்களின் சுவர்கள்மீது கைடபன் கதை, நரஸிம்ஹாவதார கதை, மத்ஸியாவதார கதை முதலியன அழகிய சிலைகளால் காட்டப் பெற்றிருக்கின்றன.

மகேந்திரன் கல்வெட்டுகள் பல அகப்பட்டிருக்கின்றன. அவை வடமொழியிலும் தமிழிலும் உண்டு. அக்கல்வெட்டுகள் ஏழாம் நூற்றாண்டில் எல்லோரும் எழுதிய கிரந்த, தமிழ் எழுத்துக்களில் எழுதினவைகள். கல்வெட்டிலுள்ள செய்யுள் சொற் சுவை நிரம்பி யிருக்கும். மகேந்திரவாடி யென்னும் கிராமத்தில் ஒரு தடாகம் வெட்டுவித்து, பின் வரும் பொருள் தரும் கல் வெட்டு இயற்றுவித்தான்:—நல்லவரெல்லோரும் மிகப் புகழ்வதும், மக்கட்கு இன்பம் பயக்கும் அழகிய மகேந்திர விஷ்ணுக்கிருகம் என்னும் முராரியினது பெருங்கற் கோயிலை மகேந்திரனது பேரூரில் மகேந்திர தடாகத்தின் கரையில் பாறையைப் பிளந்து குணபரன் கட்டுவித்தான்.

சீயமங்கலம் என்ற ஊரிலும் வடமொழிக் கல்வெட்டுண்டு. அதன் பொருள்:—அவனி பாஜன பல்லவேச்வரம் என்னும் இக்கோயிலை லலிதாங்குர மன்னன் தன் மனதைப் பெட்டியாயும், நன்மையை அதற்குள் வைக்கும் நகையாகக் கொண்டு வெட்டுவித்தான்.

மகேந்திரன் கல்வெட்டுகளில் பெரியது சிராப்பள்ளி குகைக் கோயிலில் செதுக்கி யிருக்கிறதே. இனிய ஸம்ஸ்கிருத சுலோகங்கள் கொண்டது. அவைகளில் முதலிரண்டின் பொருள்:—நதிப்பிரியனை தேவன் நயனாபிராமமான



திருச்சிராப்பள்ளி பல்லவர் குகைக் கோயில் கல்வெட்டு
(மகேந்திரவர்மனது)

நீரையும், தோட்டங்களெனும் மாலைகளையும், பிரிய குணங்களையும் உடைத்தான காவிரி நதியைக் கண்டு, அவள் மேல் காதல் கொள்வானென்று பர்வதராஜனது பெண் ஐய முற்று பிறந்த வீட்டை விட்டுவிட்டு (சிராப்பள்ளி) மலை மேல் நின்றுகொண்டு, இந்நதி பல்லவனது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாள். குணபர அரசன் லிங்கத்தைப் பூசை செய்வோன் (லிங்கி) ஆனதால், (லிங்கபூசைக்கு) எதிர் முறையில் (விபரீத பக்ஷத்தில்) இருந்து திரும்பி வந்த அவனது ஞானம் (இந்தக் கோயிலில் அவன் வைத்துப் பூசை செய்த) லிங்கத்தால் உலகமெல்லாம் பரவட்டும். இந்தச் சுலோகத்தில் குறித்து உள்ள லிங்கம், லிங்கி, விபரீத பக்ஷம், என்ற பதங்கள் தர்க்க சாஸ்திரத்தில் வேறு பொருள்களுள்ளவை யானதால் இது சிலேடையாகும். அன்றியும் எதிர் முறையிலிருந்து திரும்பினது என்பது, முந்து அப்பரைத்துயர்வுறச் செய்து, பின்பு மகேந்திரன் சைவனான கதையைக் குறிக்கும்.

தளவானூரில் உள்ள மகேந்திரனது தமிழ்க் கல்வெட்டு, இதுவரைக்கும் அகப்பட்டிருக்கும் தமிழ் எழுத்துகள் எல்லாவற்றிலும் மிகப் பழய எழுத்துக்களைக்கொண்டது. அது பின்வருமாறு.— ஸ்ரீ தொண்டையர் தார்வேந்தன் நரேந்திரப் பொத்தரையன் வெண் பெட்டின் தென்பால் மிக மகிழ்ந்து கண்டான் சரமிக்க வெஞ்சிலையன் சத்துருமல்லெச்வராலயமென்றரனுக் கிடமாக வாங்கு, இவ்வூர் ப்ரம்ம மங்கலவன் செல்வன் சிவதாஸன் சொல்லியது. இந்தக் கல்வெட்டில் பழய கால எழுத்து முறைகள் சில கவனிக்கத் தக்கவை. 'வே' என்பதற்கு 'வெ', 'ரே' என்பதற்கு

'ரெ', 'பே' என்பதற்கு 'பெ', என்று முன்காலத்தில் எழுதினரென்று அறியலாம்.

வல்லத்துக் குகைக் கோயிலில் பின் வரும் கல்வெட்டுண்டு:

பகாப்பிடுகு லளிதாங்குரன் சத்துரு மல்லன் குணபரன்
மயெந்திரப் பொத்த ரெசரு அடியான்
வயந்தப்பிரி அரெசரு மகன் கந்த செனன்
செய்வித்த தெவகுலம்.,

'மயெந்திரப் பொத்தரெசரு' என்றால் மகேந்திரப் போத்தரசர் என்பது. 'வயந்தப் பிரி அரெசரு' என்றால் 'வசந்தப் பிரிய அரசர்' என்பது. 'தெவகுலம்' என்றால் 'கோயில்'

இந்தக் கல்வெட்டுகளில் மகேந்திரனுக்கு குணபரன், அவனிபாஜன பல்லவன், லலிதாங்குரன், நரேந்திரப்போத்தரையன், சத்துருமல்லன், பகாப்பிடுகு, என்ற பட்டங்களைக் காண்கிறோம். பட்டங்கள் பல வைத்துக் கொள்வதில் இவ்வரசன் அவாமிகுந்தவனென்று தெரிய வருகிறது. மேலே உள்ளவை தவிர, நயபரன், மகேந்திர விக்கிரமன், கலகப் பிரியன், புருஷோத்தமன், நரவாகனன், உதாரசித்தன், பிரகிருதிப் பிரியன், அலுப்தகாமன், நிரபேக்ஷன், சத்திய சந்தன், என்னும் பட்டங்கள் இவன் பெற்றவைகளில் சில. இவைகளில் பகாப்பிடுகு என்றால் பகைவர் மேல் இடியைப் போல் விழுபவன் என்பது பொருள். இது தெலுங்கு மொழி. இதைத் தவிர வேறு தெலுங்குப் பட்டங்களும் வடமொழிப் பட்டங்களும்

இவனுக்கு உண்டு. கோயில்கள் பற்பல கட்டுவித்ததால் 'சேத்தகாரி' என்றும், அவைகளில் சித்திரவேலை அநேகம் செய்வித்ததால் சித்திரக்காரப்புலி என்றும், நாடகம், பாட்டு முதலியவற்றில் மிக ஊக்கமும் அறிவும் உடையவனானதால் மத்த விலாசன், அநித்திய ராகன், விசித்திர சித்தன் என்றும், இன்னும் பல பெயர்களும் பெற்றான். ஸங்கீர்ண ஜாதி என்று மற்றொரு பெயரிருந்ததால் இவன் தகப்பன் பல்லவனும் தாய் தமிழ்ப் பெண்ணுமாய் இருந்திருக்கலா மென்று தோன்றுகிறது. பொருள் தெரியாத வேறு சில தெலுங்குப் பட்டங்கள் சிவி புண்டுண்டு, நில்விலோ நய்யம்பு, பஸரம்பு உண்டு. இவை பண்டைய தெலுங்குபோலும்.

புதுக்கோட்டைக்கு அருகிலிருக்கும் குடுமியா மலையடிச் சார்விலும், திருமயம் குகைக் கோயில் குடைந்திருக்கும் மலையடிச் சார்விலும் மகேந்திரனது மற்றோர்கல்வெட்டுண்டு. அதில் ஏழு பழய முறை இராகங்களில் பாட்டுகளின் ஸ்வரங்கள் வெட்டி யிருக்கின்றன. கல் வெட்டின் இறுதியில் ஸ்ரீ ருத்திராசாரியனுடைய சிஷ்யனான பரம மாஹேச்வரன் (என்றால், உயர்ந்த சிவனடியான்) வெட்டுவித்தது என்று சொல்லி யிருக்கிறது. ருத்திராச்சாரியன் மகேந்திரனது சங்கீத ஆசாரியன் போலும். இதனால் மகேந்திரன் மற்றைய கலைகளிலன்றி பாட்டிலும் பெரும் பயிற்சி உள்ளவனென்று தெரியவருகிறது. அன்றியும் 1300 வருஷத்துக்கு முன்னால் நம்முடைய நாட்டில் சங்கீதம் எவ்வாறுயர்ந்திருந்த தென்று வியக்கத்தக்கதாகும்.

பாட்டில் மாத்திரமல்ல; நாடகம் இயற்றுவதிலும் மகேந்திரன் தேர்ந்தவன். இவன் எழுதின மத்தவிலாசப்பிரஹஸ

ஙம் என்னேர் நூல் சில நாட்களுக்குமுன் அகப்பட்டது; அதை அச்சிட்டிருக்கிறார்கள். இது நகைப்புண்டாக்கத் தக்க நாடகம். இந்த நாடகத்தைப் படித்தால் மகேந்திரன் காலத்தில் மக்களின் நடைகள், வழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்று அறிந்துகொள்ளலாம். மற்றைய நாடகங்களைப்போல் புராண கதைகளைப்பற்றியல்லாமல் மக்களின் வாழ்முறைகளைக் காட்டி எழுதியது. இன்னும் எத்துணை நூல்கள் மகேந்திரன் இயற்றினானோ அறிய வழியில்லை. அவைகள் அகப்பட்டால்தான் உண்டு.

மகேந்திரப் போத்தரையனது பெருமை எத்தகையதோ? அக்காலத்தில் ஆரியாவர்த்தம் முழுவதையும் ஒரு குடையின்கீழ்க் கொணர்ந்த பராக்கிரமம் மிகுந்த ஸ்ரீ ஹர்ஷதேவ சக்கரவர்த்தியை யுத்தத்தில் தோற்கடித்த புஜபலமுடைய புளகேசியைப் புல்லலூரில் ஜயித்து விரட்டியடித்த தோள்வலி யுள்ளவன். கிருஷ்ணை, பெண்ணையாறு, கருடநதி, காவிரி முதலிய புனித நதிகள் பாயும் முண்டராஷ்டிரம், கம்மராஷ்டிரம், தொண்டைமண்டலம், சோழ விஷயம், கொங்குதேசம் இவையெல்லாம் ஆண்டவன். சமணர் செல்வாக் குயர்ந்திருந்ததால், ஒளிமங்கி, தாழ்நிலை அடைந்திருந்த சைவநெறியை உயர்நிலைக்குக் கொணர்ந்த உத்தமன். உலக மிருக்குமளவு சைவர் படித்து, உள்ளம் உருகி, உய்வதற்கு உதவும் தமிழ்வேதமென்ற புகழைப் பெற்ற தேவாரங்கள் பாட ஆரம்பித்த காலத்தவன். ஆரிய மொழியினது உரைநடை,எழுத்துநடை என்ற இருவகைத்தான பிராகிருத, ஸம்ஸ்கிருதங்களில் அழகிய சுலோகங்களென்ன, இனிய நாடகங்களென்ன இயற்றினவன். தமிழர் வடமொழி பயின்று, அம்மொழியில் அரிய நூல்களை இயற்

றுமாறு வழிகாட்டினவன். பாட்டில் நிபுணன். கற்சிற்பம் முதலில் தமிழகத்தில் பரவுமாறு செய்தவன். குளங்களை வெட்டி, காடுகளை யழித்து தம் மக்களுக்கு நன்மைபுரிந்த தருமராஜா.

அக்காலத்து மறுமன்னர்.

மகேந்திரப் போத்தரையன் காலத்தில் இந்தியா நாடு முழுவதிலும் புதியகிளர்ச்சி கிளம்பியிருந்தது. ஆரியாவர்த்த மென்கிற வட இந்தியாவில் ஸ்ரீ ஹர்ஷதேவன் சக்கரவர்த்தி யாய் ஆண்டானென்று முன்னமே சொன்னோம். அவன் கவிகளை மிகப் பாராட்டினான். அவனும் மகா கவி. ரத்னா வளி, பிரியதர்சிகா, நாகாநந்தம், முதலிய இனிய வடமொழி நாடகங்களை இயற்றினான். அவன் சன்னிதியில் புகழ்பெற்ற கவியான பட்டபாணன், ஹர்ஷசரித்திரம், காதம்பரி, என்ற உயர்நடையில் எழுதின கத்திய காவியங்களையும், பார்வதி பரிணயம் என்ற நாடகத்தையும் இயற்றினான். இவான்சு வங் என்ற சீனத்துப் பெயரையும், தருமத்திராதன் என்ற வடமொழிப் பெயரையும் பூண்ட சீனதேச யாத்திரைக் காரன் ஸ்ரீ ஹர்ஷதேவன் சந்நிதியில் பலகாலமிருந்து பல வெகுமதிகள் பெற்றான். ஸ்ரீ ஹர்ஷதேவனது முக்கிய பட்டணம் இப்போது கனௌஜ் என்கிற கானியகுப்ஜம். அவ்வூரில் புத்தன், சூரியன், சிவன், இம்மூவருக்கும் அழ கிய கோயில்களைக் கட்டி ஸ்ரீ ஹர்ஷன் அழகிய உற்சவங்களை நடத்தினான்.

நடு இந்தியாவில் வாதாவி நகரத்தில் இரண்டாவது புளகேசி ஆண்டான். இவன் ஸ்ரீ ஹர்ஷனோடும் மகேந்திர

ஞேடும் போராடினதைப்பற்றியும் முன்னமே சொல்லியிருக் கிறோம். இவன் விஷ்ணுபக்தன். சளுக்கநாட்டில் குகைக் கோயில்கள் கட்டினவன். இவனது மராட்டிய வீரர்கள் போரில் முன்வைத்த காலைப் பின்வாங்காமல் யுத்தஞ் செய் பவர். சளுக்க சேனாதிபதிகளில் எவனாவது சண்டையில் தோல்வியடைந்தால் அவனுக்குப் புடவைகட்டி தெருவில் நடத்திவைப்பது வழக்கம். இந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் அவ்வீரர்கள் தோற்றுபோனால் உயிரை விட்டுவிடுவர். யுத்தஞ் செய்யும்போது சளுக்க வீரர் தாமும் சாராயத்தைக் குடித்தும், யானைகளுக்குச் சாரயத்தைப் புகட்டியும், அளவற்ற வீரத்தன்மையுடன் போர்புரிவர்.

கி. பி. 600-ம் வருஷத்துக்குச் சிலகாலம் முன்னால் பாண்டிய ராஜ்ஜியம் களப்பிரர் என்பவர் கையில் அகப்பட்டு பாண்டியர் நிலை கெட்டிருந்தது. இந்தக் களப்பிரர் எவர், இவர் தலைவர் எவர், எவ்வாறு மதுரையைக் கைக்கொண்ட னர் என்று கண்டுபிடிக்க இதுவரையில் ஆதாரம் ஒன்றும் அகப்படவில்லை. மகேந்திரன் கச்சியில் ஆளுங்கால், களப் பிரரை மதுரையிலிருந்து பாண்டியர்கள் தொலைத்து மறு படியும் அப்பாண்டியர்கள் ஆள ஆரம்பித்தார்கள். மதுரை யில் பாண்டியர் ஆட்சியை மறுபடியும் நிலைநிறுத்தின மன்ன னது பெயர் கடுங்கோன் பாண்டியன். பிற்காலத்தில் பிறந்த பாண்டிய சாசனமொன்றில், "புயல் வீசும் கடலிலிருந்து கதிரவன் கிளம்பினாற்போல் கடுங்கோன் பாண்டியாதி ராஜன் பூமிதேவியினது உரிமையைக் கைக்கொண்டு பிற மன்னரைத் தொலைத்து, அரசாட்சி நடத்தினான்" என்று

எழுதியிருக்கிறது. இதைத்தவிர இவனைப்பற்றி வேறொன்றுந் தெரியவில்லை.

இக்காலத்தில் தென்னிந்தியாவில் கங்கை குலமன்னவரும் பெரும் புகழ்பெற்று உயர்நிலை யடைந்தார். இக் கங்கை குலத்தார் தற்காலத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் இடமான கோலாற்றில் உதித்தவர். இவர் குலத்தின் ஒரு கிளையினர் கீழ்க்கரையில் வேங்கி என்னும் ஊரில் ஆண்ட கீழ்ச்சளுக்கர் நாட்டுக்கு வடக்கும் கலிங்கத்துக்குத் தெற்குமான தேசத்தில் அரசாட்சி பெற்றார். இம்மன்னவருக்குக் கீழ்க்கங்கைய அரசரென்று இந்திய சரித்திரத்தில் பெயரிட்டிருக்கிறார்கள். இவரது முக்கிய பட்டணம் விசாகப் பட்டணம் ஜில்லாவுக்கு வட எல்லையிலுள்ள ஸ்ரீகாகுளம் என்ற ஊர்; நாகாவளி நதிக்கரையில் உள்ளது. பழய தமிழ்ச் செய்யுள்களில் கலிங்கம் என்ற பெயருடையதென்றும், மிக மெல்லிய ஆடையென்றும் சொல்லியிருக்கிற துணி இந்த ஸ்ரீகாகுளத்தருகில்தான் நெய்தது ஆகும். நிகழ் காலத்திலும் இவ்விடத்தில் முற்கூறிய நெசவு கொஞ்சமுண்டு. கங்கையர் குலத்தின் மற்றோர் கிளையினர் காவிரிக்கரையில் (மைசூர் நாட்டில்) உள்ள தலைக்காடைத் தலைநகராய்க்கொண்டு ஆண்டனர். இவர்க்கு மேல் கங்கையர் என்று சரித்திரங்களில் பெயரிடுவர். இவர் கதம்பர் முதலிய சிற்றரசரை ஜயித்து கோவாபுரம் வரைக்கும் ஆண்டார். இக்குலத்தவன் இந்திரவர்மன் என்ற மகிமையுற்ற மன்னன் கி. பி. 580-இல் ஒரு புதிய காலக்கணக்கை ஏற்பாடு செய்தான். அந்த வருஷத்துக்கு இப்போது பசலி என்கிறோம். அறுப்பு காலத்தில் பசலி என்பது ஆரம்பிக்கும்.

கி. பி. ஆருவது நூற்ருண்டில் (அதாவது 500 முதல் 599 வரையில்) விஷ்ணு பக்தியும் சிவபக்தியும் தமிழ்நாட்டில் மிகுந்து, வைணவ நெறியும் சைவ நெறியும் பரவின. விஷ்ணு கோயில்களும், சிவாலயங்களும் பெருகின; ஆனால் அக்கோவில்கள் மரத்தாலும் செங்கல்லாலுமே கட்டப் பெற்றவைகள். அவைகளில் ஆகமங்களென்கிற வடமொழி நூல்களில் சொல்லியவாறு அந்தணர்கள் பூஜையை நடத்தி வந்தார்கள். ஆகமங்களில் சொல்லிய சிவதீக்ஷையையும், வைஷ்ணவ வழிபாடுகளையும் பல சாதியாரும் பெற்று, ஞானம் உதயமாகி சிவ பக்தர்களும் வைஷ்ணவ பாகவதர்களும் நாட்டில் அதிகரித்தார்கள். நிகழ்காலத்தில் மக்கள் கொண்டாடும் சிவஸ்தலங்களும் வைஷ்ணவ ஸ்தலங்களும் அந்த ஆருவது நூற்ருண்டிற்கு முன்பே தோன்றி மகிமையோடு விளங்கின; ஆனல் இப்போதிருக்கும் கற்கட்டிடங்கள் அப்போதில்லை. கர்ப்பக்கிருகங்களும் விக்கிரகங்களும் இப்போது போலவே அப்போதும் இருந்தன.

சைவம்

மகேந்திரப் போத்தரையன் ஆண்டபோதே அப்பரென்கிற திருநாவுக்கரசர் சிவஸ்தலங்களில் சிலவற்றைப் போய்ப்பார்த்து, அங்கிருக்கும் சிவமூர்த்திகளைத் துதித்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். அப்பர் சிவபக்தி மிகுந்து, ஏனைய பொருள்களை விட்டுவிட்டு சிவனைப்பற்றியே பாட ஆரம்பித்தார். இதுமுதல் வழிபடு கடவுளைத்தவிர மற்றைய பொருள்களைப்பாடுவது தமிழ்நாட்டில் தழைக்கவில்லை. இது

முதல் மூன்று நூற்றாண்டுகள் வரையில் அகப்பொருள், இயற்கைப்பொருள், போர், அரசரது மகிமை முதலிய விஷயங்களைப் பற்றி செய்யுள் செய்வது இல்லாமற் போயிற்று. சிவனைப்பற்றி அப்பரும், அவருக்குப் பின் திருஞான சம்பந்த மூர்த்தியும், சுந்தரமூர்த்தியும் பாடின பாசுரங்களுக்குத் தேவாரம் என்று பெயர். இப்பாட்டுகள் அனேகமாய் பத்து பத்தாய் ஆன பதிகங்கள். இவைகளுள்சங்கச்செய்யுள் முறையாயல்லாது, ஆரிய மொழிகள், ஆரிய விருத்தங்கள், ஆரியக்கவி நடைகளும், புராணக் கதைகளும் மிகுந்திருக்கும்.

ஆகமங்களில் சொல்லப்படும் விஷயங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களென்றும். அதில் முதலிரண்டும் கரும மார்க்கம் நிறைந்தும் மற்றிரண்டும் ஞானமார்க்கம் நிறைந்தும் இருக்கும். ஞான நெறி மிகக் கஷ்டமானது. கோயில்களில் தொண்டு செய்து கடவுளை இடைவிடாது போற்றுவது சுலபம். ஆதலால் அப்பர் இறுமாப்பற்று எளிய தொண்டுகளைச் செய்ய வேண்டுமென்பதையே வற்புறுத்திப் பாடினர். உதாரணமாக அவர் பாசுரங்கள்சிலவற்றை எழுதுவோம்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினால் பத்திசெய்கேன் என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தா உன்னாடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

காண்பான் = காணும்பொருட்டு
அத்தா = தந்தையே
அடியனேன் = தொண்டனாகிய நான்
வந்தவாறே = வந்தவாறு + ஏ (வந்தது)

வேதம் ஓதிலென் சாத்திரங் கேட்டிலென்,
நீதி நூல் பல நித்தல் பயிற்றிலென்
ஓதி அங்கம் ஓராறும் உணரிலென்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே.

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற் பேறரோ.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே
நீவா நித்தலும் எம்பிரானுடைய கோவில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்

நித்தல்= தினந்தோறும்
பயிற்றிலென்= போதித்தால் என்ன
அங்கம்= வேதாங்கங்கள் ஆறு
உள்குதல்= சிந்தித்தல்
சழக்கர்காள்= வீணர்கள், வாதிடுவோர்
பாத்திரம்= உரியபொருள், போற்றத் தகுந்த பொருள்
பணிதிரேல்= பணியாவிட்டால், வணங்காவிட்டால்
மாத்திரை= கண்ணிமைக்கும் அளவு அல்லது கை
நொடிக்கும் அளவு
மாற்பேறு= ஒரு சிவஸ்தலம்= திருமாற்பேறு.

புலர்வதன்முன்= பொழுது விடியுமுன்
அலகிட்டு= விளக்குமாற்றால் கூட்டி, கோவிலில் இருக்கும் விளக்கு
மாறுக்கு திருவலகு என்று பெயர்.

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதியென்றும்
ஆரூரா என்று என்றே அலராநில்லே.

பூக் கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

மெழுக்குமிட்டு = பசுவின் சாணத்தால் மெழுகி
புனைந்து = கட்டி, தொடுத்து
அலைபுனல் = அலைகளையுடைய கங்கை
ஆதி = முதல்வன்
ஆரூர் = திருவாரூர் இப்போது திருவாலூர் என்பர்.

பூ + கைக்கொண்டு = மலரை கையில்கொண்டு
நவில்கிலார் = சொல்லார்கள், நவில் (பகுதி)
ஆக்கை = யாக்கையின் திரிபு = உடம்பு = சரீரம், இரை = உணவு
அலமந்து = கலங்கி (அலமரு = பகுதி) கழிவர் = இறப்பர்

காமுற்று = ஆசைகொண்டு
அரற்று = வாய்விட்டுக் கதறல்
புறக்கணிப்பார் = ஒதுக்கிவிடுவார், பொருளல்ல என்று கருதுவார்.
கீழ்க் கணக்கு = நுட்பமான கணக்கு.

அப்பர் காலத்தில் தமிழ்நாட்டில் வடமொழி வேறுன்றி யிருந்ததென்றும், ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் மாறுபாடு ஒன்றுமில்லையென்றும் இவர் பாசுரங்களினின்றறியலாம்.

மூரி முழங்கொலி நீரானான் கண்டாய்
முத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க்கு இன்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்
அண்ணாமலை உறையும் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

பந்தணவு மெல்விரலாள் பாகன்றன்னை
பாடலோடு ஆடல் பயின்றான்றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலையானைக்
கோலமா நீல மிடற்றான்றன்னைச்

மூரி முழங்கொலி = மிகவும் முழங்குகின்ற, 'ஏரி நிறைந்தனைய செல்வன்' = 'ஊருணி நிறைந்தற்றே' என்ற குறளோடு ஒப்பிடத் தக்கது. ஆரியன் = வடமொழிக் குரியவன், தமிழன் = தமிழ்மொழிக் குரியவன், அண்ணாமலை = திருவண்ணாமலை, வாரிமதம் = கடல் போன்ற மிகுந்த மதஜலம், களிறு = ஆண் யானை, மறைக்காடு = வேதாரண்ணியம், கிழக்குக் கடற்கரையிலுள்ளது. மணாளன் = நாயகன், வேதாரண்யத்தில் சுவாமி மணமகன்கோலத்துடன் எழுந்தருளியுள்ளார்.

அணவுதல் = தடவுதல், மெல்விரலாள் பாகன் = மெல்லிய விரல்களையுடைய பார்வதிகணவன், கொந்து + அணவு = மலர்க்

செந்தமிழோடு ஆரியனைச் சீரியானைத்
திருமார்பில் புரிவெண்ணூல் திகழப்பூண்ட ;
அந்தணனை ஆவடுதண் டுறைமேய
வானடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேன்.

சிவபெருமானது திரு உருவத்தை எவ்வாறு பாடினு ரென்பதைக் காட்ட.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண் [ணீறும்,
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

அப்பர் தம் காலத்துக்கு முன்னிருந்த சமணப் புலவர் களைப்போல் அவரும் மனப் பண்புகளைப் பொருள்களாக பாவித்துக்கூறி பாசுரங்களைப் பாடியுள்ளார்.

கொத்துகள் நெருங்கிய, நறும்=வாசனையுள்ள, மிடறு=கழுத்து, நீலமிடற்றன்=நீலகண்டன், சீரியான்=கண்டம் சிறப்புடையோன் புரிவெண்ணூல்=திரிக்கப்பட்ட பூணூல், ஆவடுதண்டுறை=திரு வாவடுதுறை, அரன்=பாவத்தைப் போக்குபவன் சிவன், உய்ந் தேன்=பிழைத்தேன்.

குனித்த புருவம்=வளைந்த புருவம்
குமிண் சிரிப்பு=புன்னகை
பனித்த சடை=ஈரம் பொருந்திய சடை
வெண்ணீறு=வெண்மையான விபூதி
எடுத்த பொற்பாதம்=தூக்கிய திருவடி
மாநிலம்=பெரிய பூமி

மனமெனும் தோணி பற்றி மதி யெனும்
கோலை யூன்றி,
சினமெனும் சரக்கை யேற்றிச் செறி
கடலாடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போது
அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றி யூருடைய கோவே.

மெய்யாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறை
யெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும்
வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவ கதி
விளையுமன்றே.

சிவபெருமானை வழிபட்டால் மனிதர் அச்ச மறப் பிழைக்கலாம் என்ற தீரமொழியை உறுத்துக் காட்டுவர்.

செறிகடல்=அலைகள் நிறைந்த கடல்
மதனெனும் பாறை=காமமாகிய பாறை
மறியும்போது=கலங்கும்போது
உனையுறும்=உன்னைச் சிந்திக்கும்
உணர்வு=ஞானம்=அறிவு
ஒற்றியூர்=திருவொற்றியூர்=சென்னைக்கருகில் உள்ளது.

வித்தி=விதைத்து, பொறை=பொறுமை, தகவு=தகுதி.

மண் பாதலம் புக்குமால் கடன்மூடி மற்றேழுலகும்
விண்பா றிசைகெட்டிரு சுடர்வீழினு மஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்று கண்டோந் திருப்பாதிரிப்புலியூர்
கண்பாவு நெற்றிக்கட வுட்சுடரான் கழலிணையே.

சுண்ண வெண்சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணி
வண்ண வுரிவையுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணலரண் முரணேறுமகலம் வளாயவரவும்
திண்ணன் கெடிலப் புனலுமுடையா ரவர்தமர் நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை; யஞ்சவருவதுமில்லை.

கல் நெஞ்சு கரையுமாறு அப்பர் அனேக பாசுரங்கள் பாடி யிருக்கிறார்.

மால்கடல்=பெரிய கடல், விண்பால் + திசைகெட்டு
விண்=ஆகாயம், இருசுடர்=சூரிய சந்திரர்
அஞ்சல்=பயப்படாதே
கண்பாவு நெற்றி=கண்பொருந்திய நெற்றி
கழலிணை=இரண்டு பாதங்கள்
திருப்பாதிரிப்புலியூர்=பாதிரி விருக்ஷத்தையுடையது, புலி வியாக்கிரபாதர்=அவரால் பூஜிக்கப்பெற்றது.

சுண்ணம்=வெண்மை, சூளாமணி=சிரசில் அணிந்துகொள்ளும் மணி, உரிவை=புலி=அரண்=மதில்; அரவு=பாம்பு, தமர்= உறவினர்.

பழியுடைய யாக்கைதனில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன் கடவூர்வீரட்டனாரே

செத்துச் செத்துப் பிறப்பதை தேவென்று
பக்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்தனென்று அரியொடு பிரமனும்
துத்தியஞ் செய்ய நின்ற நற்சோதியே.

நூறு கோடி பிரமர்க ணொங்கினா
ராறுகோடி நாராயண ரங்ஙனே
யேறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாத நல்லீச னொருவனே.

பக்தியைப் பெருக்குமாறு பாடுவோர் தாம் வழிபடு கடவுளை முதல் தெய்வமாய்ப் போற்றுவது கடனே. அன்றியும் ஏனைய தமிழ்ப் புலவர்களைப் போல நீர்வளம், நிலவளங்களைக் கூறாது, பக்திக்குரிய வற்றையே பன் முறை

யாக்கை = சரீரம் = பாழுக்கே = வீணுக்கே = தெளியகில்லேன் = தெளியலில்லை. கழி = உப்பங்கழி.

தேவென்று = தெய்வமென்று

அத்தன் = தந்தை = அரி = விஷ்ணு துத்தியம் = ஸ்தோத்திரம்.

நொங்கினார் = மாண்டார்கள்

இந்திரர் = கங்கையின் மணலைப் போன்று எண்ணில்லாதவர்கள்

ஈறு இலாத = முடிவிலாத =

ஈசன் ஒருவன் = கடவுள் ஒருவனே.

யும் வற்புறுத்திச் சொல்வர். ஆனாலும் ஆங்காங்கே வருணனைக்குறிய சிற்சில குறிப்புகளும் காணலாம். சிதம்பரப் பாசுரமொன்றில்

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாட
நெருங்கி யெங்கும்
வாளையுடைப் புனல்வந்து
எறிவாழ் வயல்தில்லை தன்னுள்
ஆளவுடைக் கழல் சிற்றம்பலத்தரன்
ஆடல் கண்டால்
பீளையுடைக் கண்களால் பின்னைப் பேய்த்
தொண்டர் காண்பதென்னே.

வைஷ்ணவம்.

வைஷ்ணவ சமயமும் சைவ சமயத்தைப் போல் பக்தி மார்க்கத்தையே உயர்வாகக்கொண்ட நெறியாகக் கூறும். ஆனால் சைவர் சிவன் அருளால் தான் வீடுபெற இயலுமென்றும், வைஷ்ணவர் விஷ்ணுவின் கருணையினால் மாத்திரம் தான் மோக்ஷம் அடைய முடியும் என்றும் கூறுவர். முதலில் பக்தியதிகத்தால் சைவர், சிவன் விஷ்ணுவைவிட உயர்ந்தவரென்றும் வைஷ்ணவர், விஷ்ணு சிவனைவிட உயர்ந்தவரென்றும் போற்றினர். அப்போது சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் ஒன்றற்கொன்று அருகிலேயே உண்டாயின; அன்றியும் அப்போது கட்டின சிவன் கோயில்

கமுகு=பாக்குமரம்; மாடம் மாளிகை; புனல்=நீர்; தில்லை=சிதம்பரம்; பீளையுடைய கண்கள்=அழுக்குடைய கண்கள்.

களின் சுவர் மேல் விஷ்ணு விக்கிரகங்களும், விஷ்ணு கோயில்களின் சுவர்மேல் சிவ விக்கிரகங்களும் திருமிப்பது உண்டு. பிற்காலத்திலோ (கி. பி. 1000-க்குப் பின்) சைவர்க்கும் வைஷ்ணவர்க்கும் பகை மிகுந்து, இவ்வாறில்லாமல் போய்விட்டது.

விஷ்ணுவைத் தமிழ்ப் பாசுரங்களில் பாடினவர்களுக்கு ஆழ்வார்கள் என்று பட்டப் பெயர் உண்டு. இவரில் முதல்வர் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவர். இவர் தொண்டை மண்டலத்தவர்; பொய்கை ஆழ்வார் கச்சித்திருப்பதியி லிருக்கும் திருவெஃகா வென்னும் திவ்ய ஸ்தலத்திலும், பூதத்தாழ்வார் கடல் மல்லை (மகாபலிபுரம்) என்னும் க்ஷேத்திரத்திலும், பேயாழ்வார் மைலாப்பூரிலும் அவதாரஞ் செய்தவர்கள். இவர் மூவரும் ஓரிரவில் (தென்) பெண்ணை யாற்றங்கரையிலுள்ள திருக்கோவலூரில் ஒரு இடைகழி*யில் சேர நேர்ந்தது. அப்போது ஒவ்வொருவரும் விஷ்ணுவைப்பற்றி ஒரு திருவந்தாதி பாடினர்

இவர்கள் திருமாலைத் துதித்த முறையையும் இவர் செய்யுள் நடையையுங் காட்ட இவரது பாரசுரங்கள் சிலவற்றைவரைவோம். பண்புகளைப் பொருள்களாய் வைத்துப் பாடு முறையில் பொய்கை யாழ்வார்,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக— செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே [illegible].

---

* கொடுந்தமிழில் இதை 'ரேழி' என்பர்.

யென்று பாடினர். பூதத்தாழ்வாரும் அவ்வகையாகவே,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச்சுடர், விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான் என்று பாடினர்.

விஷ்ணுவை வழிபடுதல் எவ்வாறென்றும் அது எப்பயனைப் பயக்குமென்பதும் இப்பாட்டுகளில் பொய்கையாழ்வார் சொல்லியிருக்கிறார்.

தொழுது மலர் கொண்டு தூபம் கையேந்தி
எழுதும் எழுவாழி நெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியேகை தொழுவான்
அந்தரமொன்றில்லை யடை.

நாடினும் நின்னடியே நாடுவன் நாடோறும்
பாடினும் நின்புகழே பாடுவன் — சூடினும்
பொன்னாழி யேந்தினன் பொன்னடியே சூடுவதற்கு
என்னாகில் என்னே எனக்கு.

நாவாயிலுண்டோ நமோ நாரணா வென்று
ஓவாதுரைக்கும் உரையுண்டோ—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டோ என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும்திறம்

தகளி = விளக்கு எரிக்கும் அகல், வார் = நீண்ட, கதிரோன் = சூரியன், சுடராழியான் = பிரகாசம் பொருந்திய சக்கரத்தையுடைவன் = ஆர்வம் = அன்பு.

தூபம் = நல்ல வாசனையுள்ள புகை, வாழி = வாழ்வாயாக;
பழுதின்றி = குற்றமின்றி, மால் = விஷ்ணு
சூடினும் = தரித்துக்கொண்டாலும்; ஆழி = சக்கரம்
திறம் = சிறப்பு.

திருநாவுக்கரசர் நடையைப் போலவே பொய்கையாழ்வார் திருவாக்கும், எளிதாயும் உள்ளத்தை உருக்குவதாயும் இருக்குமென்பதைக் கவனிக்கவேண்டும். இவர் நான்கு கோயில்களை முக்கியமாய்ச் சொல்லியிருக்கிறார்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும் நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர்.

பூதத்தாழ்வார் பக்தியின் பெருமையை

அரியது எளிதாகும் ஆற்றலால் மாற்றி
பெருக முயல்வாரைப் பெற்றால்—கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்றி முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து.

என்று பாடினார். கனவிலுங்கூடத் திருமாலைத் திருவுள்ளத்தில் வைத்திருந்ததாகப் பின்வரும் பாசுரங்கள் சொல்லும்.

கண்டேன் திருமேனி யான்கனவில் ஆங்கவன்கைக்
கண்டேன் கனலுஞ் சுடராழி—கண்டேன்
உறுநோய் வினையிரண்டும் ஓட்டுவித்துப் பின்னும்
மறுநோய் செறுவான் வலி.

வெஃகா = கச்சியிலுள்ள ஒரு ஸ்தலம். கோவல் = கோவலூர்
இடர் = துன்பம்.

கோடு = கொம்பு, கோட்டுமாமலரால் தாழ்ந்து = கொம்பிலுள்ள மாமலரைக் கொண்டு வணங்கி,
கனலும் = பிரகாசிக்கும். சுடர் ஆழி = சுடர்பொருந்திய பிரகாசம்.

பகல்கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில்
மிகக்கண்டேன் மீண்டு அவனை மெய்யே—மிகக்கண்டேன்
ஊன்திகழும் நேமி ஒளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு.

பேயாழ்வார் திருமாலை வெகு அழகாக வர்ணிக்கிறார்.

தானே தனக்குமவன் தன்னுருவே எவ்வுருவம்
தானே தவஉருவம் தாரகையும்—தானே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்
திருசுடரு மாய விறை.

எழில்கொண்டு மின்னுங்கொடி யெடுத்து வேகத்
தொழில் கொண்டு தான் முழங்கித்தோன்றும்—எழில்
[கொண்ட
நீர்மேகம் அன்ன நெடுமால் நிறம்போல
கார்வானங் காட்டுங் கலந்து

திருவல்லிக்கேணிக் கடவுளைப் போற்றும் பாசுரம் மிக அழகியது.

ஊன்திகழும் நேமி = மாமிசம் தங்கிய சக்கரம்.

தாரகை = நட்சத்திரம்
இறை = கடவுள்

எழில்கொண்ட = அழகு வாய்ந்த
கார்வானம் = கரியமேகம்

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்கு மணி விளக்காம்—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக்கேணியான் சென்று.

திருவேங்கட முடையானது உருவு சிவன், விஷ்ணு இவ்விருவர் உருவமும் கலந்திசைந்திருந்ததாக பின் வரும் பாசுரத்தில் சொல்கிறார். இவ்வொன்றினாலே இக்கோயில் மிகப்பழைய கோயிலென்றறியலாம்.

தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவம் ஒன்றாயிசைந்து.

இம்மூன்று ஆழ்வார் பாடல்கள் சிறியவர்க்கும் தெரியுமாறும் பெரியவர்க்கும் மனமுருகுமாறும் உள்ளவை. ஆகையால் இப்பாசுரங்களைக் கேட்டவர் விஷ்ணு பக்தரானார்; வைஷ்ணவமும் விரைவாய் தென்னாட்டில் பரவிற்று. பூதத்தாழ்வார் பாடியபடிமக்கள்,

---

திரைகள் = அலைகள்

வல்லி = கொடி. ஒன்றிய = பொருந்திய. திருவல்லிக்கேணி சென்னைக்கருகிலுள்ள ஒருவைணவத் திருப்பதி.

ஒள்மழுவு = பிரகாசமுடைய மழுவாயுதம் = மழு = நெருப்பு
அரவு = பாம்பு.
திருமலை = இதற்குத் திருவேங்கட மென்றும் திருப்பதி யென்றும் பெயர்.

வரைச்சந் தணக்குழம்பும் வான்கலனும் பட்டும்
விரைப்பொலிந்த வெண்மல்லிகையும்—நிறைத்துக்கொண்டு
ஆதிக்கன் நின்ற அறிவனடியிணையே
ஓதிப் பணியத் தலைப்பட்டார்கள்.

நரசிங்கப்போத்தரையன்.

(கி. பி. 625—650.)

போர்கள்.

மகேந்திரப்போத்தரையன் காலஞ்சென்ற பின்பு அவன் மகன் நரசிங்கப்போத்தரையன் பட்டாபிஷேகம் பெற்றான். உடனே தன் தந்தையுடன் போராடின புளகேசியினது இறுமாப்பை அழிக்கவேண்டுமென்று கருதி அவன் நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான். பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய சிற்றூர்களில் * போராடி வெற்றியுற்றான். பின்பு வாதாவி நகரத்தையும் கைப்பற்றி அவ்வூரை நாசஞ்செய்தான். அழித்து அவ்வூரில் ஜய ஸ்தம்பத்தை நாட்டி, அதன்மேல் தன் வீரச்செயல்க

வரை = மலை, கலன் = ஆபரணம், விரை = வாசனை

பணிய = வணங்க

* இவ்வூர்கள் இப்போது இருக்கின்றனவா என்றும் எங்கே இருக்கின்றன என்றும் தெரியாது.

ளைக் குறிப்பிட்டு ஒரு கல்வெட்டு வெட்டுவித்தான். அக் கல்வெட்டு இப்போது அழிந்துபோய்விட்டது. ஆனாலும் அதன்மேல் நரசிங்கன் பட்டப்பெயரான 'மகாமல்ல(ன்)' என்பதும் 'க்ஷிதிபுஜாம் அக்ரேஸர: பல்லவ' (அரசரில் முதல்வனான பல்லவன்) என்பதும் 'ஸ்தம்பம்ஜய' என்பதும் '(நரஸி)ம்ஹவிஷ்ணு' என்பதும் இப்போதும் காணலாம். இது நடந்தது கி. பி. 642-இல். நரசிங்கப்போத்தரையனது மகனுக்கு மகனான பரமேச்வரப்போத்தரையன் அளித்த சாசனம் ஒன்று கூரம் என்னும் ஊரில் கிடைத்திருக்கிறது. அதில் நரசிங்கனைப்பற்றிப் பின்வருமாறு புகழ்ந்து கூறியிருக்கிறது:—"கீழ் மலையிலிருந்து சூரிய சந்திரர் உதித்தாற்போல் இப் பல்லவ குலத்து அரச பரம்பரையில் வந்தவன், தலைவணங்கா மன்னரது தலைமேலிருக்கும் சூடாமணி, தன்னை எதிர்த்த யானைக்கூட்டத்துக்குச் சிங்கம்போன்றவன், நரசிங்கப்பெருமானே அவதரித்ததுபோல் தோன்றுபவன், சோழ, கேரள, களப்பிர, பாண்டியர்களை அடிக்கடி முறியடித்தவன், (கார்த்தவீர்யனென்னும்) ஆயிரங்கையனைப்போலப் பலநூறு போர்கள் புரிந்தவன், பரியள, மணிமங்கல, சூரமார யுத்தங்களில் புளகேசியானவன் தோல்வியுற்று ஓடும்போது விஜய என்னும் மொழியை அவன் முதுகு ஆகிய பட்டயத்தின்மேல் எழுதினவன்."

இந்தப் பெரும்போரில் நரசிங்கனுக்குப் படைத்தலைவனாயிருந்து நடத்தினவர் பரஞ்சோதி என்பவர். இது பெரியபுராணத்திலுள்ள சிறுத்தொண்டநாயனார் வரலாற்றின் 6-வது பாசுரத்தால் தெரியவரும்.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாக துளைநெடுங்கை வரையுகைத்தும்
பண்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்
[தார்.

இதுவுமன்றி நரசிங்கப்போத்தரையன் மற்றோர் போர் நிகழ்த்தினன். இதைப்பற்றி மகாவம்சம் என்னும் பாலி பாஷையில் எழுதியிருக்கும் இலங்கைச் சரித்திரத்தில் விவரமாய் எழுதியிருக்கிறது. என்னவெனின்:—

இலங்கை அரசன் ஹட்டதத்தன் என்பான் அத் தீவினது இளவரசனை மானவம்மனைத் துரத்திவிட்டான். அவன் நரசிங்கனது சன்னிதியில் அடைக்கலம் புகுந்து, இப் பல்லவ அரசன் சளுக்கவல்லவன் புளகேசியுடன் போட்ட சண்டையில் நரசிங்கன் பக்கத்தில் நின்று போர் புரிந்தான். நரசிங்கன் நன்றியறிவும், சிநேகமும் பாராட்டி மானவம்மனுக்கு மாப்படை, மக்கட்படை, மரக்கலப்படைகளை அளித்து, இலங்கைக்கு அனுப்பினன். இப்படைகள் இலங்கையில் இறங்கினவுடன் அந்நாட்டில் ஒரு பகுதியை மானவம்மன் கைப்பற்றினன். ஆனல் உடனே ஹட்டதத்தன் மானவம்மனை முறியடித்துத் துரத்திவிட்டான். மானவம்மன் கச்சிமாநகருக்குத் திரும்பிவர,

---

தண்டு = சேனை, வடபுலம் = வடநாடு, துகளாக = தூளாக, நெடுங்கைவரை = நீண்ட கையையுடைய மலையொத்த யானை, குவை = குவியல், பகட்டினம் = எருமைக்கூட்டம், பரி = குதிரை, கவர்ந்து = கைக்கொண்டு, இகலரசன் = வெற்றியையுடைய அரசன்.

நரசிங்கனது உள்ளத்தில் பின்வருமாறு நினைப்பு உண்டா யிற்று:— 'புகழ்பெற விரும்பும் எந்தோழன் எம் முன்னிலை யில் பலகாலமிருந்தும் தனக்கு உரிய நாட்டைக் கைப் பற்ற இயலவில்லை. அவனுக்கு மூப்போ முதிர்ந்துகொண்டு வருகிறது. அவன் இத்துணைத் துன்பத்தைப் படும்போது நான் எவ்வாறு இன்பத்தை அனுபவிப்பது? இப்போதே னும் அவன் தன்னாட்சியை அடையுமாறு என் படையெல் லாம் கொடுத்து உதவவேண்டும். இல்லாவிடின் நான் உயிர்த்திருப்பது உவப்பைப் பயக்காது, இவ்வகை ஆலோ சனையால் தன் படைகளை ஒன்று கூட்டி, மானவம்மனிடம் ஒப்புவித்து, தானும் துறைமுகம் சென்றான். பின்பு தன் போர்வீரரனைவரையும் மானவம்மனுடன் கப்பலேறிக் கட லைக் கடந்து செல்லச் செலவிட்டான். ஆயினும் தான் கூடப் போகாவிடின் போர்வீரர்க்குக் கப்பலேறச் சம்மத மிராதென்று ஐயமுற்று, மானவம்மனிடம் தன் ஆபரணங் களையும், காவலாள்களையும், தனக்குரிய குடை, சாமரம், முதலிய அரச அணிகளையும் கொடுத்து, அவனை ஒருவர்க் குந் தெரியாமல் கப்பலேறச் சொல்லி, கப்பல் மேல்தட்டி லிருந்து கொட்டை என்று பெயருள்ள அரச பேரிகையை அடிக்கக் கட்டளையிட்டான். முரசொலி கேட்கவே, அர சன் கப்பலேறிவிட்டான் என்று நினைத்து, வீரரெல்லோரும் பரபரப்பாய்க் கப்பலேறினார்கள். உடனே கப்பல்கள் புறப் பட்டன. அக்கப்பல்கள் கடல்மீது மிதக்கும் பேரூர்போலப் பொலிந்தன. மானவம்மனும் இலங்கை போய்ச் சேர்ந்து வெற்றி பெற்று அரசாட்சியைக் கைக்கொண்டான். இச் செய்திகளைக் குறித்து ஒரு பல்லவ சாசனத்தில் நரசிங்கனை இராமனைவிட உயர்வலி உற்றவன் என்று புகழ்ந்திருக்கிறது.

நரசிங்கன் தன் தந்தையை விட அதிகமாய்க் கணக்கற்ற பட்டங்களைத் தரித்தான். அவைகளை அவன் செய்வித்த கோயில்களிலுள்ள கல் வெட்டுகளில் பார்க்கலாம். அப்பட்டங்களில் சிலவாவன:—மகாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், அத்தியந்தகாமன், அமேயமாயன், நயநாங்குரன், ஸ்ரீநிதி, இரணஜயன். போர்த்திறத்திலும், கோயில்கள் நிருமிப்பதிலும் தகப்பனில் தாழ்ந்தவனல்லன். நருமதை நதியின் தீரம் முதல் இலங்கை வரையில் இவனது மகிமை நான்கு திசைகளிலும் பரவி யிருந்தது.

நாட்டு நிலை.

நரசிங்கப் போத்தரையன் கச்சிமா நகரில் அரசாட்சி புரியுங்கால் சீனதேசத்தி லிருந்து இவான் சுவங் (தருமத்திராதன்) என்ற சீனதேசத்தவன் இந்திய நாட்டிலுள்ள பௌத்த க்ஷேத்திரங்களில் ஸ்வாமிதர்சனம் செய்வதற்கும், ஸம்ஸ்கிருத கிரந்தங்களைச் சம்பாதிப்பதற்குமாக யாத்திரை செய்து வந்தான். இவன் காஞ்சீபுர க்ஷேத்திரத்தையும் வந்து பார்த்தான். பின்பு சீனபாஷையில் இந்தியா நாட்டை வர்ணித்து எழுதினான். அந்நூலில் தொண்டை மண்டலத்திற்கு த—லோ—பி—து என்று பெயரிட்டிருக்கிறான். 'திராவிட' என்னும் மொழி சீனபாஷையில் தலோபிது என்று திரிந்து வரும். ஏனெனில் சீனத்தில் 'ர' 'ட' என்னும் எழுத்துக்கள் கிடையாது. திராவிட மென்பது அக்காலத்தில் தமிழ் என்பதின் வடமொழிப் பெயர். தமிழ் என்னும் மொழி வட இந்தியரால் உச்சரிக்க முடியாமல் திராவிடம் என்று மருவி வந்தது. அவர் ஆரியமுறைகள் நிரம்பி, ஆரிய மொழி யதிகமாய்ப் பயின்ற நாடான

தொண்டை மண்டலத்தைத் திராவிடமென்று பெயரிட்டழைத்தார். அவரிடமிருந்து இவான்சவங் இப்பெயரைக் கற்று தலோ பிது என்று தொண்டைமண்டலத்துக்குப் பெயரிட்டான். இந்த நாடு செழிப்பாய், செல்வ மிகுந்திருந்ததென்றும், இதில் பலவகைப் பழங்களும் மலர்களும் மணிகளும் அதிகமாய்க் கிடைக்குமென்றும் இச்சீன யாத்திரைக்காரன் எழுதியிருக்கிறான். அன்றியும் திராவிட தேசத்தில் மக்கள் மனத்திடமுள்ளவர்கள். அவர்களிடம் பொய்யும் நம்பிக்கைத் துரோகமும் எள்ளளவும் இல்லை. அவர்கள் பிறர் நலத்தையே நாடுவர், கற்றவர்களைப் போற்றுவர் என்றும், அந்நாட்டில் நூறு பௌத்த மடங்களும், அவைகளில் பதினாயிரம் துறவிகளும், விஷ்ணு, சிவன் முதலிய தேவர்கள் ஆலயங்களும், சமணர்களின் ஒரு வகுப்பான நிர்கிரந்த முனிவர்கள் கோயில்களும் பலவுண்டு என்றும் சொல்லியிருக்கிறான்.

அக்காலத்திலிருந்த மற்றோர் சீனத்தான், காஞ்சிபுரம் இந்தியாவின் தென்புறக் கடற்கரையில் சிம்மளத்தை (இலங்கையை) நோக்கி யிருக்கிறது. அதிலிருந்து கப்பல் மூன்று நாளில் சிம்மளம் போய்ச்சேரும் என்று ஓர் புஸ்தகத்தில் சொல்லி யிருக்கிறான். இதனால் நாம் அறியவேண்டியதென்ன வென்றால் கச்சி நகரம் அப்போது 30 மைலுக்குக் குறையாமல் பரந்து கடற்கரை வரையில் பெருகியிருந்தது. கடற்கரையிலுள்ள துறைமுகத்துக்கு கடல்மல்லை யென்று பெயர். அவ்வூர் பெரிய நகரமாய் நரசிங்கன் காலத்தில் ஆயிற்று. அதற்கு மாமல்லன் என்னும் தன்பட்டப் பெயரை அளித்ததால் மாமல்லபுரம் என்ற பெயர் உண்

டாயிற்று. இந்தப் பெயர் பிற்காலத்தில் மகாபலிபுரம் என்று மருவியது. பல்லவர் ஆட்சி அழிந்த பிற்பாடு மகா பலியின் குலத்தவரென்று சொல்லிக்கொண்டிருந்த பெரும் பாணர் என்னும் சிற்றரசர் இவ்வூரில் ஆண்டு வந்ததால் மாமல்லபுரம் என்பது மகாபலிபுரம் என்றாயிற்று என்று தோன்றுகிறது. இம்மல்லை யென்ற ஊர் இப்போது கொஞ் சம் கடல் கொண்டும், மற்றையது மணல் மேடிட்டும் பாழாய்ப் போயிருக்கிறது. அக்காலத்திலோ இதை "கச்சிக் கிடந்தவனூர்க் கடன்மல்லை" என்றும், "புலன் கொள் நிதிக்குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும் நலங் கொள் நவமணிக்குவையும் சுமந்து எங்கும் நான்று ஒசிந்து கலங்கள் இயங்கும் மல்லைக் கடன் மல்லை" * என்றும் பிர பந்தம் பாடின திருமங்கையாழ்வார் பாடுமாறு பொலிந்திருந் தது. நிதிக்குவைகளும் யானைக் கூட்டங்களும் நவமணிக் குவைகளும் ஏற்றுமதி யானால் நரசிங்கப் போத்தரையன் காலத்தில் புறநாட்டு வணிகம் எவ்வளவு வளர்ந்திருந்த தென்று தெரியவரும். இந்தியாவிலிருந்து சிம்மளத்திற்கும், சீனத்திற்கும் பொருள்களைக் கப்பலேற்றிக் கொண்டுபோய் விற்றார்கள்.

---

* இதன் பொருள்:—

நிதிக்குவை = செல்வக்குவியல், புழைக்கைம்மாகளிறு = துதிக் கையையுடைய யானை, நவமணிக்குவை = ஒன்பது வகையான மணிக் குவியல் = நான்று ஒசிந்து = அசைந்து, கலங்கள் = மரக்கலங்கள், கப்பல்கள்.

இருவகைக் கோயில்கள்.

நரசிங்கப் போத்தரையன் தகப்பனைப்போல் கோயில்கள் நிருமிப்பதில் மிக்க அவாக்கொண்டவன். இவன் முதலில் செய்வித்த கோயில்கள் மகேந்திரன் செய்வித்தவை போன்ற குகைக்கோயில்களே. ஆனால் நரசிங்கனது குகைக் கோயில்களில் சித்திரவேலை அதிகமாயிருக்கும். குகைக் கோயிலின்முன் மண்டபச்சுவர்களில் வெகு அழகிய விக்கிரகங்களும் வரிசையாய் அன்னங்களும், சிறுமணிக் கோவைகளும் ;வெட்டுவித்திருக்கும். அன்றியும் மகேந்திரன் கோயில்களின் தூண்கள் சதுரமாயும் கனமாயும் இருக்க, நரசிங்கன் கோயில்களின் தூண்களின் போதிகைகள் உருண்டு, காடிகள் வெட்டியிருக்கும். போதிகைக்குக் கீழிலும், தூணின் மேல் புறம் உருண்டும், பூச் செதுக்கியும், இலேசாயுமிருக்கும். தூண்களின் அடியில் 2 முழ உயரமும் 2 முழ அகலமுமாய், திறந்தவாயுடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கங்கள் அதைத் தலைமேல் தாங்கிக் கொண்டிருக்கும். இவன் நரசிங்களுகையால் சிங்கத் தூண்களே இவன் செய்வித்த கட்டிடங்களுக்கு அடையாளமாக அமைத்தான்.

இவ்வித சிங்கத் தூண்களுள்ள குகைக் கோயில்கள் மூன்று மகாபலிபுரத்தில் இன்னமும் பார்க்கலாம். அவை கோயில்களென்று தெரியாமல் இக்காலத்தினர் அவைகட்கு மஹிஷாஸுரமண்டபம், வராஹ மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவை மண்டபங்களல்ல; கோயில்களே. ஒவ்வொன்றிலும் மண்டபத்துக்குப் பின்னுள்ள சிற்றறையில் சிவலிங்கம்



நரசிம்மன் தூண்கள் (மகாபலிபுரம்)

முன்பு இருந்தது. மஹிஷாஸுர மண்டபம் என்பதின் சுவரில் உயர்ந்த கிரீடம் பூண்ட சிவ விக்கிரகம் இருக்கிறது. அதன் பக்கத்தில் குழந்தை கார்த்திகேயனை மடியில் வைத்துக்கொண்டிருக்கும் பார்வதி விக்கிரகம் உளது. பின்னால் விஷ்ணு, பிரம்மா விக்கிரகங்களும் முன்னால் நந்தியும் செதுக்கி யிருக்கின்றன. பக்கச் சுவரில் மஹிஷாஸுர வதையைக் காட்டிக் கல்லில் சிற்பம் வெட்டி யிருக்கிறது. பிற்காலத்தவர் இதைக்கண்டே இந்தக் கோயிலை மஹிஷாஸுர மண்டபம் என்றார். இவ்வாறே வராஹ மண்டபச் சுவரில் வராஹாவதாரக் கதையும், வாமனவதாரக் கதையும், திரிமூர்த்தி மண்டபச் சுவரில் திரிமூர்த்தி விக்கிரகமும் உள. எனினும் இவை வெறும் மண்டபங்களல்ல; ஒவ்வொரு மண்டபத்துக்குப் பின் கர்ப்பக் கிருகமும் அதில் சிவலிங்கம் இருந்த சுவடும் காணலாம்.

நாமக்கல் மலையடியில் உள்ள நரஸிம்ஹஸ்வாமி குகைக் கோயில் நரசிங்கப் போத்தரையன் காலத்ததுபோலும். அதனது சுவரிலும் புராணக் கதைகள் சிற்பத்தால் காட்டி யிருக்கும். இவையன்றி தஞ்சைமாநகரில் விண்ணாற்றங் கரையிலுள்ள கோயில்களிலும் திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், கொடுமுடி முதலிய இடங்களிலும் நரசிங்கனது சிங்கத் தூண்கள் உடைந்து போனவை சிதறி இருக்கின்றன. இவன் காலக் குகைக் கோயில்களின் சிதைந்து போன தூண்கள் போலும் இச்சிதறுண்ட தூண்கள். இவையன்றி, கோயிலில்லாமல் பெரும் பாறைகள்மீது புராணக் கதைகளை மட்டும் காட்டும் பெரிய சிற்பங்கள் நரசிங்கன் காலத்தியவை மகாபலி புரத்தில் உண்டு. ஒரு பாறைமேல்

கிருஷ்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கி பிரஜைகளை காப்பாற்றிய கதை முழுவதையும் காட்டியிருக்கிறது. இரண்டாவது பாறைமேல் இருக்கிற சிற்பம் எக்கதையைக் குறித்ததோ என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. சிலர் அர்ஜுனன் தவம்புரிந்த கதையென்றும், வேறு சிலர் பகீரதன் கதை யென்றும், இன்னும் சிலர் தேவர் பூஜை செய்யும் தீர்த்தத்தைக் காட்டுவதென்றும் சொல்கிறார்.

அன்றியும், திருச்சிராப்பள்ளி மலையின் அடியில் தென் மேற்கு மூலையில் ஒரு குகைக் கோயில் உண்டு. அதன் தூண்கள் நரசிங்கன் காலத்துத் தூண்களைப்போலிருந்தா லும், அவையடிப்புறத்தில் சிங்கங்கள் செதுக்கப்படவில்லை. இக் குகைக் கோயிலின் கிழக்குப் பக்கத்தில் சிவன் கோயி லும், மேற்குப் பக்கத்தில் விஷ்ணு கோயிலும் குடைந் திருக்கின்றனர். இரண்டு கோயில்களுக்கு நடுவில் பெரிய மண்டபம் உண்டு. அதனது சுவர்மேல் இந்திரன், சிவன், துர்க்கை, பிரமன், கணபதி இவ்வைவர் விக்கிரகங்கள் மிக்க அழகியவைகளாய்ச் செதுக்கி யிருக்கிறார்கள். கோயி லின்முன் மரவிட்டங்கள்போல் கல்லில் நீண்டு வெட்டி யிருக்கிறது. இது கூரை வீட்டின் தாழ்வாரத்தில் விட் டம் நீட்டிக் கொண்டிருப்பதுபோல் தோன்றும். இக்கல் விட்டங்களின் நுனியில் நகைப்பு உண்டாக்கத் தக்க பெருந் தொந்தியையுடைய குபேரன் முதலிய உருவங்கள் செய் திருக்கின்றனர்.

திருச்சிராப்பள்ளிக்கு வட மேற்கே திருவெள்ளறை யென்ற ஒரு சிற்றூர் உளது. அங்குள்ள மலைமேல் பழைய விஷ்ணு கோயில் உண்டு. அம்மலையடியில் பெரிய குகைக்



திருச்சிராப்பள்ளி கீழ்க் குகைக் கோயில்

கோயில் குடைய ஆரம்பித்து வேலை முடியாமல் விட்டுவிட்டிருக்கிறது. இக்குகை குடையுமுன் இவ்வூர்க்குத் திருவானைக்கா என்று பெயர். பின்பு திருவெள்ளறை யென்ற பெயர் வந்தது. இவ்வூரில் குகைக்கோயில் மற்றொன்றில் சிவாலயம் உண்டு.

புதுக்கோட்டைக்கருகிலுள்ள குடுமியா மலையில் மகேந்திரனது சங்கீதக் கல்வெட்டிற்குப் பக்கத்தில் மற்றோர் குகைக் கோயில் இருக்கிறது. இதனது தூண்களும் திருச்சிராப்பள்ளி கீழ்க்குகைத் தூண்கள் போல் வேலை செய்தவை. இக்கோயில் சுவரில் பரிவாதினி என்ற பெயர் வெட்டியிருக்கிறது. பரிவாதினி யென்பது எவளோ தெரியாது. அன்றியும் புதுக்கோட்டைக்கு இன்னொரு பக்கத்திலுள்ள திருமயத்தில் மகேந்திரன் செய்வித்த சிவன் கோவில் பக்கத்தில் வைஷ்ணவ குகைக்கோயில் உண்டு. அதுவும் இக்காலத்தியதுதான். ஆனால் நரசிங்கன் செய்வித்த கோயில்களில் இருப்பதுபோல் வேலை அழகாயிராது.

நரசிங்கன் குடைவித்த குகைக்கோயில்கள் ஒருவகை. இதுவன்றி அவன் இன்னொருவிதக் கோயில்கள் செய்வித்தான்; அதாவது, ஒரு குன்றைச் செதுக்கி கோயிலுருவம் வருமாறு செய்வித்தது. இவைகளை ஒருக்கல் கோயில் என்போம். இவ்வகை ஒருக்கல் கோயில்கள் மகாபலிபுரத்தில் இருக்கின்றன. இக்காலத்தில் இவைகளை கோயில் என்று தெரியாமல் தேர்களைப்போல் தோன்றுவதால் இரதங்கள் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவை ஐந்து கோயில்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஆகையால்

இவைகளை பஞ்சபாண்டவ ரதங்கள் என்று நினைத்து, தர்ம ராஜ ரதம், பீமசேன ரதம், அர்ஜ்ஜுன ரதம், திரௌபதி ரதம், நகுல சகாதேவ ரதம் என்று இவைகளுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். இவை கல்லாலான தேர்கள் அல்லவே அல்ல.

கோயில்களைத் தேர்கள் என்று தப்பாய் நினைப்பதற்குக் காரணமென்ன? பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டில் வீடுகளும், மாடமாளிகைகளும், அரண்மனைகளும், ஆலயங்களும், மரத்தாலே கட்டினார்கள். ஏன்? காடுகள் அடர்த்தியாய் வளர்ந்து, அவைகளில் இருள், ஆச்சா, தேக்கு முதலிய பலமுள்ள மரங்கள் சுலபமாய் கிடைத்ததால்தான். அவ்வாறு கட்டிய மரக்கட்டிடங்களைக் கொத்து வேலையைக் கொண்டு பலவித விக்கிரகங்கள், கோலங்கள் முதலிய சித்திர வேலைகளைச் செய்து அழகுறச் செய்தார்கள். சிற்றுளி வேலைக்காரர் மிகுந்து, கோயில்களின் தூண்களிலென்ன, சுவர்களிலென்ன, வாயிற்படிகளிலென்ன, விமானத்தின் மேலென்ன, எங்கே சரிப்பட்டாலும் அங்கே, அற்புதமான அழகுள்ள திருப்பணிகள் செய்தார்கள். இது இப்படி யிருக்க, தேர்கள், மக்கள் பிடித்து இழுத்துக்கொண்டு ஊர்வலம் வரும் நகருங்கோயில்களாகையால், தேர்களையும் கோயில் விமானங்களைப் போன்றிருக்குமாறு செய்தார்கள். நரசிங்கன் பெருங்கல்லைச் செதுக்கிக் கோயிலுருவமாய்ச் செய்வித்தபோது, அதை விமான உருவமாய்ச் செய்தான். நடுவில் சிற்றறையில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தான். காலக்கிரமத்தில் சிவலிங்கம் அச்சிற்றறைகளி லிருந்து நஷ்டமாக, ஜனங்கள்

பஞ்சபாண்டவ ரதங்கள்

இவைகளை ஒருக்கல்கோயில் என்று மறந்து இரதங்கள் என்று நினைக்க இடமுண்டாயிற்று.

இதில் மற்றொரு விஷயம் கவனிக்கத் தக்கது. வெகு காலம் மரத்தால் கோயில் கட்டி, பின்பு கல்லால் கட்டின போது, மரத்தில் செய்த வேலை யெல்லாம் கல்லிலும் செய்தார்கள். மரத்தில் எளிதாய்ச் செய்யக் கூடிய வேலை கல் ல் செய்வது கஷ்டம். ஆயினும் வேலைத்திறத்தைக் காட்ட மரவேலைகளை யெல்லாம் கல்லில் செதுக்கினார்கள். திருச்சிராப்பள்ளியில் மகேந்திரன் குகைக் கோயிலில் மரத்தால் சுலபமாய்க் கட்டும் வேலியைப் போல் கல்லில் செதுக்கிக் காட்டியிருக்கிறார்கள். நாமக்கல் கோயிலில், வளைந்த மூங்கில்களை வைத்துப் போட்ட தாழ்வாரம்போல் மலையில் குடைந்தெடுத்திருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளி கீழ்க்குகையில் மரவிட்டம்போல் கல் நீட்டிக் கொண்டிருக்கும். இவ்வாறு மரத்தில் செய்ய வேண்டிய வேலையைப்போல் கல்லில் செய்திருக்கும்.

மகாபலி புரத்திலுள்ள இவ்வைந்து ஒருக்கல் கோயில்களில் மிகப் பெரியது தர்மராஜரதம். மூன்று அடுக்காய்ச் செய்து, சித்திர வேலைகள் நிரம்பியிருக்கும். இரண்டாவது அடுக்கின் நடுவில் கர்ப்பக்கிருகம் வெட்டி யிருக்கிறது. அது மாடப்புரையைப்போல் சிறியது. அதனடியில் ஸே [illegible] ரகம் செதுக்கியிருக்கிறது. பீமசேன ரதத்துக்கு முன்னும் பின்னும் மண்டபங்கள் செய்திருக்கிறது. அர்ஜுன ரதத்துக்கும் திரௌபதி ரதத்துக்கும் கலந்து ஒரு முன் மண்டபமும், யானை விக்கிரகமும் சிங்க விக்

கிரகமும் மாறி மாறியுள்ளது. திரௌபதி ரதம் என்பது துர்க்கைக் கோயில். துர்க்கைக்குக்கீழ் வேளைக்கார விக்கிரகம் ஒன்று உண்டு. வேளைக்காரனென்றால் அரசனுக்கு உண்மையாய்ப் பணி செய்யும் அடியான்; வேளைக்காரர் எப்போதாவது அரசர்க்கு உதவாமற்போனால் துயர்வுற்று தங்கள் கழுத்தைக் காளி கோயிலில் அறுத்துக்கொண்டு காளிக்குத் தாங்கள் பலியாவர். இந்தத் திரௌபதி ரதம் கூரைவீட்டைப்போல் கல்லில் வெட்டியது. நகுல சகாதேவ ரதம் வேலை ஆரம்பித்து முடிக்காமல் விட்டு விடப்பட்டது.

நரசிங்கன் கோயில்கள் மாத்திரம் அல்லாமல், கோட்டைகளும் கட்டினான். காஞ்சீபுரத்தில் அவனது கோட்டை இருந்தவிடம் தெரியாமல் பட்டணம் அபிவிருத்தியாய்விட்டது. திருச்சிராப்பள்ளிக்கடுத்த லால்குடிக்குச் சமீபத்திலுள்ள பெருவள நல்லூர் கிராமத்தைச்சேர்ந்து பல்லவரம் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. அந்தப் பல்லவரம் பல்லவபுரமென்பது மருவிவந்தது. இவ்வூரில் நரசிங்கப் போத்தரையன் காலத்தில் கோட்டையொன்று பாறைமேல் கட்டியது இருந்தது. இக்கோட்டை இப்போது முழுவதும் அழிந்து விட்டது; ஆனால் அதன் அஸ்திபாரம் மாத்திரம் பார்க்கலாம். அதில் பல்லவர்காலத்துப் பெருஞ்செங்கல் கிடைக்கும். இப்பல்லவரம் பல்லவரது சோழநாட்டுத் தலைநகர்போலும். இவ்வூருக்கருகில் பல்லவருக்கும் சளுக்கருக்கும் அடுத்தஅரசன் காலத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. அதைப்பற்றி அந்த அரசன் சரித்திரத்தில் சொல்வோம். பல்லவரம் பாறைமேல் தேய்ந்துபோன கல்வெட்டு ஒன்றுண்டு. அது இந்த யுத்தத்தைப்பற்றியதோ,

பல்லவ அரசரைப் பற்றியதோ என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

சமயநிலை: வைஷ்ணவம்.

நரசிங்கப்போத்தரையன் காலத்தில் தொண்டைமண்டலத்தில் வைஷ்ணவமுறை கொஞ்சம் பரவியது. அப்போதிருந்த ஆழ்வார் பக்திசாரர் என்கிற திருமழிசையாழ்வார். திருமழிசையென்கிற மஹீஸார க்ஷேத்திரத்தில் பிறந்தவர். பல சமயங்களையும் ஆராயக் கருதி, லோகாயதம், பௌத்தம், சமணம் முதலியவைகளில் ஒன்றொன்றாய்ப் புகுந்து, அவ்வந்நூல்களைப் பயின்று, பின்பு அச் சமயங்களில் பற்று குறைந்து சைவர் ஆனார்; அப்போது சிவவாக்கியர் என்று பெயர் பெற்றார். சிலகாலம் சிவபக்தராயிருக்க, பேயாழ்வார் இவரை வைஷ்ணவராக்கினார். திருமழிசையாழ்வார் சிஷ்யன் கணிகண்ணனென்பான். ஒருநாள் ஒரு பல்லவன் கணிகண்ணனைப் பார்த்து, "உமது பரமகுருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்துவரவேண்டும்" என்றான். அதற்குக் கணிகண்ணன், "நம் ஆசாரியார் ஒருவரிடத்தும் எழுந்தருளார்" என்று கூறிவிட்டான்.

பல்லவன், "என்னை அங்கு அழைத்துப் போயாயினும் அவரது கருணைக்கு இலக்காக்குவித்து அவரருளால் நான் எப்போதும் இளமைப் பருவத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும்" என்று வேண்டினான். அதற்கும் அவன் உடன்படாமல், "உன்னைப்போல இம்மைப் பயனையே யெதிர் நோக்கி நிற்பாரை ஆழ்வார் கண்ணெடுத்துப் பார்த்தலும் அரிது" என்று மறுத்துவிட்டான். பின்பு பல்லவன் வருந்

திய சிந்தையனாய் கணிகண்ணனைப் பார்த்து, "எனக்கு அழியாத யௌவனம் உண்டாகுமாறு நீயாவது ஒரு கவி பாடவேண்டும்" என்று வேண்டினான். அதற்குக் கணிகண்ணன், "நாராயணனைப் பாடுவேனே ஒழிய நரனைப்பாட மாட்டேன்" என்றான். பல்லவனுக்குக் கோபம் வந்து, "என் நகரத்தினின்று உடனே வெளியே போ"வென்று, உத்திரவிட்டான். இதைக் கணிகண்ணன் ஆழ்வாரிடஞ் சொல்ல, அவர் "நானும் பெருமானை எழுந்தருளிக் கொண்டு உன்னுடன் வருவேன்," என்று,

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா— துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்,

என்றுபாடி, புறப்பட்டார். கடவுளது விக்கிரகம் போய் விட்டதால் ஊரினது பொலிவும் குறைந்தது. அப்போது பல்லவன் ஆழ்வாரைத் திரும்பி வரப்பிரார்த்தித்தான். ஆழ்வார் மறுபடியும்,

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்— துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்ப்படுத்துக்கொள்,

என்று பாடித்திரும்பிக் கச்சி வந்தடைந்தார்.

திருமழிசைப்பிரான் பாடியது நான்முகன்திருவந்தாதியும், திருச்சந்த விருத்தமும் ஆகும். அந்தாதியில் மறு சமயங்களைப் பின்வருமாறு இகழ்ந்து பாடியுள்ளார்.

அறியார் சமணர், அயர்த்தார் பௌத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில் — வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலாலின்று.

நாராயணன் என்னையாளி நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால்தன்—பேரான
பேசப்பெறாத பிணச்சமயர் பேசக்கேட்டு
ஆசைப்பட்டாழ்வார் பலர்.

திருச்சந்த விருத்தத்தில் கடவுளைப்பற்றி,

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

உலகுதன்னை நீபடைத்தி உள்ளொடுக்கி வைத்துமீண்டு
உலகுதன்னுளே பிறத்தி ஓரிடத்தை யல்லையால்
உலகுநின்னொ டொன்றிநிற்க வேறுநிற்றி யாதலால்
உலகுநின்னை யுள்ளசூழல் யாவருள்ள வல்லரே.

அயர்த்தார்=சோர்ந்தார், செப்பில்=கூறுமிடத்தில், ஈனவர்=தாழ்ந்தவர், ஆளி=ஆள்பவன், பிணச்சமயர்=பிணத்தையொத்த சமயத்தவர்.

அரங்கம்=அலை, நீர்மை=தன்மை, உள் ஒடுக்கி=உள்ளே அடக்கி, ஒன்றி=பொருந்தி, நிற்றி=நிற்கின்றாய், சூழல்=சூழ்ச்சி.

சக்கரக்கையனைக் காண்பதைப்பற்றி,

புன்புல் வழியடைத்து அரக்கு இலச்சினைசெய்து
நன்புல வழிதிறந்து ஞானநற்சுடர் கொளீஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந்து எழுந்ததோர்
அன்பிலன்றி ஆழியானை யாவர்காண வல்லரே.

வேங்கடத்தையும் குடந்தையையும் கலந்து பாடினதும் மிக அழகாயிருக்கும்.

செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந் தெழுந்துவிண் புடைக்கும்வேங் கடத்துள்நின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடங் குடந்தையுள் கிடந்தமாலு மல்லையே.

சமயநிலை : சைவம்.

நரசிங்கப் போத்தரையன் காலத்தில் சோணாட்டில் சைவம் மிகப்பரவிற்று. வாதாவி நகரைக் கைப்பற்றி அழித்த பரஞ்சோதி என்னும் படைத்தலைவர், வைராக்கி

புன்புலவழி=புன்மையைத்தரும் பஞ்சேந்திரியங்களின் வழி, புன்மை=இழிவு, பஞ்சேந்திரியங்கள்=மெய், வாய், கண், மூக்கு, செவி, இலச்சினை=முத்திரை, கொளீஇ=கொளுத்தி, எள்கி= இழித்து, ஆழியான்=சக்கரமுடையவன்.

வேய்=மூங்கில், விண்புடைக்கும்=மேகத்தைத் தீண்டும், வேங்கடம்=திருப்பதி, பொழில்=சோலை, தடம்=விசாலமான குடந்தை=கும்பகோணம்.

யம் பிறந்து அரசன்கீழ்த்தொண்டு செய்யும் வேலையைவிட்டு சிவனுக்கு ஈடுபட்டு, தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் திருச்செங்காட்டான் குடியில் பரமசிவனுக்குப் பணி செய்யத் தொடங்கினார். சிவனடியாரானபின் இவரை, சிறுத்தொண்டர் என்பர். அவ்வூரில் கணபதீச்சுரம் என்ற கோயிலைக் கட்டுவித்து அதில் நாடோறும் கடவுளைத் தொழுது வந்தார். ஒருநாள் இவர் பக்தியைச் சோதிப்பதற்குச் சிவபெருமான் பைரவ வேஷம் பூண்டு இவர் வீட்டுக்குப் போனதும், அப்போது பக்தி மிகுந்து தன் மகன் சீராளதேவனைக் கறியாக்கி அரனுக்குப் படைத்ததும், உமாமகேசன் உள்ளம் உவந்து, பிள்ளையைப் பிழைக்கச் செய்து சிறுத்தொண்டனார்க்கும், அவர் மனைவிக்கும், மகனுக்கும் வீடளித்ததுமான காதை பெரிய புராணச் செய்யுளில் சொல்லியிருப்பது சைவர் எல்லோர்க்கும் தெரியும்.

மற்றோர் சிவனடியார், அறுபத்துமூவரினும் மிகப்பெயர் பெற்றவரான திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் என்னும் பெரியார் இக்காலத்திலே யிருந்தார். இவர் பிரமபுரமென்றும், திருசிரபுரமென்றும் மாறு பெயர்களுள்ள சீர்காழியில் பிறந்து, மூன்று வயதில் அரனருள் அடைந்து, பாசுரங்களை பாடத்தொடங்கினார். சோழநாட்டில் ~~அலைந்து~~ சிவஸ்தலங்கள் பலவற்றில் சிவனைத்தொழுது இனிய தேவாரங்களைப் பாடினார். அப்போது சோழநாடு பல்லவர் கீழிருந்தது. ஆதலால் சம்பந்தர் சரித்திரத்தில் சோழ அரசரெவரையும் அவர் பார்த்ததாகக் கதை ஒன்றுமில்லை. பாண்டிய அரசனிடத்துக்குப் போனதாகவும், அவன் முன்னிலையில் நின்று சமணருடன் வாது செய்து வென்றதாயும் பெரியபுராணம்

சொல்லும். இப்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனென் பார்கள். இப்பாண்டியன் மனைவியின் பெயர் மங்கையர்க் கரசியார். இம்மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை யாரென்ற மந்திரியுந்தான் திருஞான சம்பந்தரை ஆதரித்தார்கள். இவரிருவரும் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள். பாண்டியனோ சமண முனிவர்களை வழிபட்டவன்; அதனால் அவன் முன்னிலையில் சமணர் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். பாண்டியனைச் சிவனடியாராக்க நினைத்து அவன் மனைவியும் அமைச்சனும் ஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்தார்கள். அவர் அப்போது இளம்பிராயத்தினர். இவர் மதுரை சேர்ந்து, சமணருடன் வாது செய்யப் புறப்பட்ட போது மங்கையர்க்கரசி "சமணர்கள் வயதில் முதிர்ந்து, மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றனரே. இக்குழந்தையை என் செய்வாரோ" என்று சிறிது ஏங்கினள். இதையறிந்த திருஞான சம்பந்த சுவாமி அவளைத்தேற்ற, சமணர்களின் இழிவையும் தமக்குள்ள தெய்வத்துணையையும் பல பாசுரங்களில் பாடினர். அவையொன்றில்,

மானினேர்விழி மாதராய் வழுதிக்குமா பெருந்தேவி கேள்
பானல் வாயொரு பாலனீங்கிவனென்று நீ பரிவெய்திடே
லானை மாமலை யாதியாய விடங்களில் பலவல்லல் சே
ரீனர்கட்கெளியேன லேன்றிருவாலவாயரனிற்கவே,

என்றார்.

மானின் நேர்விழி = மானின்கண்ணைப் போன்ற கண், வழுதிக்கு = பாண்டியனுக்கு, மாபெருந்தேவி—பட்ட மகிஷி, பரிவெய்திடேல் = வருந்தாதே, ஆனை மாமலை = மதுரைக்கடுத்த மலை, ஈனர்கள் = தாழ்ந்தவர்கள், எளியேன் = தாழ்ந்தவன்.

மற்றொன்றில்,

சந்து சேனனுமிந்து சேனனுந்தரும சேனனுங்கருமைசேர்
கந்து சேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
மந்தி போற்றிரிந்தாரியத்தோடு செந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேன லேன்றிரு வாலவாயரனிற்கவே.

என்றார். மறுபடியும்,

கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோரொலியின் [றொழிந்
பாட்டுமெய் சொலிப்பக்கமே செலுமெக்கர் தங்களைப் [பல்லறங்
காட்டியே வருமாடெலாங்கவர் கையரைக் கசிவொன்றிலாச்
சேட்டைகட் கெளியேனலேன் திருவாலவாயரனிற்கவே.

இன்னும் ஒரு பாட்டில்,

கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியுங் குமணமா
சுனகநந்தியுங் குணகநந்தியுந் திவணநந்தியு மொழிகொளா
வனகநந்தியர் மதுவொழிந்தவமே தவம்புரிவோ மெனுஞ்
சினகருக் கெளியேன லேன்றிருவாலவாயரனிற்கவே.

முதலிரண்டு வரியில் வந்துள்ளவைகள் சமணர்களின் பெயர்களாம். மந்தி = குரங்கு, ஆரியத்தோடு செந்தமிழ்ப்பயன் = வடமொழி தமிழ்மொழியில் உள்ள நூல்களின் பயன்.

கிளியின் விருத்தம் = ஒரு நூல் (கரிவிருத்தம் போன்றதுபோலும்), மாடெலாம் = பக்கங்களெல்லாம், கையர் = வஞ்சகர், சேட்டைகள் = தீயகாரியங்கள்

நந்தி என்பது சமணர்களுக்குள்ள ஓர் பட்டப்பெயர்
அவமே = வீணே, சினகர் = சமணர்

இவ்வாறு பல பாசுரங்களைப்பாடி மங்கையர்க்கரசி மனதைத்தேற்றி, சமணர்களுடன் வாதஞ் செய்யத் தொடங்கினார். இவ்வாதம் மூன்று வகையாய் நிகழ்ந்தது. முதலில் பாண்டியனுக்கு நேர்ந்த சுரத்தைப் போக்குவதற்கு இருதிறத்தாரும் முயன்றார்; பின்பு அவரவர் ஓலையை நெருப்பிலிட்டும், நீரில் போட்டும் பார்த்தார். இம்மூன்று முறையிலும் சம்பந்தரே வெற்றி பெற்றார். அதனால் பாண்டியன் சிவனடியானாயினன். அரசனும் குடிகளும் சைவராயினர்.

இம்மன்னனுக்குப் பல பட்டப் பெயர்கள் உண்டு. அவை அரிகேசரி, அசமசமன், மாறவர்மன், அலங்கிய விக்கிரமன், அகாலகாலன். இவன் தகப்பன் சடையன் (ஜடிலவர்மா) செழியன், வானவன், செங்கோல் சேந்தன் (ஜயந்தன்) என்ற பட்டங்களுள்ளவன். ஜயந்தன் தகப்பன் மாறவர்மன் அவனி சூடாமணி, பாண்டிய குலத்தை நிலைநிறுத்தின கடுங்கோன் பாண்டியாதி ராஜனது மகன். மங்கையர்க்கரசியார் புருஷனை அரிகேசரி மாறவர்மன் பட்டாபிஷேகம் பெற்றபோது ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் முதலிய வைதிக கர்மங்களைச் செய்து அந்தணர்களுக்குப் பொற்குவியல்களைத் தானஞ் செய்தான். நெல்வேலி யென்னும் ஊரில் வில்வேலி என்பவன் கடல் தானையையும், பாழி, செந்நிலம் என்னும் ஊர்களில் நிகழ்ந்த போர்களிலும் வென்று, கேரள மன்னனையும் தோற்கடித்து உறையூரையும் கைப்பற்றினான்.

திருஞான சம்பந்தர் சிஷ்யனான பின்பு,
"அந்நாளிலாளுடைய பிள்ளையாரருளாலே
தென்னாடு சிவம் பெருகச் செங்கோலுய்த்து"

ஆண்டாரென்று பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்ட தொகையில் இவனை,

"இறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி
வென்ற நின்ற சீர் நெடுமாற னடியார்."

என்று பாடினார்.

பின்பு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையில் தங்கியும், பாண்டி நாட்டிலுள்ள சில திருப்பதிகளைத் தரிசித்துப் பாசுரங்கள் பாடியும், சில காலங் கழித்தனர். பின்பு திரும்பிச் சோணாட்டுத் தலங்களுக்குச் சென்றனர். திருச்சிராப்பள்ளி போய், அவ்வூர் மலைமேல் உள்ள தாயுமான சுவாமியைப்பற்றி அழகிய பாட்டுகள் பாடினார். அதிலொன்று,

நன்றுடையானை தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

இப்பாட்டிலுள்ள 'நன்றுடையான்' 'தீயதில்லான்' என்னும் பெயர்களுள்ள குளங்களுண்டு. நன்றுடையான் குளம் மேல் விசாரணையில்லாமல் கெட்டுப் போயிருக்கிறது. தீயதில்லான் குளத்தை பிற்காலத்தினர் தூர்த்து அதன்மேல் வீடுகள் கட்டியுள்ளார். மற்றோர் பாட்டில்,

---

* நறைவெள்ளேறு = வெண்மையான ரிஷபம்
உமை = பார்வதி

கைம்மக வேந்திக்கடுவ னோடிக்கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முக வேழத்தீருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம்மதியுடன் வைத்தல் பழியன்றே.

திருவையாற்றைப் பாடின பாசுரங்களில் ஒன்றைப் பார்ப்போம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந் திட்டைமேலுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

சிறுத்தொண்டர் வாழ்ந்த ஊரான திருச்செங்காட்டான் குடியிலுள்ள கணபதீச்சுரத்தைப் பாடினது.

மகவு= குட்டி, கடுவன் = ஆண்குரங்கு, மந்தி= பெண்குரங்கு, கருவரை= கரியமலை, வேழம்= யானை, விகிர்தன்= மேலானவன், நாகம்= பாம்பு, மதி= சந்திரன்.

புலன் = பொறிகளால் உணரப்படுவன,
பொறி= மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐ—கபம்
அலமந்தபோது= கலங்கியபோது,
மடவார்= பெண்கள், முழவு= மத்தளம்,
அலமந்து= கலங்கி. முகில்= மேகம்,

செடி நுகரும் சமணர்களுஞ் சீவரச் சாக்கியரும்
படி நுகராதய ருழப்பர்க் கருளாத பண்பினன்
பொடி நுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சுரத்தானே. [டாகக்

தாம் பிறந்த ஊரான சீர்காழியை வர்ணிக்கும் பாசுரங்களில் சில அழகிய வரிகளை வரைவாம்:—

"நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாத நறும்பாளை
சலமார் கரியின் மருப்புக்காட்டுஞ் சண்பைநகரே."
"எண்ணார் முத்தமீன்று மரகதம் போற்காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம் பழுத்திடுங் கலிக்காழி."

புகாரென்னும் காவிரிப்பூம்பட்டினத்தருகில் பல்லவனீச்சுரமென்று ஒரு திருப்பதி உண்டு. எந்தப் பல்லவன் கட்டினனோ தெரியாது. அவ்வூர் பாசுரத்தில் ஒன்றுவது:—

அடையாதார் தம்புரங்கள் மூன்றுமாரழலில் லழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும் வித்தகர்மேயவிடம்

செடி = துன்பம், சாக்கியர் = பௌத்தர்,
சிறுத்தொண்டர் = சிறந்ததொண்டர்,
கடிநகராய் = காவலுடைய நகரமாய்,
கணபதீச்சுரம் = திருச்செங்காட்டங்குடியிலுள்ள ஆலயத்தின்பெயர்.

நாளிகேரம் = தெங்கு,
சலமார் கரி = கோபம் அமைந்த யானை,
சண்பை = சீர்காழி,
கமுகு = பாக்குமரம்,
காழி = சீர்காழி.

கடையார் மாடநீடி யெங்கும் கங்குல்புறந்தடவப்
படையார் புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சுரமே.

வேதாரண்யத்தில் அப்பர் திருக்கதவைத் திறக்கும் படி அருமையான பாசுரங்களைப் பாடினர். அவைகளில் ஒன்றுவது:—

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணினா லுமைக்காண கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே.

திருஞானசம்பந்தர் அக் கதவினை யடைக்கும்படி பல அரிய பாசுரங்களைப் பாடினர். அவைகளில் ஒன்றுவது:—

சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கு
மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டுறைமைந்தா
விதுநன் கிறை வைத்தருள் செய்த வெனக்குன்
கதவுந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

ஆரழலில்=மிகுந்தநெருப்பில்,
விடையார் மேனியராய்=இடபத்திலேறியவராய்,
வித்தகர்=சிறப்புடையவர்,
மாடம்=மாளிகை,
கங்குல்=இருள்,
புரிசை=மதில்.

பண்ணினேர்மொழியாள்=யாழின் இசையையொத்த சொற்களை யுடையவள், திண்ணமாக=திட்டமாக,
சதுரம்மறை=நான்குமறைகள்,
திருக்காப்பு இடுதல்=கதவைச்சாத்துதல்.

திருஞானசம்பந்தர் தென்னாட்டிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வடக்கே தொண்டைநாட்டுத் தலங்களை வணங்கச் சென்றனர். அவ்வாறு போகும்போது மயிலாப்பூரைச் சென்றடைந்தார். அங்கே சிவநேசச் செட்டியாரென்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கிருந்த ஒரு புதல்வி பாம்பினால் தீண்டப்பட்டு இறந்துவிட்டாள். அவள் எலும்பை ஒரு குடத்தில் அந்தச் செட்டியார் எடுத்துவைத்திருந்து திருஞானசம்பந்தர் முன் கொண்டுவந்து வைத்தார். உடனே அவர் திருமைலாப்பூரிலுள்ள கபாலீசர் சந்நிதியில் அந்த எலும்பு நிறைந்த குடத்தைக் கொண்டுவரச் செய்து கடவுளைப்போற்றி அரிய பாசுரங்களைப் பாடினர். எலும்பும் பெண்ணுருவம் பெற்றது. கண்டார் அனைவரும் கசிந்து உருகி காழியில் அவதரித்த ஞானசம்பந்தரைப் போற்றினர்.

அங்ஙன மெழுந்துநின்ற வணங்கினை நோக்குவார்கள்
ஈங்கிது காணீரென்ன வற்புத மெய்தும்வேலைப்
பாங்குசூழ் தொண்டரானோ ராகரவென் னப்பார்மேல்
ஓங்கிய வோசையும்பர் நாட்டினை யுற்றதன்றே.

இப்படித் திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் இருக்கும்பொழுது வைஷ்ணவப் பெரியாராகிய திருமங்கை மன்னனைச் சந்தித்தாரென்று கூறுவார்கள். சந்தித்தகாலத்தில் பாடிய பாட்டுகளாகச் சில பாட்டுகளைக் கூறுவார்கள். அவைகள் எம்மட்டும் உண்மையோ தெரியவில்லை. ஆராய்ந்து அறியவேண்டும்.

பரமேச்சுரப்போத்தரையன்.

(கி. பி. 650-690.)

சளுக்கருடன் போர்.

நரசிங்கப்போத்தரையன் மகனான மகேந்திரன் நீண்ட காலம் ஆண்டதாகவாவது, யாதேனும் உயர்ந்த வேலை செய்ததாகவாவது காணோம். இம்மகேந்திரன்மகன் பரமேச்வரன். மகேந்திரன் அரசனாயும் பரமேச்வரன் இளவரசனாயிருந்தபோது இவர்க்கு ஒரு விரோதி தோன்றினான். இவன் புளகேசிமகன் விக்கிரமாதித்தியன். தந்தை நரசிங்கனுடன் போர்செய்து இறந்ததுமுதல் சளுக்கவம்சத்தை மறுபடி நிலை நிறுத்த வேண்டுமென்று முயன்றுகொண்டே யிருந்தான். புளகேசி யிறந்து 10-வருஷமாவதற்கு முன்னரே சளுக்க இராஜ்ஜியத்தை பிரபலமுறச் செய்தான். சளுக்க வம்சத்தினது முதல் விக்கிரமாதித்தியனை • இவன் அளித்த பல சாசனங்களில் ஹைதராபாத், அதற்கடுத்த கத்வால், இவ்வூர்களில் அகப்பட்டவைகளைக் கொண்டு இவன் சரித்திரத்தை அறியலாம். ✶ தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவுடன் ஸ்ரீவல்லவனான விக்கிரமாதித்தியன் நரசிங்கனது புகழைக் கெடுத்து, மகேந்திரனது' பெருமையைக் குறைத்து, அவன் மகன் ஈச்வரனை ஒடுக்கினதாக அச்சாசனங்களில் சொல்லியிருக்கிறது; என்றால் நரசிங்கன் அழித்த வாதாவியைப் பிடித்துக்கொண்டு, சளுக்கர் மகிமையை மறுபடிப் பெருக்கினதால் நரசிங்கன் புகழைக் கெடுத்தானென்று அறிய வேண்டும். பின்பு

மகேந்திரனைப் போரில் தோற்கடித்து அவன் பெருமையைக் குறைத்தான் போலும். பின்பு காஞ்சிபுரத்தைப் பிடித்துக் கொண்டு பரமேச்வரனைத் தனக்குக் கீழ் சிற்றரசனாய் வைத்தான். மேலும் சாசனங்களில் "தென்னாடென்னும் மங்கையின் ஒட்டியாணமான காஞ்சியைப் பிடித்து, அவளை வசப்படுத்தி, மணம் புரிந்து ஸ்ரீ தேவியின் அன்பைப் பெற்றான்" என்றும், ஈச்வரப் போத்தராஜாவை வென்று, உடைக்க முடியாதுயர்ந்த மதில்களும், தாண்ட முடியாத அகழ்களும் சூழும் காஞ்சி யென்னும் தென்னாட்டினது ஒட்டியாணத்தைப்பற்றிக் கொண்டான்" என்றும் சொல்லியிருக்கிறது. அன்றியும், 'இரணரஸிகன்', என்றால் போர் செய்வதில்பற்றுடையவன் என்றும், 'இராஜமல்லன்', என்றால் மகாமல்லன் குலத்தை யழித்தவன் என்றும், பட்டங்களைத் தரித்தான். விக்கிரமாதித்தியன் காஞ்சிபுரத்தைப் பிடித்ததைப்பற்றி அவன் மகன் விநயாத்தித்தியன் கொடுத்த சாசனம் (ஸோரப் என்னும் ஊரில் அகப்பட்டது) ஒன்றில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது. "விக்கிரமாதித்தியனது பாதபத்மங்கள், வேறொருவரையும் வணங்காத காஞ்சி மன்னனது அணிகள் நிறைந்த முடியின் கிரணம் என்னும் நீரைத் தெளிக்கப் பெற்றன."

பின்பு விக்கிரமாதித்தியன் சோழ தேசத்தின் மேல் படையெடுத்துச் சென்றான். இதைப்பற்றி மேலே சொல்லிய கத்வால் சாசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளது. "பல்லவ குலத்தின் பெருமையை யழித்து, பரமேசுவரனை ஆளாக்கி, சோளிக விஷய (சோழ தேச)த்தையும் கைக்கொண்டு, காவிரித் தென்கரையிலுள்ள உரகபுரம் (அதா

வது உறையூர்) சேர்ந்து அங்கே சில நாள் தங்கினான்." இந்த சோழராது பண்டைய காலத்துத் தலை நகரத்தில், தங்கியிருக்கும்போது கத்வால்சாசனத்தில் சொல்வி யிருக்கும் தானத்தைச் செய்தான். இது விக்கிரமாதித்தியன் பட்டாபிஷேகம் பெற்று 20 ஆண்டுகளான பின்பு, அதாவது சகாப்தம் 596-ம் (கி. பி. 674) வருஷத்தில் நிகழ்ந்தது. உறையூரினின்று புறப்பட்டு, பாண்டி நாட்டிலும் வெற்றிக்கொடியை நாட்டுவதற்காக மதுரை நோக்கிப்புறப்பட்டான். அப்போது மதுரையாண்ட பாண்டியன் நெடுமாறன் மகனான ஜடிலவர்மனென்கிற கோச்சடையன் ஆவன். இந்தக் கோச்சடையன் மதுரையிலிருந்து புறப்பட்டு திருச்சிராப்பள்ளிக்கு அருகாமையிலிருக்கும் மருதூரில் மகாரதன் விக்கிரமாதித்தியனது கடல்போன்ற சேனையைத் தேக்கி, மங்கலபுரத்தில் அவனைத் தோல்வியடித்தான். இரணரஸிகனை. வென்றதால் இரணதீரனென்னும் பட்டத்தைப் பாண்டியன் பெற்றான். இந்த விஷயத்தை வேள்விக்குடியில் அகப்பட்ட பாண்டிய சாசனம் ஒன்றிலிருந்து அறியலாம்.

விக்கிரமாதித்தியன் தோல்வியுற்றுத் திரும்ப, இதுதான் சமயமென்று, பரமேச்வரன் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள பல்லவரத்தில் தன் கோட்டையில் பெரும்படையைச் சேர்த்து அவனை யெதிர்த்தான். அடுத்த கிராமமான பெருவள நல்லூரில் மகா யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தைப் பின்னால் சொல்லப்போகிற கூரம் சாசனத்தில் வடமொழிக் கத்திய காவியமான காதம்பரி நடையை யொத்த உயர்ந்த நடையில் வர்ணித்திருக்கிறது. அதிலிருந்து சில மொழிகளை யெடுத்துக் கூறுவாம். "வீர

ரும் குதிரைகளும் யானைகளும் கணக்கற்றவை நடந்து போனதால் கிளம்பின தூளி சூரியனை மறைக்க, அவனொளி சந்திரனது கோட்டைபோல் மங்கிற்று. முரசொலி இடியைப்போல் அச்சம் உண்டாக்கிற்று. உறையி லிருந்து உருவின வாள்கள் மின்னல்போல் கண் களைப்பறித்தன. யானைகள் மேகம்போல் அசைந்தன; அகாலத்தில் மழை வந்ததுபோல் தோன்றிற்று. உயர மான குதிரைகள் ஓடும்போது கடலின் அலைகள் போல் தோன்றின; அவை நடுவில் யானைகள் வந்து கடலைக் கலக் கினதுபோல் ஆயிற்று. கடலில் கோரமானஜந்துக்கள் வரும் போது உண்டாகும் சுழலைப்போல் இருந்தது. சமுத்திரத் தினின்று சங்குகள் புறப்பட்டாற்போல் வீரர்கள் சங்கு களைத் தூக்கி ஊதினார்கள். கத்திகளும் கேடயங்களும் ஆகாயத்தில் சுழன்றன. பகைவர்கள் வீழ்ந்து இறந்த காட்சி, காண்டா மிருகம் செடிகளையும், மரங்களையும் முறித்தெறிவதுபோல் தோன்றியது. வில் வீரர்கள் அஸந, நாக, திலக, புன்னாக மரங்கள் நிறைந்த காடுகளைப்போல் நின்றார்கள். வீரர் வில்லை வளைத்து அம்பை விடுத்த போது காட்டில் காற்று தடைப்பட்ட காலத்தில் உண்டா கும் பேரொலிபோல் பெரும் முழக்கம் உண்டாயிற்று. யானைகள் ஒன்றோடொன்று மோதியபோது தந்தங்கள் குத்தி மாட்டிக்கொண்டு நின்றன. குதிரைவீரர்களது வாள்கள், ஒன்றோடொன்று சிக்கிக் கொண்டு அவர் அசைய முடியாமல் நின்றார்கள். மற்றைய வீரர் ஒருவருடைய மயிரை ஒருவர் பிடித்திழுத்தனர். தண்டாயுதங்கள் ஒன்றோடொன்று மோதின. உதிரமும், யானைகளின் மத நீரும் தரையில் விழுந்து கலந்ததால், பூமி மஞ்சள் பூசினாற்

போலாயிற்று. கைகளும், தலைகளும், கால்களும், துடைகளும், பற்களும் வெட்டுண்டு உதிர்ந்தன. இருதாரத்தாரும் முன்னுக்கும் பின்னுக்கும் அலைந்தோடி விழுந்தார்கள். நதியா யோடும் இரத்தத்தின் மேல் பாலம்போல் நின்ற யானைகள் மீது உள்ள வீரர்கள் போராடும் காலத்தில், ஸ்ரீதேவி சந்தேகம் என்கிற ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு முன்னுக்கும் பின்னுக்கும் ஆடினாள். அடிபட்ட வீரர் உயிருடன் இருந்தாற்போல் கையில் வாளை ஏந்தியே, உதடு உதறி, கண் சிவந்து, நின்றார்கள். கிரீடங்களும், புஜபந்தங்களும் மாலைகளும், வளையல்களும் நசுங்கி,உடைந்து தவிடு பொடியாயின. கூஷ்மாண்டர்கள், அரக்கதர்கள், பிசாசங்கள் முதலியவர், இரத்தத்தைக் குடித்து, மதிமயங்கினார்கள். முரசையடிக்கும் போது தாளம் போட்டாற்போல் தலைவெட்டுண்ட முண்டங்கள் கூத்தாடின. விக்கிரமாதித்தியன் பல லட்சம் வீரருடன் வந்த அரசன், ஒண்டியாய்க் கந்தையைப் போர்த்திக்கொண்டு, போர்க்களத்திலிருந்து ஓடிச் சென்றான்.

பரமேச்சுரப் போத்தரையன் விக்கிரமாதித்தியனைப் பின் தொடர்ந்து அவனூரைக் கொள்ளை யடித்தான் போலும். ஏனெனில் அவன் மகன் இராஜஸிம்ஹன் தந்தையின் பட்டத்தி லொன்றாக ரணரஸிகபுரோமர்த்தனன் என்று ஒரு கல் வெட்டில் வெட்டி யிருக்கிறான்.

கூரம்சாசனம்

மேலே விவரமாய்ச் சொல்லியிருக்கும் பெருவளநல்லூர் யுத்தத்தின் வர்ணனை கூரம்சாசனத்திலிருந்து எடுத்

தெழுதினோம். இக்கூரம் சாசனந்தான் மகேந்திரப் போத்தரையன் குலத்தார் கொடுத்த முதல் தாமரப்பட்டயம் ஆகும். இது தமிழிலும் ஆரியத்திலும் கலந்து எழுதினது. இப்பட்டயத்தின் முதலிரண்டு சுலோகங்களில் பரமேச்வரனான கடவுளைத் தோத்திரஞ் செய்து பின்பு பல்லவர் புகழைப் பின்வருமாறு போற்றி யிருக்கிறது. "பல்லவ குலத்தார் பூமியைக் கஷ்டத்தினின்று காப்பாற்றட்டும். அக்குலத்தில் தருமத்திற்கு எதிர் நடையில் இருப்பவராவது, ஸோமயாகம் செய்யாதவராவது, யுத்த தண்டத்தை அநியாயமாய் எடுத்தவராவது, போலியறத்தினராவது, தானஞ் செய்யாதவராவது, நாவினால் பொய் சொன்னவராவது, போரில் பயந்தவராவது இருந்ததாகக் கேள்விப் பட்டதில்லை."

பின்பு இச்சாசனத்தில் பல்லவர் குல உற்பத்தியைப் பற்றி எழுதி யிருக்கிறது. பல ஆயிர வருஷங்களுக்கு முன் பல்லவரை நிலைகெட்ட க்ஷத்திரியர் என்று புராணங் களிலும் தரும சாஸ்திரங்களிலும் சொல்லி யிருக்கிறது. கச்சிப்பல்லவரது பிராகிருத சாசனங்களில் அசுவத்தாமாவுக்குப் பல்லவனென்று மகன் பிறந்தானென்றும், பல்லவன் பின்னோர் பல்லவரென்றும், பாரத்துவாஜ கோத்திரத்து க்ஷத்திரியரென்றும் கூறியுள்ளது. சில நூற்றாண்டுகளாய் பல்லவர் நிலை உயர, கூரம் சாசனத்தில் இவரை இன்னும் உயர்த்திப் பின் வருமாறு கூறினர். "பிரமனிடத்திலிருந்து அங்கிரஸ் தோன்றினார்; அவரிடமிருந்து பிருஹஸ்பதி; பின்பு பாரத்துவாஜர்; பின்பு \ துரோணர்; பின்பு அளவற்ற புகழுக்கு இருப்பிடமான அசுவத்தாமா; அவரிட

யிருந்து குலத்தின் துயரத்தை துரத்தி யடித்த பல்லவன்; அவனிடமிருந்து சகலபுவன வல்லவ பல்லவ குலம் பிறந்தது." பல்லவன் என்ற குலத்தின் பெயரை ஒரு மனிதன் பெயராக வைத்துச் சொன்னார்கள். இந்த வம்சாவளி கொஞ்சகாலத்தில் என்ன விநோதமாய் வளர்ந்ததோ அடுத்த சாசனங்களில் தெரியும்.

ஆட்சிமுறை.

அக்காலத்தில் எல்லா மனிதரும் ரதகஜதுரகபதாதியான நால்வகை நிலைப்படையை வைத்திருந்தார்கள். பரமேச்சுரப் போத்தரையனும் அவ்வாறே வைத்திருந்தான். அவனுடைய சொந்த யானைக்குப் பெயர் 'அரிவாரணம்'. அதாவது, பகைவரைக் கொல்வது; அதன் முதுகு மேல் தங்கத்தில் கல்லிழைத்த சேணம் போட்டிருந்தது. மலைமேல் அருவிகள் இடைவிடாது ஓடுவது போல் அதன் மதநீர் எப்போதும் ஓடும். அதன்பின் பல ஆயிரம் யானைகள் தொடரும். அரசன் குதிரைக்குப் பெயர் 'அதிசயம்', அதாவது, உயர்வுற்றது: அதற்கும் கல்லிழைத்த சேணமுண்டு. காதில் சாமரங்கள் கோத்திருந்த நூறாயிரம் குதிரைகள் அதன் பின் ஓடும்.

அரசாட்சி நடத்த அக்காலத்தில் நாட்டைக் கோட்டங்களாகவும், கோட்டத்தை ராஷ்டிரங்களாகவும், ராஷ்டிரத்தைக் கிராமங்களாகவும் பிரித்திருந்தார்கள். கூரம் என்கிற கிராமமானது ஊற்றுக் காட்டுக் கோட்டத்தில் நீர்வேளூர் என்ற மனனியவாந்தர ராஷ்டிரத்தில் இருந்தது. இந்தக் கூரம் சாசனத்தால் தானம் கொடுத்த கிராமமான

பரமேசுவர மங்கலமானது மணையூர்க் கோட்டத்தில் பன்மா என்று பெயர்கொண்ட மன்னியவாந்தர ராஷ்டிரத்தில் இருந்தது. மன்னியவாந்தர ராஷ்டிர மென்றால் மலைகள் நடுவிலிருக்கும் நாடு என்று பொருள்போலும்.

இதுவுமன்றி அக்காலத்தில் நிலத்தைக் குழிகளாகவும் பட்டிகளாகவும் அளந்து வகுத்தார்களென்று கூரம் சாசனத்தால் அறியலாம். குழி என்றால் 576 சதுர அடி கொண்டது. பட்டி என்றால் ஒரு ஆட்டு மந்தையை மறித்து வைக்கத் தக்க அளவுள்ள நிலம் போலும். பெரிய நிலத்தாக்குகளைப் பொன் கொடுத்து வாங்கினதாகவும் இச் சாசனத்தால் தெரிய வருகிறது.

பல்லவ அரசர் கோயில்களைக் கட்டி அவைகளுக்கும் அந்தணர்களுக்கும் மானியம் விட்டது தவிர, நன்செய் நிலங்களைச் செவ்வையாய்ச் சாகுபடி செய்ய வாய்க்கால்கள் வெட்டி, நிலத்துக்கு நீர்ப் பாய்ச்சலை விருத்தி செய்தார்கள். நாட்டுக்குப் பொதுவாக நாட்டுக்கால், ஊற்றுகால்கள் வெட்டி, நீர் பாய்ச்சிக் கொள்ள விதிகளும் செய்தார்கள். குளங்களையும் வெட்டினார்கள். மண்டபங்களில் பாரதம் முதலியன படித்து மக்களுக்குச் சொல்ல ஏற்பாடு செய்தார்கள். கோயில்களைப் பழுது பார்த்தல் (நவகர்மம்) நடக்கும் பொருட்டும் பொருளுதவி செய்தார்கள். கிராமங்களில் பொதுச் செலவுக்காக 'ஊராள்ச்சி, செக்கு, தறிகள், கூலம் (கடை) தரகு, கத்திக் காணம்' இவைகளிலிருந்து வந்த வரும்படியை வழங்கினார்கள்.

கூரம் சாசனத்திலிருந்து கோயிலுக்கு மானியம் விட்டு ஸ்தாபித்த தருமத்தைச் சரிவர நடத்துவதற்கு ஏற்பட்ட முறையையும் அறியலாம்:—

"ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டுக் கூரமும் ஏம்மணம் பாக்கமும் [சேர்ந்த கிராமங்களில்] விச்சாவிநீத பல்லவரசன் விலைக்காணம் கையில் கொடுத்து... ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம், தளி எடுப்பதற்கு ஒரு சுடத்தலைப் பாடகத்துள் சூளை மேட்டுப் பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுகூட ஐந்தேகால்பட்டி நிலமும் விற்றுக்கொண்டு, விச்சாவிநீத பல்லவ பரமேச்சுரகரம் எடுத்து ஏரி தோண்டி, இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனையும் மனைப் படப்பும் வகுத்து, இதுனுள் மிக்கநிலம் ஒழுக்கவிக்கு விளை நிலமாகவும், இந்நிலத்துக்கு [கீழ்பா] லெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும் தென்பாலெ[ல்லை ஊ]ர் புகு [வழியின் வடக்கு]ம், மேல்பா லெல்லை ஊர் புகு வழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக்காலு (க்) கே போன வ[ழி]யின் கிழக்கும், வடபாலெல்லை நாட்டுக்காலின் தெற்கும், இந்நான் கெல்லை யகத்து[ம்], தளி[யு]ம் ஏரியும் வழிபாடுசெய்வார்க்கு மனையும் மனைப்படப்பும் நீக்கி, மிக்க நிலமும் சூளை மேட்டுப்

வித்யா விநீதன் என்பது பரமேசுவரன் பட்டப்பெயர்.

காணம்=பொன்

தளி=கோயில்.

விச்சா=வித்யா; விச்சை=ஞானம்

நவகருமம்=புதுப்பித்தல்.

பட்டியும் ஒழுக் கவிக்கு விளை நிலமாகக் கொடுத்து, இத்தளி க்கு வேண்டுந் தேவகருமம் நவகருமஞ் செய்வதற்கும், இரு பதின்மர் சதுர்ப்பேதி களுக்கும் பிரமதேயங் கொடுப்பதற் கும், மணையிற் கோட்டத்துப் பன்மா நாட்டு பரமேச்சுர மங் கலத்துடன் அகப்பட்ட வளையில் சுற்று நிலம் அத்தனையும் இருபத்தைந்து பங்காய், இதனுள் மூன்று பங்கும் கூரத்துத் தளிக்கு [தே]வ [கரும] நவகருமஞ் [செய்]வதாகவும், கூரத்து மண்டக[த்து]க்குத் தண்ணீர்க்குந் தீக்கும் ஒரு பங்காகவும், இம்மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும், நின்ற இருபது பங்கும் இருபதின்மர் சதுர்ப் பேதிகளுக்கு பிரமதேயமாக கொடுத்தது. இவ்வூர் மனை யும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்கும் தறி[யும்] கூலமும் தரகும் கத்திக்காணமும் மற்றும் பொதுவினல் உள்ளதெல் லாம் இப்பங்கு இருபத்தைந்தின் வழியாலே பங்கிட்டுண் பாராகவும். இவ்வூர் பரமேச்சுரத் தடாகத்துக்கு பாலாற்று நின்றும் தோன்றின பெரும் பிடுகுகாலி[ன்]புழுதிப் பாடும் [தலை] வாயும் தலைப்பெழையும் ஊ [ற்] று [க்]காலும் தோண் [டின நில] மெல்லாம் பரமேச்சுர மங்கலத்து நி [ல] மாக."

இந்தச் சாசனத்தில் சில எழுத்துகளைத் தற்காலத்து முறையாக மாற்றியும், அழிந்துபோன எழுத்துகளை உத் தேசமாயும் எழுதியிருக்கிறோம். சாசனக் கடைசியில்

சதுர்ப்பேதி = சதுர்வேதி; நான்மறைகளையும் ஓதினவர்.
பிரமதேயம் = பிராம்மணர்களுக்குத் தானமாய்க் கொடுத்த நிலம்.
இச்சாசனத்திற்கண்ட சில மொழிகளுக்கும் தொடர்மொழிகளுக் கும் உரிய பொருள்கள் திட்டமாய் விளங்கவில்லை.

பத்து வரிகள் அதிகமாய் அழிந்துபோயின். அவைகளி லிருந்து தானம் வாங்கினவர்களில் ஒருவன் பெயர் அனந்த சிவாசாரியனென்றும், மற்றொருவன் பெயர் புல்லசர்மா வென்றும் தெரியவருகிறது.

கூரம் சாசனம் எழுதி ஏறக்குறைய 1250 ஆண்டுக ளாயின. ஆனாலும் அப்போதைய தமிழிற்கும், இப்போ தைய தமிழிற்கும் எள்ளளவேனும் வேற்றுமை இல்லவே யில்லை. ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகள் இத் தகையனவல்ல. 1250 வருஷங்களுக்கு முன்னிருந்த ஆங் கிலமானது இக்காலத்தில் கொஞ்சமேனும் புலப்படாது. ஐரோப்பிய மொழிகள் நாளடைவில் வேகமாய் மாறிக் கொண்டே யிருக்கும். தமிழோ அவ்வாறல்ல. கி. பி. 650-ல் வழங்கின தமிழினது இலக்கணமுறையாவது, பேச்சு நடையாவது இப்போது வரையில் மாறவில்லை. கொஞ்சம் வடமொழிச் சொற்களதிகமே தவிர வேறு எவ்வித மாறுபாடுங் கிடையாது.

மொழி நடை மாறாது போயினும் எழுத்து முறை கொஞ்சம் மாறியிருக்கிறது. அதைக் காட்டக் கூரம் சாச னத்திலிருந்து; சில வரிகளை சாசனத்திலிருக்கும் வகை யாகவே, தேய்ந்துபோன எழுத்துகளைத் தெரிந்த மட்டும் சேர்த்துக் காட்டுவோம்.

ஊ [ற்] றுக்காட்டுக் கொட்டத்து நீர்வெளூர் நாட்டுக் கூரமும் ஞும்மனம் பாக்குமு......[ஞங்கணத] [உ] விச்சா விநீதப் பல்லவரசன் விலெக்காணங் கெயிக்கொடுத்து [ச்சி]...செய்து ஆயிரத்தி [ரு] நூற் றுக் குழிப் படியால் விற்றுக்கொண்ட நிலம் த[ளி] எடுப்பதற்கு ஒடு

சுடக்கொண்ட நிலம் தலைப்பாடகத்துள் சூளமெட்டுப்பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்தி நிலத் தொடுங்கூட அயிங்கொகாப் பட்டி நிலமும் விற்றுகொண்டு விச்சாவிநீத பல்லவ பரமெச்சுரகரம் எடுத்து எரி தொண்டி இத்தளிவழிபாடுசெயிவார்க்கு இருக்கும் மனெயும் மனப்படப்பும் வகுத்து இதநுள் மிக்கநிலம் ஒழுக்கவிக்கு விளை நிலமா[க]வும் இன் நிலத்துக்கு. முன் பக்கத்தில் இதையே இக்காலத்திய நடையில் அச்சிட்டிருக்கிறது. அதனுடன் ஒத்துப் பார்த்தால் அப்போது 'ஏ', 'ஓ', 'ே', என்ற எழுத்துகளில்லையென்றும், 'ந', 'ன' இவைகளை வித்தியாசமில்லாமல் வழங்கினரென்றும் அறியலாம்.

சமய நிலை.

பௌத்தமும் சமணமும் குறைந்து, ஏறக்குறைய தற்காலத்திலிருப்பதுபோல கோயிற்பூசை, சமய நிலை முதலியவை ஏற்பட்டன என்று இந்தச் சாசனத்தால் தெரிய வருகிறது. ஏனென்றால் இச்சாசனத்தாலே கோயிலில் பூஜாஸ்தாபன, குஸுமம, கந்த, தூப, ஹவிருபஹாரபலி, சங்க, படாஹ முதலிய கிரியைகள் நடப்பதற்கும், உதகம், அக்கினி, பாரதம், ஆக்கியானம் இவைகளுக்காகவும், ஒரு கிராமத்தைக் கொடுத்தான். இந்தக்கிரியைகள் இப்போதும் கோயில்களில் நடக்கின்றன.

நரசிங்கன் பஞ்சபாண்டவரதங்களில் முக்கியமானதான தர்மராஜ ரதத்தில் இரண்டு அடுக்குதஸ்துகளைத்தான் முடித்திருந்தான். பரமேச்சுரன் மூன்றாவதையுங் கட்டி முடித்து அதன் மேல் அத்யந்தகாமபல்லவேச்வரக்ரு

ஹம்என்றும், 'ரணஜய' என்றும் வெட்டுவித்தான். 'அத்யந்த காமன்' 'ரணஜயன்', இவ்விரண்டும் பரமேச்சுரன் பட்டங்கள். இது தவிர இன்னும் அனேக பட்டங்கள் அவனுக்கு உண்டு. இவைகளுக்குச் சிவபரமாயும், அரசன் பரமாயும் பொருள் தருமாறு, சிலேடைகள் நிறைந்த 11 வடமொழி சுலோகங்களை அரசன் எழுதுவித்தான். மகாபலிபுரத்தில் கணேசாலயம் என்று ஒரு ஒருக்கல் கோயில் கட்டி, அதின் மேலும் இந்த சுலோகங்களை கல்வெட்டாக வெட்டுவித்தான். அவ்வைகளின் பொருளாவது:—

1. காமனை யழித்த சிவன் உற்பத்தி, ஸ்திதி, நாசத்துக்குக்காரணன், அகாரணன், அத்யந்தகாமனுக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பானாக.

2. மாயையற்றவன், சித்ரமாயன், குணபாஜனன், ஸ்வஸ்தன், நிருத்திரன், நிரீசன், பரமேச்வரன்.

3. கால் பெருவிரலால் கைலாசத்தையும் தசானனையும் பாதாளம் வரைக்கும் இறங்கும்படி அழுத்தின அஜனைத் (தலை மேல்) ஸ்ரீநிதி வகிக்கிறான்.

4. பக்தி நிறைந்திருக்கிற மனதில் பவனையும், கைமேல் பூமியை அழகிய நகை போலவும், தாங்கியிருக்கிற ஸ்ரீபரன் வெகு காலம் வெற்றியுறுவானாக.

5. சத்ரு மண்டலத்தை ஜயித்து, ரணஜயன் என்று பெயர்பெற்ற அத்யந்தகாம ராஜா இந்த சம்புக்கிருகத்தைக் கட்டுவித்தான்.

6. மரங்களைப்போல் ஸ்தாணு, (ஆனாலும்) அறிவுள்ளவன். கலையற்றவன், (ஆனால்) ஸோமன். பாகவதாத்மா; ஆகாச தேஹி; பயங்கரன் (பீமன்); மங்களகரன் (சிவன்); நன்மை செய்வோன் (சங்கரன்); காமனைக் கொன்றவன்; இத்தகைய சிவன் ஜயிப்பானாக.

7. தருணாங்குரன் ஜயிப்பானாக; அவன் ராஜராஜன்; ஆனாலும் (ராஜராஜனென்கிற குபேரனைப்போல்) அவலட்சணனல்ல; (சக்கரவர்த்தியாயும் ஜனார்த்தனனுயுமான விஷ்ணுவைப்போலல்லாமல்) சக்கரவர்த்தியானாலும் ஜனங்களை வருத்தாதவன்; (சந்திரன் தாரகைகளுக்கு அதிபதியானாலும் அஸ்வஸ்தனா யிருக்க), இவன் தாரகாதிபதி (அதாவது பாதுகாப்போருக்கு அரசன்) ஆனாலும் ஸ்வஸ்தன் (தன்னிலையிலுள்ளவன்)

8—9. ஸ்ரீமான் அத்யந்தகாமன் தன் விரோதிகளது கர்வத்தை யழித்தவன்; ஸ்ரீநிதி; காமராகன், ஹராராதனத்தில் ஆஸக்தியுடையவன்; இவனது அபிஷேகஜலமும், மணிகளாலான தாமரைகளும், நிறைந்த தடாகம்போன்ற விசாலமான தலைமேலே சங்கரன் எப்போதும் குடிகொண்டிருக்கிறான்.

10. அவன் சங்கரனை அடைய விரும்பி, இந்தப் பெரிய சிவமந்திரத்தைத் தன் பிரஜைகளின் காமங்கள் நிறைவேறக் கட்டுவித்தான்.

|| துன் மார்க்கத்தில் நடக்காமல் காப்பாற்றும் சிவன் எவனுடைய இருதயத்தில் இரானோ அவனுக்கு ஆறு முறை திக் (சாபம்). அத்யந்த காம பல்லவேஸ்வரக்ருஹம்.

மேலே பொருள் எழுதிய பதினொரு சுலோகங்கள் வெகு சமத்காரமாய்ப் பல அர்த்தங்கள் தருமாறு செய்தவை. அரசனையும், சிவனையும் ஒரே பெயரிட்டுச் சொல்லி யிருப்பதிலிருந்து அரசனது பலமும் சிவ பக்தியும் எவ்வளவு உயர்ந்திருந்ததென்று அறியலாம். சிவனைத் தலையில் தூக்கிக் கொண்டிருந்தானென்று சொன்னது உருத்திராட்சத்தாலான சிவலிங்கத்தைத் தலை முடியாக அணிந்திருந்தான் என்ற பொருள் கொண்டது.

ஒருக்கல் கோயில்களைத் தவிர, மகேந்திரனைப் போல் மலையைக் குடையாமலும், நரசிங்கனைப் போல் மலையைச் செதுக்காமலும், மலையை யுடைத்துக் கற்பாறைகளை ஒன்று மேல் ஒன்றை அடுக்கிப் பரமேச்சுரன் கோயில் கட்டுவித்தான். இதுதான் தென்னிந்தியாவில் கட்டுவித்த முதற் கற்கோயில். இந்தக் கோயிலைக் கூரம் என்னும் கிராமத்தில் கட்டுவித்தான். இதற்காகத் தான் கூரம் சாசனம் பிறந்தது. இக் கோயிலுக்குப் பெயர் வித்யாவிநீத பல்லவ பரமேச்வரகரம். வித்யாவிநீத பல்லவனென்பதும் இவனது பட்டப்பெயரில் ஒன்று. இக்கோயிலில் பகவான் பரமேஷ்டி பினுக பாணியைப் பிரதிஷ்டை செய்தான். இக்கோயில் சுவர்களை மாத்திரம் பாறைகளால் கட்டி, மேலே ஓடு போட்டு மூடினன். ஆகையால் கி. பி. 690-ல் முழுவதும் பாறைகளால் கட்டிடம் கட்டத்தென்னிந்தியாவில் ஆரம்பிக்கவில்லை என்றறிய வேண்டியது. இந்தக் கோயில் இடிந்து போய், அதனது கற்களைக் கொண்டு இப்போது ஒரு மண்டபம் கட்டி யிருக்கிறார்கள். அதைக் கூரத்தில் இன்னும் பார்க்கலாம்.

மறு மன்னர்கள்.

பரமேச்சுரப் போத்தரையன் கச்சியில் ஆண்டபோது, மதுரையிலாண்ட பாண்டவர் பலம் அதிகரித்து வந்தது. விக்கிரமாதித்தியன் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்துப் போக முயன்றபோது, பாண்டியன் மதுரையி லிருந்து புறப்பட்டு எதிர் வந்து மகாரத னென்று பட்டம் தரித்த சளுக்க விக்கிரமாதித்தியனது கடல் போன்ற தானையை மருதூரில் தேக்கி, மங்கலபுரத்தில் தோற்கடித்தான் என்று முன்னமே சொன்னோம். இப்பாண்டியனது பெயர் கோச்சடையன். வடமொழியில் ஜடிலவர்மா. பலபட்டங்களையுந் தரித்தவன். அவையாவன:— தென்னவன், வானவன், செம்பியன், சோழன், கர்னுடகன், கொங்கர் கோமான், இரணதீரன். இரணதீரனென்ற பெயர் இரணரஸிகனென விக்கிரமாதித்தியனை ஜயித்ததால் வந்தது. சோழன், கர்னுடகன், கொங்கர் கோமான் என்ற பட்டங்களும் தரித்ததால் சோணுடு, கன்னட நாடு, கொங்கநாடு, இவைகளில் இவனது செல்வாக்கு பரவி, இந்நாட்டார் இவனுக்கு ஒருவாறு கீழ்ப்படிந்திருந்தார் என்று நினைக்கலாம். பாண்டியர் செல்வாக்கு கிரமமாய் உயர உயர, பல்லவரது செல்வாக்கு இந்நாடுகளில் மங்கத்தொடங்கிற்று என்றும் ஊகிக்கலாம்.

பரமேச்சுரன் கச்சியிலும் கோச்சடையன் மதுரையிலும் ஆண்டுகொண்டிருக்குங்கால், இவரிருவர் இராஜ்ஜியங்களிற்கு நடுவில் காவிரிக்குத் தென்பாலிருக்கும் நாட்டில் முத்தரைய குலமன்னர்கள் தோன்றினர்கள். இக்குல முதல் மன்னன் பெயர் குவாவன் மாறன். அவனுக்கு மாறன் என்ற பட்டமிருந்ததாலும், மாறன் என்பது பாண்

டியர் பலருக்குப் பெயராதலாலும் முத்தரையர் குலம் பாண்டியர்குலத்தின் கிளையாகும். முதலில் பாண்டிய நாட்டில் முத்துக்குளிக்கும் கடலோரங்களில் சிற்றரையாயிருந்ததால் முத்தரையரென்று பெயர் வந்தது போலும். பின்பு 7-ம் நூற்றூண்டில் பாண்டியரை விட்டுப் பிரிந்து பல்லவருடன் சேர்ந்து, அவர் ஆதரவைக் கொண்டு தனியாட்சி பெற்று அரசர் ஆனூர். இவர் மீனவர் என்ற பட்டம் பெற்றவரென்றும், மதுரை அரசிரிலிருந்து வேறுய் வந்தவரென்றும் புதுக்கோட்டைக் கருகிலுள்ள நார்த்தாமலையில் உள்ள ஒரு கல் வெட்டில் சொல்லியிருக்கிறது. அவ்வாறு வேறுபட்ட பின்பு பல்லவருடன் சேர்ந்ததால் குவாவன் மாறன் பல்லவர் பட்டங்களையும் தரித்து, பெரும் பிடுகு முத்தரையன் என்ற பெயரையும் வைத்துக்கொண்டான். அக்காலத்தில் சிற்றரசர் தங்களுக்கு உதவி செய்யும் பேரரசர் பட்டங்களை தரிப்பது வழக்கம். பெரும் பிடுகு என்பது பரமேச்சுரன் பட்டங்களில்ஒன்று; அவன் பரமேச்வர தடாகம் என்று ஒரு ஏரி வெட்டுவித்தபோது அதற்குப்பாலாற்றிலிருந்து நீர்பாய பெரும்பிடுகுகால் என்று ஒரு வாய்க்கால் வெட்டுவித்தான். அந்தப் பெரும்பிடுகு என்ற பெயரைக் குவாவன் மாறன் முத்தரையனும் வைத்துக் கொண்டான். அவனது தலை நகரங்கள் தஞ்சாவூரும் அதற்கடுத்த வல்லமும். இக்குவாவன் மாறன் மகன் இளங்கோவதிரையன் பரமேச்சுரன்.

முத்தரையர் ஆண்ட நாட்டுக்கும் பாண்டிநாட்டுக்கும் நடுவில் கோனுடு என்று ஒருநாடு உண்டு. அது இப்போது புதுக்கோட்டை சீமையின் ஒரு பகுதி. அக்காலத்

திலோ இருக்கு வேளிர் என்பவர் அதை ஆண்டார். இவரது தலை நகரம் கொடும்பை என்ற கொடும்பாளூர். கொடும்பை உறையூரிலிருந்து மதுரை போகும் வழியிலுள்ளது என்று சிலப்பதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. கச்சியிலிருந்து மதுரை போகும் மார்க்கத்தில் முறையே திருப்பாதிரிப் புலியூர், குடந்தை, தஞ்சை, உறையூர், கொடும்பை உள்ளன. இக்கொடும்பையில் தொன்று தொட்டு வேளிர் சிற்றரசாய் ஆண்டார்கள்.

ராஜஸிம்ஹன்.

(கி. பி. 690—710.)

பரமேச்வரன் மகன் ராஜஸிம்ஹன். இவனொரு பல்லவ ராஜன் காலத்தில்தான் யாதொரு சண்டையும் நடக்கவில்லை. கோயில் கட்டுவதைத்தவிர இவன் செய்தது வேறொன்றும் இல்லை. ஒரு பல்லவ சாசனத்தில் இவனைப் பின்வருமாறுபுகழ்ந்திருக்கிறது. "பரமேச்வரனது* அங்கங்கள் எல்லாம் ஒன்றுகூடி மனிதனுக அவதரித்ததால் உண்டானவன். தேக பலத்தாலும், இவன் பெயர் உலகெல்லாம் பரவியதாலும், நரஸிம்ஹ அவதாரத்தின் தன்மையைப் பெற்றவன். இந்த க்ஷத்திரியசூடாமணியானவன் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் ஐச்வரியம் கொடுத்துத் தன்கீழிருக்கும் பூதேவியைச் சதுர்வேதம் கற்ற பிராமணர்கள் அனுப

*சிலேடை (1) கடவுள் (2) பரமேச்சுரப் போத்தரையன்.

விக்குமாறு செய்தான்." மற்றோர் சாசனத்தில் இவன் பரம மாஹேச்வரனென்று சொல்லியிருக்கிறது. மற்றொன்றில் மகேந்திரனுக்குச் சமானமானவனென்றும் காஞ்சியில் பிராமணர் கடிகை (கல்லூரி)யை மறுபடியும் ஏற்படுத்தினனென்றும், கைலாசத்தை யொத்த கைலாதநாத சுவாமி கோயிலென்கிற சந்திரசேகராலயத்தைக் கட்டினனென்றும் கூறியிருக்கிறது.

பல்லவ அரசருக்கு ஈச்வர பக்தி, பிராமண ஆதரணை அதிகரிக்க, அதிகரிக்க, பிராமணர்களும் அரசர்களை உயர்த்திவைத்து, அவர் வம்சாவளிகளை விஸ்தரித்து எழுதத் தொடங்கினர். கைலாசநாத சுவாமி கோயிலின் வெளிப்புறத்திலுள்ள ஒரு கல்வெட்டில் அவ்வம்சாவளியைப் பின்வருமாறு எழுதியிருக்கிறது:—பிரமனுக்குப்பின் அங்கிரசர். அவர் பின் சக்கரன் புரோகிதனும் தேவர்க்குக் குருவுமான பிரகஸ்பதி; அவர்பின் பயங்கரமான பலமும் மூன்றுலகிலும் கவரவம்பொருந்திய சம்யு; பின்பு முனிவர் தலைவனும் பல்லவ குலத்துக்கு மூலமுமான பாரத்துவாசர்; இவர்பின் பாண்டவரும் கௌரவரும் நன்குமதித்த ஆசாரியனான துரோணர்; பின்பு அரசர் நிலையையும் கர்வத்தையும் அழித்த அசுவத்தாமா; பின்பு அவன் மகன் பல்லவன்; மனுவைப் போல் குல முதல்வன்; தைரியமும் விஜயமுங்கொண்டு, உலகெல்லாம் ஆண்ட (பல்லவ) அரச குலத்தை ஸ்தாபித்தவன். இம்மன்னவர் பிரமண்ணியர், கலியுகத்தின் மதத்தை அடக்கினவர், சத்தியவாக்கினர், கம்பீரமுடையவர், திரிவருக்கமும் தெரிந்தவர், மூத்தவர்க்குச் சேவை செய்வதில் ஊக்கமுடையவர், காமன் முதலிய உட்பகையாரை அடக்

கினவர், அஸ்திரவித்தியை அறிந்தவர், திடமுள்ளவர், நயவிநயமடைந்தவர்.

இதற்குப்பின் இக்கல்வெட்டில் ராஜஸிம்ஹனைப் பல சிலேடைகளுடன் பின்வருமாறு துதி செய்திருக்கிறது. அந்தணர்க்கு அளவற்ற தானம் அளித்ததால் அவரது நன்றியறிவை அளவுக்கு அடங்காதவிதமாய் காட்டிப்போற்றினர் போலும். இத்துதியில் தடித்த எழுத்தில் அச்சிட்ட மொழிகள் இருபொருளுடையவை:—புராரியான சிவனுக்குக் குகன் பிறந்தாற்போல, பல்லவ குலமன்னன் உக்கிர தண்டனுக்கு **ஸுப்ரஹ்மண்யனும், குமாரனுமான** அத்யந்த காமனென்னும் பல்லவ அரசன் பிறந்தான். இவன் தன் சக்தியினால் பகைவர் கூட்டத்தைத் தமித்தவன். **பதுநயன்,** சைவநெறியில் நடந்து மலத்தை எல்லாம் தீர்த்தவன். காமனைப்போல் பெண்டிரைக் களிப்புறச் செய்தவன். வாஸவனைப்போல் அவர்களைப் பரிபாலித்தவன். மூன்று வேதங்களையும் வழிபடுவோன். மாதவனைப்போல் முனிவர் பிராமணர், தேவர் இவரது பகைவர் இருதயத்தைக் கிழித்தவன். வித்தகனைப்போல் நல்லவர்க்குத் தனம் ஈந்து களிப்பித்தவன். கிருதயுகத்தில் தேவரைக்கண்டவன். கண்வர் முதலியவரால் ஸ்வீகரிக்கப்பட்டவன். துஷ்யந்தர் முதலான அர

ஸுப்ரஹ்மண்யன் = (1) குமாரக்கடவுள் (2) நல்ல பிராம்மணன்
குமாரன் = (1) முருகன் (2) மகன்
பதுநயன் = (1) கடவுள் (2) அரசன்
மலத்தை = மும்மலங்களை ஆணவ, மாயீய, கார்ம மலங்களை.
வித்தகனை = குபேரனை

சர் ஆகாயவாணியைக் கேட்டாராஞல் ஆச்சரியமில்லை; நற்குணம் பறந்தோடிப்போன கலியுகத்தில் அந்தவாணியை ஸ்ரீபரன் கேட்டது வியப்பைத்தருவதே. நயவிக்கிரமங்களால் மதம்பற்றின அரசரைத் தாழ்த்தி, முகம் கடுத்ததால் மாத்திரமே அவரை மதிமயங்கச்செய்யும் ரணஜயன் வெகு காலம் ஜயமுற்றிருப்பாஞக. அவன் புருஷோத்தமனைப் போல், பாவக்கடலில் மூழ்கிக் கலியென்கிற பயங்கரமான மகரமானது மக்களை விழுங்கும்போது அவரைக் காப்பாற்றிஞன். இவ்வரசன் நயத்தாலும் வீரத்தாலும் உலகை வென்று பகைவரைக் கொன்று, அரசரை அழித்து உலகத்தை அநுபவித்து, இந்த விசாலமான ஹரமந்திரத்தைக் கட்டிஞன். இது அவன் புகழைப்போலும் அரனது நகையைப்போலும் இருக்கிறது. சர்ப்பராஜனது சுழன்ற உடலை ஆபரணமாய்க் கொண்ட தேவ அசுரகணங்கள் போற்றும் சங்கரன் இந்த ராஜஸிம்ஹ பல்லவேச்வராலயத்தில் வெகு காலம் குடிகொண்டிருக்கட்டும். விருஷபத்தை அடையாளமாயுள்ளவன் எப்போதும் இந்த ராஜஸிம்ஹேச்வரக் கோயிலில் சன்னிதானம் கொடுப்பாஞக; இதன் சிகரம் மேகத்தைத் தடவுகிறது; இது கைலாசத்தின் அழகைப் பறிக்கிறது; இதைக்கட்டினவன் ராஜாதிராஜா, நாற்புறத்திலும் அதிகாரம் செலுத்தினவன், விரோதிகளென்னும் யானைக்கூட்டங்களுக்கு ராஜஸிம்ஹம், ராஜஸிம்ஹன், ரணஜயன், ஸ்ரீபரன், சித்ரகார்முகன், ஏகவீரன், சிவசூடாமணி (இவ்வகை 250 பட்டங்களுக்குக் குறையாமல் இக்கோயிலைச்சுற்றி வெட்டியிருக்கிறது), இவன் வெகுகாலம் உலகத்தைப் பாதுகாக்கட்டும்.



கைலாசநாத சுவாமி கோயில்

மேலே இருப்பதில் ஆகாயவாணியை இவ்வரசன் கேட்டதாகச் சொல்லியிருக்கிறது. இது என்னவென்று பெரியபுராணத்தில் பூசலார் நாயனார் கதையைப் படித்தால் தெரியும். இந்தச் சிவனடியார் சிவபக்தி மிகுந்தவர். சிவனுக்குத் தான் ஒரு கோயில் கட்டவேண்டுமென்று அவாக்கொண்டிருந்தார்; எனினும் ஏழைத்தனத்தால் கட்டமுடியவில்லை. ஆகையால் கோயிலைத் தினந்தோறும் கட்டுவதாக மனதில் தியானம்செய்து கொண்டிருந்தார். இப்படியிருக்கக் கச்சியில் ராஜஸிம்ஹன் கைலாதநாதஸ்வாமி கோயிலை கல்லால் கட்டிமுடித்துக் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய முயற்சி செய்து, நாள்வைத்துச் சித்தமாயிருந்தான். அப்போது பெரியபுராணத்தில் சொல்லியபடி,

காடவர்கோமான் கச்சிக் கற்றளி யெடுத்துமுற்ற [வான்
மாடெலாஞ் சிவனுக்காக பெருஞ்செல்வம் வகுத்தல் செய்
நாடமா லறியாதாரைத் தாபிக்கும் அன்னாள் முன்னாள்
ஏடலர் கொன்றைவேய்ந்தார் இரவிடைக் கனவிலெய்தி,

கற்றளி = கற்கோயில். மாடெல்லாம் = பக்கமெல்லாம்

வகுத்தல் = ஏற்படுத்தல், மால் = விஷ்ணு

தாபிக்கும் = ஸ்தாபிக்கும், நிலைநாட்டும். ஏடலர் = இதழ்கள் விரிந்த

வேய்ந்தார் = அணிந்தவர்

நின்றவூர்ப் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்துசெய்த
நன்றுநீடாலயத்து நாளைநாம் புகுவோம் நீயிங்கு
ஒன்றிய செயலைநாளை ஒழிந்துபின் கொள்வாயென்று
கொன்றைவார் சடையார் தொண்டர்கோயில் கொண்டரு
[ளப்போந்தார்.

அவ்வாறே இராஜஸிம்ஹன் செய்தான். பெரியபுராணக் கதையும், கல்வெட்டும் தனியே இக்கதையைக் குறிப்பதால், இவ்வாறு வியப்பான செய்தி நிகழ்ந்ததென்பதற்குத் தடையில்லை.

இந்த கோயிலைத்தவிர வேறு கோயில்களையும் ராஜஸிம்ஹன் கட்டினதாகத் தெரியவருகிறது. கடன்மல்லையென்னும் மகாபலிபுரத்தில் கடலருகில் ஒரு கோயிலுண்டு. இதில் 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராஜராஜசோழனென்பான் மூன்று திருப்பதிகள் உண்டென்றும், அவைகளுக்கு முறையே, க்ஷத்திரிய பல்லவேசுவரம், ராஜஸிம்ம பல்லவேசுவரம், பள்ளிகொண்டருளிய தேவராலயம் என்று பெயர்கள் என்றும், கல்வெட்டில் எழுதிவைத்திருக்கிறான். நிகழ்காலத்தில் இக் கோயில்கள் பாழாய்ப்போயின. இந்த க்ஷேத்திரங்களைக் குறிக்க இரண்டு பலிபீடங்களும் ஒரு கற்கொடிமரமும் உண்டு. கடலை நோக்கியிருக்கும் ஒரு சிவலிங்கம் உண்டு. அது க்ஷத்திரிய பல்லவேசுவரக்கோயிலி

நெடிதுநாள் = நீண்டநாள், ஒன்றிய = பொருந்திய
போந்தார் = போனார்

L. 3/1887. Rajaraja I, 26th year.

விருந்தது. ஜலசயனம் என்று மற்ருெர் பெயருண்டு. இதற்கு மேற்கில் உள்ள பள்ளிகொண்ட விஷ்ணுவிக்கிர கம், தலசயனமென்ற பள்ளிகொண்ட தேவராலயத்தினது போலும். முற்காலத்தில் சிவன்கோயில், விஷ்ணுகோயில் கள் மிக அருகில் இருப்பது வழக்கம்.

இந்த விஷ்ணுகோயிலைத் திருமங்கை ஆழ்வார்,

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனெடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானர்க் கிடம்விசும்பில்
கணங்களியங்கும் மல்லைக்கடன் மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்களந்தன் மடநெஞ்சே.

என்று பாடியிருக்கிருர். மூன்றும் கோயிலைச் சேர்ந்தது பலிபீடந் தான் இருக்கிறது. அதைச் சுற்றி அத்யந்த காமன், அபராஜிதன், ஏகவீரன், சிவ சூடாமணி, சண்ட சனி, பேரரசர் தாக்காத வலியுடையோன், காமனைப்போல் எல்லோரையுங் களிப்புறச் செய்பவன், அப்ரதிமன், அவனி பூஷணன் என்று இருப்பதால் அதுதான் ராஜஸிம்ஹ பல்லவேச்வரம் நின்றவிடம். இக்கோயில்கள் ராஜஸிம்ஹன் கட்டினவை.

பிணங்களிடுகாடு = சுடுகாடு
பிஞ்ஞகன் = சிவபெருமான்
விசும்பில் = ஆகாயத்தில்
கணங்கள் = கூட்டங்கள்
சயனம் = படுக்கை

இவை தவிர, மகாபலிபுரத்துக்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள சாளுவன் குப்பத்தில் அதிரண சண்டேச்வரம் என்ற குகைக் கோயில் உண்டு. அதிரண சண்டன் என்பது ராஜஸிம்ஹன் விருது. ஆகையால் இந்தக் குகைக் கோயிலை இவன் தான் கட்டியிருக்கலாம். இக்குகை மேல் பரமேச்வரனது மகாபலிபுரக்கல் வெட்டின் பிரதியையும் வெட்டி யிருக்கிறது. ஆதலால் சாளுவன் குப்பம் குகைக் கோயிலைச் செய்வித்தவன் ராஜஸிம்ஹனே, அவன் தகப்பனே என்று நிச்சயமாய்ச் சொல்வது மிகக் கஷ்டமாகிறது.

இந்தக் கோயில்களன்றி விழுப்புரத்துக்கு 16 மைலிலுள்ள பானைமலையில் ராஜஸிம்ஹன் கட்டின கோயிலொன்றுண்டு. அன்றியும் காஞ்சிபுரத்திலுள்ள ஐராவதேச்வரன் கோயிலும், கைலாசநாத சுவாமி கோயிலுக் கருகில் ராஜஸிம்ஹன் மனைவி ரங்கபதாகை கட்டின நித்தியவினிதேச்வரம் என்னும் சிறு கோயிலும் மகாபலிபுரத்தில் இவர் மகன் மகேந்திரன் கட்டின முகுந்த நாயனார் கோயிலும் இக்காலத்தியவை.

ராஜஸிம்ஹன் கோயில்களெல்லாம் தூரத்திலிருந்து பார்த்தால் தர்மராஜ ரதத்தைப் போலவே தோன்றும். ஆனால் அதைப்போல் குன்றைக் கோயிலுருவமாய்ச் செதுக்கியதல்ல; கற்பாறைகளைக் கொண்டு கட்டியவை. வரவரச் சிறுத்து உயரும் அடுக்குகளுடையவை. கர்ப்பக்கிருகம் வேறு, கோபுரம் வேறு என்று இராது; நான்கு பக்கங்களிலும் புரைகளில் சிவ லிங்கமிருக்கும்; திருவாட்சிகள் ஒற்றை



இராஜசிம்மன் சிங்கத் தூண்கள்

வளைவு உள்ளவை. கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்த சிவலிங்கங்கள் 8, அல்லது 16 பட்டைகள் தீர்ந்தவை. சில பக்கங்களில் காடி வெட்டியவை. சிவலிங்கத்துக்குப் பின்சுவர் மேல் ஸோமஸ்கந்த விக்கிரகம் இருக்கும். இவை யெல்லாவற்றையும்விட முக்கியமான அடையாளம் என்னவென்றால், தூண்களுக்கு அடியில் பின்கால்மீது எழுந்து நிற்கும் சிங்கங்கள் வெட்டியிருக்கும். சில சிங்கங்கள் சுண்ணாம்பினால் கட்டியிருக்கும். இவ்வகைச் சிங்கங்கள் தூண்களினின்று தறித்துப் போனவை சோழநாட்டில் பல ஊர்களில் உண்டு. அங்கெல்லாம் ராஜஸிம்ஹன் கோயில்கள் கட்டி, அவைகள் சிதைந்து போயின போலும்.

சமய நிலை.

திருஞான சம்பந்தர்க்குப்பின் ஒரு நூற்றாண்டு வரைக்கும் சிவனடியாரெவரும் தேவாரம் பாடினவரில்லை. ஆயினும் சைவநெறி தொண்டைமண்டலத்தில் மிகப்பரவியது. பல்லவச் சிற்றரசர் இருவர் சிவபக்தி மிகுந்து சிவனுக்குத் தொண்டு செய்தவராதலால் அவரை அறுபத்துமூவரில் சேர்த்தார். அவர்கள் ஐயடிகள் காடவர்கோனயனாரும், கழல் சிங்க நாயனாரும். இவர் சரித்திரத்தைப் பெரியபுராணத்தில் படிக்கலாம். இவருள் ஐயடிகள் சில பாசுரங்கள் பாடினார். அவைகளைப் பதினோராம் திருமுறையில் சேர்த்திருக்கிறது.

வைஷ்ணவம் இக்காலத்தில் சோழமண்டலத்தில் பரவியது. ஸ்ரீரங்கத்தில் திருப்பாணாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் விஷ்ணுவைப் புகழ்ந்து பாசுரங்கள் பாடினார்கள். இவருள் திருப்பாணாழ்வார் பாணர்; இழிந்த

குலத்தவர். ஆகையால் கோயிலுக்குத் தூரமாய் நின்றே கடவுளைத் தொழுதார். தன் காலைத் திருவரங்கத்தில் வைக்கக்கூடாதென்று அவர் நினைத்ததால், அவர் அரங்க நாதனைக் கண்ணுறக் காண முடியாமலிருந்தது. கடைசியில் இவர் பக்தியால் ஆச்சரியமுற்ற லோகசாரங்க முனி இவரைத் தோளில் ஏற்றிக்கொண்டு அரங்கமாநகருளானைச் சேவிக்கச் செய்வித்தார். திருப்பாணாழ்வார் பாடினது ஒரே பதிகம். அதன் கடைப்பாசுரம்,

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தவனை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே.

தொண்டரடிப்பொடியாழ்வாரது மற்றொரு பெயர் விப்ரநாராயணன். இவர் நந்தவனம் போட்டுப் பெருமாளுக்குப் பூ, திருத்துழாய் வளர்த்துச் சமர்ப்பித்து வந்தார். இவர் இயற்றிய நூல்கள், திருமாலையும், திருப்பள்ளியெழுச்சியும். இந்நூல்களின் நடையைக்காட்ட இரண்டு பாசுரங்களை எழுதுவோம்.

கொண்டல் = மேகம், கோவலன் = இடையன், கவர்ந்தவனை: கொள்ளைகொண்டவனை, அண்டர்கோன் = தேவநாயகன்.

பச்சைமா மலைபோல்மேனி பவழவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே.

வண்டினம் முரலும்சோலை மயிலினம் ஆலும்சோலை
கொண்டல் மீதணவும் குயிலினம் கூவும்சோலை
அண்டர்கோ னமரும்சோலை அணிதிரு வரங்கமென்னா
மிண்டர்பாய்ந் துண்ணும்சோற்றை விலக்கிநாய்க்கிடுமினீரே

இவை இரண்டும் திருமாலையிலுள்ளவை.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந்தீண்டி
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலி லலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

இவை திருப்பள்ளியெழுச்சியிலிருந்தெடுத்தவை. அந்நூல் முழுவதும் இயற்கை வர்ணனை நிறைந்திருக்கும்.

அச்சுதன் = அழிவில்லாதவன், அமரர் = தேவர், ஆயர் = இடையர்.
முரலும் = சப்திக்கும், ஆலும் = ஆடும், அணவும் = தடவும்
மிண்டர் = புறச்சமயத்தவர்.

களிற்றீட்டம் = ஆண்யானைக் கூட்டம், பிடி = பெண்யானை.

பரமேச்சுரப்போத்தரையன்.

(கி. பி. 710—717.)

இவன் ராஜஸிம்ஹன் மகன். சிலகாலமே யாண்டான். முதலாழ்வார்கள் மூவரும் கச்சிமாநகரிலுள்ள விண்ணகரத் திருப்பதியை அதிகமாய்ப் பாடினார்கள். விண்ணகரம் என்றால் விஷ்ணுக்கிருஹம். இக்கோயிலைத் திருமங்கையாழ்வார் பரமேச்சுர விண்ணகரமென்று பாடினார். ஆதலால் பழங்கோயிலை இப் பரமேச்வரன் புதுப்பித்துக் கட்டினன்போலும். இக்கோயிலுக்கு இப்போது வைகுண்டநாதப் பெருமாள் கோவில் என்று பெயர்.

பரமேச்சுரப் போத்தரையன் பிள்ளையில்லாமல் இறந்தான். அவனுடன் நரஸிம்ஹவிஷ்ணுவின் குலமும் முடிவுற்றது.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.